


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 01 - ஏப்ரல் 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

**இதழ் வடிவமைப்பு**

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00, ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1
படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................ 04

2
வளர்ந்த நாடுகளில்
தாய்மொழி அறிவியல் கல்வி
டாக்டர். சு.நரேந்திரன்........................................ 09

3
அடிப்படை மாற்றத்திற்கான
தலைமைத்துவம்
க.பழனித்துரை................................................ 17

4
சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன்
(1934 - 2021)
அ.கா.பெருமாள்.............................................. 21

5
சர்வாதிகாரப் பெற்றோர்கள்
மருத்துவர். ப.வைத்திலிங்கம்............................. 25

6
மார்க்சின் நுணுக்கமான பார்வைகளை
நாம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை
அ.மார்க்ஸ்...................................................... 29

7
அழகியல் என்னும் அணுகுமுறை
முனைவர் சி.ஜஸ்டின் செல்வராஜ்.......................... 43

8
சுயராஜ்யமும் இந்து ராஜ்யமும்
கமலாலயன்.................................................... 49

9
தகனம் புதினத்தில் நாட்டுப்புறக் கூறுகள்
ப.இந்திரா...................................................... 57

10
அந்திமகாலத்தில் வெளிச்சக்கீற்றுகள்
சுப்ரபாரதிமணியன்........................................... 61

11
பழையவுரையிலிருந்து புதியவுரை:
உ.வே.சா. எனும் அரும்பதவுரைகாரர்
ம.லோகேஸ்வரன்............................................. 63

12
தொல்லியல் துறைஞர்
ச.சுபாஷ் சந்திரபோஸ்....................................... 68

ஆ.சிவசுப்பிரமணியன்



# தென்கலை வைணவர்கள்

**காதரின் யங்: (2021) கிளர்ந்தெழுந்த மாற்றங்கள்**

(தமிழ்நாட்டின் சமயம், சாதி, அரசியலில் பிராமணர் அல்லாத தென்கலை வைணவர்களின் பங்களிப்பு).

*katherine Young (2021)Turbulent Transformations. Non Brahmin srivaisnavas on Religion, Caste And Politics in Tamil Nadu. Orient Black Swan, Hyderabad. 500 029*

மகாவிஷ்ணுவைத் தம் இஷ்டதெய்வமாக வணங்குபவர்கள் வைணவர்கள் எனப்படுகின்றனர். அவர்களது தத்துவங்கள், கோட்பாடுகள், வழிபாட்டுமுறைகள் ஆகியனவற்றை உள்ளடக்கிய முறைமையானது வைணவம் எனப்படுகின்றது.

*(கு.சேதுராமன். வெ.வேதாசலம்)*

இந்தியத் தெய்வங்கள் வரலாற்றில் அறுவகைத் தெய்வங்கள் தொன்மையான தெய்வங்களாக இடம் பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் இத்தெய்வங்களை மையமாகக் கொண்டு ஆறு சமய நெறிகள் உருவாயின. இச் சமய நெறிகளை சண்மதம் (அறுவகைச் சமயம்) என்றழைப்பது மரபாகும். இவற்றுள் ஒன்றே வைணவம். விஷ்ணு, நாராயணன், கிருஷ்ணன், இராமன், என்ற பெயர்களில் அழைக்கப்படும் தெய்வமே இச் சமயத்தின் தெய்வமாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் விஷ்ணு வழிபாடு என்பது தொன்மையான ஒன்று. ஆனால் திருமால் என்ற பெயராலேயே சங்க இலக்கியங்களில் விஷ்ணு அழைக்கப்பட்டுள்ளார். ஐந்திணைகளாகத் தமிழகத்தின் நிலப்பரப்பைப் பகுத்திருந்த பண்டைத் தமிழர்கள் ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியான

கடவுளர்களையும் கொண்டிருந்தார்கள். இவ்வகையில் முல்லைத் திணைக்குரிய கடவுளாகத் திருமால் சுட்டப்படுள்ளார். 'சங்கப் பாக்களில் மிகுதியாகக் குறிக்கப் பெறும் தெய்வமாகத் திருமால் திகழ்கிறார்' (கந்தசாமி.சோ.ந.2016:181).வேதசமயப் பரவலால் திருமால் வழிபாடு விஷ்ணு வழிபாட்டுடன் இணைக்கப்பட்டது என்ற கருத்தும் உண்டு.

சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் திருமாலைக் குறித்த பதிவுகளில் வடமொழிப் புராணச் செய்திகளின் தாக்கம் தெளிவாகக் காணப்படுகிறது. இது பண்பாடு ஏற்றலின் வெளிப்பாடு என்று கூறவும் இடமுள்ளது. பல்லவர் ஆட்சியிலும் பிற்காலச் சோழர்களின் ஆட்சியிலும் வைணவம் பரவியிருந்ததைக் கல்வெட்டுக்கள் செப்பேடுகள் துணையால் அறியமுடிகிறது. இவ்விரு சமயங்களும் தம்முள் முரண்பட்டு நின்றமை குறித்த இலக்கிய வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. மற்றொரு பக்கம் இவ்விரு சமயங்களும் வேத மறுப்புச் சமயங்களை சமணம் பௌத்தம் இரண்டுடனும் பகைமை பாராட்டியது குறித்து இவ்விரு சமயங்களின் இலக்கியங்களில் பதிவுகள் உள்ளன. இச் செய்திகளின் துணையால் சைவம் வைணவம் என்ற இரண்டும் இன்று இருப்பது போல் இந்து என்ற பொது அடையாளத்துக்குள் அடங்காது தனித்தனி சமயங்களாகவே வழக்கில் இருந்துள்ளன என்பதை உணர முடிகிறது.

**வைணவ சமயப்பிரிவுகள்:**

கி.பி.13,14 ஆவது நூற்றாண்டளவில் வைணவ நெறியில் தென்கலை, வடகலை என்ற பெயர்களில் இரண்டு பிரிவுகள் உருவாயின. இவற்றுள் தென்கலை என்பது தமிழில் தோன்றிய நாலாயிர திவ்வியபிரபந்தத்தை பிரமாணமாகக் கொண்டது. வடகலை என்பது வடமொழியில் எழுதப்பட்ட நூல்களைப் பிரமாணமாகக் கொண்டது. திருமாலை முழுமுதற் கடவுளாக இரு பிரிவினரும் ஏற்றுக் கொண்டாலும் உயிர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு குறித்தும் சமயச்சடங்குகளிலும் இரு பிரிவினருக்கும் இடையே வேறுபாடு உண்டு. வைணவர்களின் சமயச் சின்னமான ஊர்த்துவ புண்டரா (திருநாமம்) நெற்றியில் இடுவதில் கூட இரு பிரிவினரும் தனித்துவத்தைக் கடைப் பிடிக்கின்றனர். வடகலையார் ஆங்கில எழுத்தான U வடிவில் திருமண் இட, தென்கலையார் ஆங்கில எழுத்தான. V வடிவில் வெண்ணிறத் திருமண் இட்டு நடுவில் சிவப்பு வண்ணக்கோடு ஒன்றையும் இடுகின்றனர். வெண்மை நிறக்கோடுகள் இரண்டும் திருமாலின் இரு திருப்பாதங்களின் குறியீடாகவும் வெண்ணிறமானது தூய்மையின் குறியீடாகவும் அமைகின்றன. இரு கோடுகளுக்கும் நடுவில் உள்ள செந்நிறக் கோடானது இலக்குமியையும் அவரது அருளையும் நினைவூட்டுவது. வைணவப் புண்ணியத் தலங்களில் ஒன்றான காஞ்சிபுரத்தை வடகலையார் சிறப்புக்குரியதாகக் கருத தென்கலையார் திருஅரங்கத்தைக் கருதுகின்றனர்.


வைணவத்தில் பிராமணர், பிராமணர் அல்லாதவர் என்ற இரு சாதிப் பிரிவினர்களும் உள்ளனர். இவர்களுள் பிராமணர் அல்லாதார் மிகுதியாக இடம் பெற்ற பிரிவாகத் தென்கலை வைணவம் உள்ளது.

**நூலாசிரியரும் நூலும்:**

இந்நூலாசிரியரான காதரின் யங் தகைசால் பேராசிரியராக பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள விக்டோரியாவில் வாழ்கிறார்.



தமிழ்நாட்டில் சைவசமயத்தைப் பின்பற்றி வாழும் பிராமணர் அல்லாத சைவர்களைக் குறித்து அதிக அளவில் எழுதப்பட்டுள்ளது என்றும் அந்த அளவுக்கு வைணவர்களாக வாழும் பிராமணர் அல்லாதார் குறித்து எழுதப்படவில்லை என்றும் இந்நூலாசிரியர் கருதுகிறார். இதன் அடிப்படையில் வைணவத்தின் உட்பிரிவாக விளங்கும் தென்கலைப் பிரிவு சார்ந்த பிராமணர் அல்லாதாரை மையமாக்கொண்டு இந்நூலைத் தாம் எழுதியுள்ளதாகவும் தென்கலை வைணவமானது தனக்கு மிகவும் அறிமுகமான ஆய்வுக்களம் என்றும் நூலின் அறிமுக உரையில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்நூலுக்காக 2006க்கும் 2016க்கும் இடைப்பட்ட கால அளவில் இருபதுக்கும் மேற்பட்டோரிடம் நிகழ்த்திய நேர்காணல்களைப் பயன்படுத்தியுள்ளதகவும் குறிப்பிட்டுள்ளார். இந் நேர்காணல்கள் சென்னை அதைச்




சுற்றியுள்ள பகுதிகள், ஸ்ரீபெரும்புதூர், புதுச்சேரி, தஞ்சாவூர், திருச்சி என்ற இடங்களில் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவ்வகையில் வாய்மொழி வரலாற்றுச் சான்றுகள் இந்நூலுக்கான முக்கிய தரவுகளாக அமைந்துள்ளன. எனினும் இவை போதுமானவையல்ல என்பது ஆசிரியரின் கருத்தாகும். இது தொடர்பாக அவர் கூறும் செய்திகள் கள ஆய்வு செய்வோர் அவசியம் அறிந்து கொள்ளவேண்டியவை.

இவர் குறிப்பிடும் மற்றொரு முக்கிய செய்தி தகவலாளர்களில் பெரும்பான்மையோர் ஆண்கள் என்பதாகும். இதற்குக் காரணம் ஸ்ரீவைஷ்ணவத்தின் சமயத் தலைமை என்பது ஆண்களை மையமாகக் கொண்டிருப்பதுதான். ஆச்சார்யார்கள், ஜீயர்கள், அர்ச்சகர்கள், சபைகளின் தலைவர்கள், நூல்/இதழ் வெளியிட்டாளர்கள்,கட்டளை அதிகாரிகள் என்போர் எல்லாம் ஆண்களாகவே உள்ளதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது அடுத்து வரும் இனக்குழு வரைவியல் நூலானது வைஷ்ணவ சமயப் பெண்களின் சமயம், சமயத் தலைமைத்துவம் குறித்த பார்வை, சாதி, அரசியல் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்நூலில் மதம், சாதி, அரசியல் என்ற மூன்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதாகவும் இவை மூன்றும் ஆண்களை மையமாகக் கொண்டிருப்பதால் அவர்களைக் குறித்தே அதிகளவில் பதிவிட நேரிட்டுள்ளதாகவும் விளக்கமளித்துள்ளார்.

சுருங்கக் கூறின் தமது ஆய்வானது சமயம், சாதி, அரசியல், என்பனவற்றிற்கு இடையிலான உறவைக் குறித்தது என்றாலும் ஆண்களின் சமயத்தலைமையை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். வைணவர் அல்லாதோர் இந்நூலை இடர்ப்பாடின்றிப் புரிந்து கொள்ள ஏதுவாக வைணவத்தின் தலைமைக் கடவுள், புனித நூல்கள், புண்ணியத் தலங்கள், சமயத் தலைமை, தொடக்க நிலைச்சடங்கு *(Initiation)*வழிபாடு, கோயில்கள், வைணவத்தில் பெண்கள் என்பன குறித்த சுருக்கமான அறிமுகம் இடம் பெற்றுள்ளது. வைணவம் அறியாதோர் வைணவம் குறித்து அறிந்து கொள்ளவும் இந்நூல் வாசிப்பில் இடர்ப்பாடு அடையாதிருக்கவும் இது உதவுகிறது.

**வைணவராதல்:**

வைணவம் குறித்த தம் நூலின் அடிப்படைச் செய்திகளின் அறிமுகத்தை அடுத்து வட இந்திய வைணவர்களின் இடப் பெயர்ச்சி குறித்து நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். வட இந்தியாவில் நாராயணர், விஷ்ணு, கிருஷ்ணர் என்ற பெயர்களில் உள்ள கடவுளர்களை வழிபாடு செய்து வந்தவர்கள் மகாபாரத காலத்தில் சாதியப் படிநிலையில் பெற்றிருந்த கீழான இடத்தின் அடிப்படையில் அவமரியாதைக்கும் கண்ணியக்குறைவுக்கும் சமூக வாழ்வில் ஆளாகிவந்தனர். இதை எதிர்க்கும் வழிமுறையாகத் தெற்கு நோக்கி இடம் பெயர்ந்தனர். இதற்கான தடயங்கள் வைணவத்தின் புனித நூலான திவ்விய பிரபந்தம் நூலில் காணப்படுகின்றன.

திவ்விய பிரபந்தம் ஒரு தொகுப்பு நூல். இதில் இடம் பெற்றுள்ள பாசுரங்களைப் பாடிய ஆழ்வார்கள் பல்வேறு சாதிகளைச் சேரந்தவர்கள். முதல் நான்கு ஆழ்வார்களான பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களின் சாதி, தொழில் தொடர்பான அடையாளங்களை அவர்களின் பாசுரங்கள் வழிக் கண்டறிய முடியவில்லை. திருமங்கை ஆழ்வார் குறுநிலமன்னர். குலசேகர ஆழ்வாரையும் இவருடன் சேர்த்துக் கொள்ளலாம். நம்மாழ்வார், நில உடைமையாளராகவோ நிர்வாகியாக இருக்கலாம். தொண்டரடிப் பொடியாழ்வாரும் பெரியாழ்வாரும் மதுரகவிஆழ்வாரும் பிராமணர்கள். ஆண்டாள் பெரியாழ்வாரின் மகள். வைணவ மரபு நூல்களில்

திருப்பாணாழ்வார் நான்கு வருணத்திற்கு வெளியில் இருக்கும் ஐந்தாம் வருணத்தைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்படுகிறர். ஆனால் அவரது செய்யுள்களில் இதை உறுதிப்படுத்தும் வகையில் சான்றுகள் எவையும் இல்லை என்பது இந்நூலாசிரியரின் கருத்தாக உள்ளது.

இவ்வாறு அனைத்துச் சாதியினரையும் உள்ளிழுத்துக்கொண்டு அவர்களுக்கு வீடுபேறு பெறும் வாய்ப்பை வைணவம் வழங்கியது என்பது நூலாசிரியரின் கருத்தாக உள்ளது. மேலும் வைணவத்தால் உள்வாங்கப்படுபவர்கள் பொருளியல் பயன் பெற்றார்கள் என்றும் சமூக நல்லிணக்கத்தையும் மதிப்பையும் வழங்கியதுடன் வேளாண் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து செல்வதையும் தடுத்து நிறுத்தியது என்றும் குறிப்பிடுகிறார்.

அவ்வப்போது மன்னர்கள் வைணவக் கோயில்களின் புரவலர்களாகவும் விளங்கியுள்ளார்கள். இதனால் வைணவக் கோயில்கள் கட்டிடக்கலை நுட்பத்துடனும் தொலைவில் இருந்து காணும்போதே தெரியும் கோபுரங்களுடனும் உருப்பெற்றன. சாகுபடிக்கான நிலங்களையும் கொடையாகப் பெற்றன.

பன்னிரு ஆழ்வார்களும் அவர்களுக்குப் பின் வந்தோரும் வட இந்தியாவில் நிலவிய வருண அமைப்புடன் கூடிய சமூகத்தை அறிந்திருந்தனர். தர்மசாஸ்திரங்களிலும் வருணப்பாகுபாடு இடம் பெற்றுள்ளது. வருணப்பாகுபாடு குறித்த பிராமணர்களின் ஆதரவு நிலைப்பாடை ஆழ்வார்கள் கடிந்துரைத்துள்ளனர். பிராமணர்கள் உயர்குடியினர் ஆதரவுப்போக்கு அருகிய நிலையில் தொடக்க காலக் கோயில்களில் வணிகர்கள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் போன்றோரே புரவலர்களாக இருந்துள்ளனர்.



வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் அதிகாரத்தன்மை கொண்ட பிராமணர்கள் தாமாகவும் உள்ளூர் ஆட்சியாளர்களின் அழைப்பினாலும் சலுகை பெற்ற பிரிவினராகக் கோயில் நிர்வாகத்தில் இடம் பெறலானார்கள். இது வட இந்திய முறையிலான மேலாதிக்கத்தை அறிமுகம் செய்தது. இது வைணவர் என்ற பொதுஅடையாளத்திற்குள் இயங்கிவந்தோரின் சமய வாழ்வில் பிணக்கை ஏற்படுத்தியது

சாதியைக் கைவிடாமல் அதே நேரத்தில் வைணவர் என்ற ஒரு பொதுவான அடையாளம் கொண்ட சமூகக்குழுவை உருவாக்கிய ஆழ்வார்களைப் பின்பற்றிய வைணவர்கள் ஒரு தரப்பிலும் வருண அமைப்பை ஆதரித்த வைணவர்கள் ஒரு தரப்பிலும் என எதிர் எதிராக நின்றனர். இவ்விரு தரப்பினரும் வைணவ சமயம் சார்ந்த நூல்களை முன்வைத்து வெளிப்படுத்திய கருத்துக்கள் தொடர்பான எடுத்துக் காட்டுகள் சிலவற்றை நூலாசிரியர் தந்துள்ளார். சான்றாக,

**குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து**
**நலந்தானில்லாத சண்டாளர் களாகினும்**
**வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு**
**ஆள்என்றுள் கலந்தார் அடியார்தம் அடியார்**
**எம் அடிகளே**

என்ற நம்மாழ்வாரின் பாசுரக் கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இது போல் வடகலை வைணவப் பெரியோர்களது கருத்துக்களையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

**சமய அரசியல்**

காலனிய ஆட்சிக் காலத்தில் சைவ வைணவ சமயங்கள் (இந்து) பெருமளவில் அரசியலாக்கப்பட்டது என்று கூறும் நூலாசிரியர் அதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கருதுகிறார்:

- கிறித்தவ மிஷனரிகளின் எதிர்மறை விமர்சனங்கள்
- திராவிட மொழிகள், பண்பாடு குறித்த புதிய கருத்துக்களின் உருவாக்கம்
- தலித்துகள் ஒன்று திரளுதல்
- சைவ வைணவர்களுக்கிடையிலான போட்டி
- பிராமணர், பிராமணர் அல்லாதாரிடையிலான உறவில் உருவான பிணக்கு
- காலனிய அரசின் செயல்பாடுகள் (சமயச்சார்பின்மை, பிராமணர் அல்லாத நிலக்கிழார்களுடனான கூட்டு)

சாதிய முரண்பாடென்பது பிராமணர், பிராமணர் அல்லாதாரின் மேட்டிமைப் பிரிவினருக்கு இடையே மட்டுமின்றி பிராமணர் அல்லாதாரின் மேட்டிமையோருக்கும் அடித்தளமக்கள் பிரிவினருக்கும் இடையேயும் உருவாகி வளர்ந்தது.

பிராமணர் அல்லதாத தென்கலை வைணவர்களில் குறிப்பிடத்தக்க சில ஆளுமைகளை அறிமுகம் செய்யும் நூலாசிரியர் பெரியாரை முதலாவதாக அறிமுகம் செய்துள்ளார். இது ஒரு வகையில் வேடிக்கையான ஒன்றுதான். தென்கலை வைணவக் குடும்பத்தில் பிறந்தவராய் இருந்தாலும் அவர் ஓர் இறைமறுப்பாளராகவே வாழ்ந்து மறைந்தார்.

**பெரியார்:**

அவரைப் பற்றிய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பை எழுதியுள்ளதுடன் சமய எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு, புராண எதிர்ப்பு, பட்டியல் சாதியினரின் கோவில் நுழைவுக்கான கோயில் நுழைவுச் சட்டங்கள் உருவானதில் அவரது பங்களிப்பு, நீதிக்கட்சியுடனான அவரது உறவு என்பன குறித்தும் மேலோட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பெரியாரின் இச் செயல்படுகள் நிகழ்வதற்கான சமூக வரலாற்றுச் சூழல் அன்று நிலவியதை அழுத்தமாகக் குறிப்பிடத் தவறிவிட்டார்.

**பாகவத (பக்தர்கள், அடியார்கள்) ஆளுமைகள்:**

பிராமணர் அல்லாத ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்களை அடியார்களாக அறிவித்துக் கொள்வது வழக்கம். காலனிய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த பிராமணர் அல்லாத தென்கலை வைணவ அடியார்களில் சிலர் வைணவசமய இறையியலைக் கற்றுத் தேர்ந்திருந்தனர். இவர்கள் வைணவ இறையியலை விளக்கியும் திவ்விய பிரபந்தத்தின் செய்யுள்களுக்குப் பொருள்கூறியும் சொற்பொழிவுகள் ஆற்றிவந்தனர். அத்துடன் ஒருவரை வைணவராக்கும் சமாஸ்ஸிராயணம் என்ற தொடக்க நிலைச் சடங்கினையும் (Initiation Ritual) நடத்தி வைத்தனர். இச் சடங்கை நடத்திவைப்பவர்களாக பிராமண ஆசாரியர்களும் ஜீயர்களுமே இருந்துள்ள நிலையில் பிராமணர் அல்லாத பாகவதர்கள் இதை மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

நூலின் இரண்டாவது இயலில் காலனிய ஆட்சியில் வாழ்ந்த பிராமணர் அல்லாத இப்பாகவதர்கள் எழுவரைக் குறித்த சில செய்திகளைச் சேகரித்து ஆவணப்படுத்தி உள்ளார். இவர்களின் பெயர்கள் வருமாறு:

(1) இராமானுஜ நாவலர். (2) புவனகிரி ஏகாங்கி சுவாமிகள் (3) நாராயண தாசர். (4) கோயில் ஏகாங்கி சுவாமிகள் (5) கிருஷ்ண பிள்ளை (6) அப்பாவு முதலியார் (7) பி.ஆர்.புருஷோத்தம நாயுடு. இவர்களது பணிகள் குறித்து அவர் எழுதியுள்ள செய்திகளின் சுருக்கம் வருமாறு.

**இராமானுஜ நாவலர் (1829-1921)**

இவரைப் புதுவை நாவலர் என்றும் குறிப்பிடுவர். பலுஜாநயுடு குடும்பத்தில் பதுச்சேரிக்கு வடக்கிலுள்ள எப்பாக்கம் என்ற ஊரில் பிறந்த இவர் திருக்கோயிலூரில் உள்ள எம்பெருமானார் மடத்தின் ஜீயர் வைணவர்களுக்குரிய தொடக்கநிலைச் சடங்கை இவருக்கு நடத்திவைத்தார். பின்னர் திருநெல்வேலி நாங்குநேரி வானமாமலை மடத்தின் பட்டர்பிரான் ஜீயரிடம் தமிழ், வடமொழி தெலுங்கு ஆகிய மொழிகளையும் ஸ்ரீவைஷ்ணவத்தின் தத்துவங்களையும் கற்றறிந்தார். அவரது அறிவாற்றலையும் கவிஞர், சொற்பொழிவாளர், தத்துவவாதி என்று திகழ்ந்தமையையும் பாராட்டி வைணவ அறிஞர்கள் நாவலர் என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினர்.


பத்மோத்ரா புராணம் என்ற வடமொழிப் புராணத்தை 4,123 செய்யுட்களாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவரது பக்தரான யாதவர் சமூகத்தைச் சேர்ந்த பொன்னுரங்கம் பிள்ளை என்பவரின் வேண்டுகோளை ஏற்று புதுச்சேரி சென்று ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயில் தெருவில் தம் இறுதிக்காலம் வரை வாழ்ந்துள்ளார். செல்வகேசவராய முதலியார் தொகுத்து வெளியிட்ட தமிழ் இலக்கிய அகராதியில் இவர் எழுதிய நூல்களின் பட்டியல் இடம் பெற்றுள்ளது. ஓவிய வடிவிலான இவரது உருவம் வணக்கத்திற்குரியதாக இருந்துள்ளது. அவரது உருவச் சிலைகளும் நிறுவப்பட்டு வழிபடப் படுவதாகக் கூறும் நூலாசிரியர் அவரது உருவச்சிலை ஒன்றின் ஒளிப்படத்தையும் நூலில் இடம் பெறச் செய்துள்ளார். எப்பாக்கத்தில் உள்ள அவரது படிமத்திற்கு கார்த்திகை ஓரை அன்று வன்னியர், யாதவர் சமூகத்தினர் நூற்றுக் கணக்கில் திரண்டு வருகிறார்கள். வழிபாட்டை நடத்திவைக்கும் பணியைச் செய்பவர் பிராமணர் அல்லாதவர் என்று நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இராமானுஜ நாவலரை மையமாக் கொண்டு மீவியற்கைத் தன்மை கொண்ட கதைகள் உருப்பெற்றுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார். சைவர்களுடன் அவர் முரண்பட்டு நின்று வழக்குத் தொடுத்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

இது போன்று ஏனைய அறுவர் குறித்த செய்திகள் நூலில் இடம் பெற்றுள்ளன. அத்துடன் ஆய்வு நோக்கில் சில அவதானிப்புகளையும் இச் செய்திகளை அடுத்துத் தந்துள்ளார். இவை குறித்து அடுத்த இதழில் காண்போம்.

*தொடரும்*

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்

கட்டுரை




# வளர்ந்த நாடுகளில் தாய்மொழி அறிவியல் கல்வி

டாக்டர் சு. நரேந்திரன்

> “ஒரு நாடு வெளிநாடுகளில் வேலை தேடுவதை அடிப்படைத் திட்டமாக வைத்து தனது கல்விக் கொள்கையையோ, பொருளாதாரக் கொள்கையையோ வகுத்தால் அந்நாடு முன்னேற்றத்தின் முதல்படியில் கூட ஏற முடியாது.”

காந்தி, பாரதியார், தாகூர் ஆகியோரைப் பற்றி அறிவோம். எல்லாரினும் மேலாக இராமேசுவரத்து தமிழரும் மேனாள் இந்தியக் குடியரசுத் தலைவருமான அப்துல் கலாம் பற்றி அண்மைக் காலத்திலேனும் நன்றாக அறியலாம். இதுபோல் சந்திரயான் புகழ் மயில்சாமி அண்ணாதுரையையும் நாம் அறிவோம். இவர்கள் எல்லாரும் தாய்மொழி வழிக்கல்வியை வற்புறுத்தியவர்கள். அப்துல் கலாமும், மயில்சாமி அண்ணாதுரையும் தமிழ்வழிப் படித்து உயர்ந்தவர்கள். அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழிவழிக் கல்வியே சிறந்தது என்பதே இவர்கள் அனைவரும் எடுத்துரைக்கும் கருத்தாகும். சொல்லால் மட்டுமின்றிச் செயலாலும் காட்டியவர்கள். இவர்கள் கருத்துக்கு நாம் இன்றும் சரியாகக் காது கொடுக்கவில்லை. காது கொடுக்க நினைத்தபொழுதும் பல சறுக்குகள். இதனால் நமது கல்வியும், மனப்பாடக் கல்வியாகி ஒரு வட்டத்துக்குள் நின்றுவிட்டது. இந்திய அரசு அமைத்த பல்வேறு குழுக்கள் தாய்மொழி வழிக்கல்வியின் நன்மை குறித்து கருத்துரைத்துள்ளன. இது இன்றும் எதிர்பார்த்தபடி செயல் வடிவு பெறவில்லை. இதற்குக் காரணம் எல்லாம் அறிந்தவர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் மேட்டுக்குடி மக்களின் மனப்பாங்குதான். தங்களின் வளமான வாழ்வுக்குப் போட்டியாக மற்றவர்கள் வந்துவிடக்கூடாது என்பதில் உள்ள அவர்களின் தன்னலம்தான் இந்தியக் கல்விச் சூழலையே கெடுத்துக் கொண்டிருக்கிறது.

தாய்மொழி வழிக்கல்விக்கு முதன்மை கொடுத்து தேவையான நடவடிக்கைகளை அரசுதான் மேற்கொள்ள வேண்டும். இது நம்முடைய குரல் மட்டுமில்லை. வளர்ந்த நாடுகளின் குரல்.

### உலக நாடுகளில் பயிற்று மொழி

1971-ஆம் ஆண்டு பிரெஞ்சின் தலைமை அமைச்சர் சேச்சு சாபால்டெல்யி விடுத்த கட்டளை பிரெஞ்சு மொழிக்குக் கிடைத்த பெரிய அரவணைப்பாகும். பிரெஞ்சில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களில் பட்டியல் உருவாக்கி, அவற்றுக்கேற்ற தனி பிரெஞ்சுச் சொற்களை உருவாக்குங்கள் என்பதுதான் அவர் இட்ட கட்டளை. இதன் அடிப்படையில் பிரெஞ்சுக்கழகம் தோன்றியது, இது ஒரு பேரகராதியை வெளியிட்டது, இது மொழி ஆதிக்கத்திற்குப் பேருதவி புரிந்தது. இக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் பிரெஞ்சுக்கழகத்தின் பார்வைக்கு வந்த பின்னரே வெளியிடப்பட்டன, பிரெஞ்சு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலப்பதைத் தடுப்பதற்காக 1975இல் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

பாரிசில் 'அதலப்' என்ற தனியார் அமைப்பு மூலம் பிரெஞ்சு மொழியில் கலப்பு நடப்பது தடுக்கப்படுகிறது. இவ்வமைப்பு பிரெஞ்சு மொழியில் எவரேனும் பிறமொழிச் சொல்லைக் கலந்தால் அவர் மீது வழக்குத் தொடுக்கும். அவரைத் தண்டம் கட்டச் செய்யும். இதன் விளைவாகக் கலந்து வழங்கும் 'பிரெஞ்சு பிரான்லெய்சு' ஒழிக்கப்படும் என்றாயிற்று. இது போலவே பிரெஞ்சு செய்தித் துறையின் சட்டத்தால் (19-12-1976) பிற மொழிச் சொற்களைக் கலப்படம் செய்தால் அவருக்கு 100 பிராங்குகள் தண்டம் விதிக்கப்படும், இது பிரெஞ்சு மொழி வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவியிருக்கக் கூடும் என்பது நமக்குச் சொல்லாமலே புரியும்.

### இந்தோனிசியா

இந்தோனிசியாவில் இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு நூற்றுக்கு மேற்பட்ட மொழி வழக்குகள், வட்டார மொழி வழக்குகள் இருந்தன. அந்த வழக்குகள் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்திப் பொது நிலை வழக்கு ஒன்றை உருவாக்கி அதற்குப் 'பாஷா இந்தோனிசியா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இம்மொழியே பாடமொழியாக இருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டது. இதில் ஒரு முக்கியமான செய்தி என்னவெனில் மொழி சார்பான இம்முடிவில் கட்சி வேறுபாடு காரணமாக எந்தக் குழப்பமும் வர இடம் தரக்கூடாது என்று அவர்களுக்குள் ஒரு மரபு தழுவிய ஒப்பந்தம் நிலவுகிறது. இவ்வாணைக்குப் பிறகு அரசே நூல் எழுதும் சிலரை நியமித்தது. அவர்களுக்கு உதவியாக மொழி வல்லுநர்களையும் உதவிக்கு அழைத்து அறிவியல் மொழியை வளர்த்தனர். அதன் பிறகு, 'பாஷா இந்தோனிசியாவிலேதான்' பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை நூல்கள் எல்லாம் வெளிவருகின்றன.

இந்தோனிசியாவைப் போல் மலேசியாவும் நமக்குப் பின்னர் உரிமை பெற்ற நாடு. இங்கும் பல்கலைக் கழகக் கல்வி வரை அவர்கள் தாய்மொழியிலேயே நடைபெறச் செய்துள்ளனர்.

### இஸ்ரேல்

இஸ்ரேல் 1948இல் உருவாக்கப்பட்டது. உலகின் பல பகுதிகளிலிருந்து மக்கள் இஸ்ரேலில் குடியேறியதால் பல மொழி பேசப்பட்டது. யூதர்களின் சமய மொழி, 'ஈப்ரு'. இதை மக்கள் அனைருவரும் ஏற்றுக்கொண்டனர். 1953இல், 'ஈப்ரு', மொழிக் கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலம் ஈப்ரு மொழி, மக்கள் மொழியாக்கப்பட்டது. இதற்கு உறுதுணை அவர்களின் மொழி மேம்பாட்டுத் திட்டம். இன்று அகர வரிசைப் பாடத்திலிருந்து முதுமுனைவர் பட்ட மேற்படிப்பிற்குரிய ஆராய்ச்சிக் கல்வி வரை அதனைப் பயின்றும், பயிற்றுவித்தும் பயன்படுத்திக் கொண்டு, மீட்சியெய்தி இன்று மேனிலையில் நின்று மிளிருகின்றார்கள்.

இதுபோன்றே மாலி, கினியா ஆகியன புதிதாக விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள். இவ்விரு நாடுகளின் தாய்மொழி பேச்சு மொழியாக மட்டும் இருந்தது. இவர்கள் மொழிக்கு இதுநாள் வரை எழுத்தே கிடையாது. தற்பொழுது எழுத்து வடிவத்தை உருவாக்கிக் கல்வி கற்பிக்கத் தொடங்கி விட்டனர். தங்களை ஆண்ட ஆங்கில மொழியை உதறிவிட்டு அனைத்து நிலைகளிலும் தாய்மொழியையே பயன்படுத்துவதில் மிக உறுதியாக உள்ளார்கள். (சு.நரேந்திரன், 2004:158).

"மொழி என்பது மனித குல மெய்யறிவின் பொக்கிஷங்களைப் பாதுகாத்து மரபு வழியாக அளித்துச் செழுமைப் படுத்தவல்ல மதிப்பு மிக்க சாதனம்" (லெனின்). "மொழி என்பது தொடர்பு சாதனம் மட்டுமன்று, அது ஒரு தேசிய இனத்தின் அடையாளம் என்றே கூறலாம்."

### இலங்கை

இலங்கையில் இனவாத கிளர்ச்சி இருந்த வரை தமிழ்வழிக் கல்வி பல்கலைப் படிப்புவரை உச்ச நிலையில் இருந்தது. இச்செய்தியைக் கோ.சந்திரசேகரன் நூலான 'இலங்கையில் தமிழ்க்கல்வி' எனும் நூல் வழிப் பார்ப்போம்.

உலகிலேயே பாடசாலை மட்டத்தில் அனைத்துத் தமிழ் மாணவருக்கும், தமிழ்மொழி வழியில் கல்வி வழங்கப்படுவது இலங்கையில் மட்டுமே. அத்துடன் பல்கலைக்கழக நிலையில் கடந்த நான்கு தசாப்தங்களாகக் கலைத்துறைப் பாடங்கள் (பொருளியல், புவியியல், அரசியல், சமூகவியல், கல்வியியல், தத்துவம்) தமிழ்வழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. காலப்போக்கில் பல்கலைக்கழக நிலையில் சட்டம், வர்த்தகவியல், முகாமைத்துவம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தமிழ்வழிக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. *(இலங்கையில் தமிழ்க் கல்வி - கோ.சந்திரசேகரன், ப.40)*

**பாடசாலைக் கல்வி**

இன்று *(1995)* நாட்டில் காணப்படும் *10,191* பாடசாலைகளில், *2,130* பாடசாலைகள் தமிழ்மொழிவழியில் கற்பிக்கும் தமிழ்ப்பாடசாலைகள். இவற்றைவிட பெரும்பாலும் தமிழ் வழியில் கற்பிக்கும் 739 முஸ்லீம் பாடசாலைகளும் உண்டு. *(கல்வி உயர்கல்வி அமைச்சு, 1995).*

இலங்கைப் பாடசாலை முறையில் சேர்ந்து பயிலும் 42 லட்சம் மாணவர்களில் ஏறத்தாழ 25 சதவீதம் பேர் (9,86,000 பேர்) தமிழ்மொழி வழிக்கல்வி பெறுபவர்களாவர். இவர்களில் முஸ்லீம் மாணவர்களும் அடங்குவர்,

தமிழ்மொழிக்கல்வி பெறும் மாணவர்களில் ஏறத்தாழ 53 சதவீதம் பேர் (5,22,482 பேர்) ஆரம்பக்கல்வி நிலையில் (தரம் 1/5) பயின்று வருகின்றனர். இடைநிலை வகுப்புகளில் (தரம் 12-13) 38,760 பேரும் பயிலுகின்றனர். உயர் இடைநிலையில் பயிலும் தமிழ்மொழிவழி மாணவர்களில் மூன்றில் இரு பங்கினர் வடகிழக்கு மாகாணங்களில் பயிலுகின்றனர். ஏனைய மூன்றில் ஒரு பங்கினர் ஏனைய 7 மாகாணங்களில் பரந்து காணப்படுகின்றனர்.

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில் கலை, வர்த்தகவியல், சட்டம் முகாமைத்துவம், கல்வியியல் போன்ற துறைகளில் தமிழ் வழிக் கல்வியே பெரும்பாலும் நடைபெறுகின்றது, சில பல்கலைக்கழகங்களில் / விஞ்ஞானப் பட்ட நெறிகளும் தமிழ் வழியில் கற்பிக்கப்படுகின்றன, மேற்கூறிய துறைகளில் தமிழ்மொழியிலேயே பட்டப்படிப்பின் படிப்புப் பயிற்சி நடத்தப்படுகின்றன.

**ஆசிரியர் கல்வி**

ஆசிரியர் கல்வியையும், பயிற்சியையும் பொறுத்தவரையில் ஆரம்பநிலை, இடைநிலைக் கல்வி நிலைகளுக்கான பயிற்சி நெறிகள் தமிழ் மொழியிலேயே நடத்தப்படுகின்றன, பல்கலைக்கழகங்களும் தேசியக் கல்வி நிறுவனமும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், தேசியக் கல்வியியல் கல்லூரிகளும், தமிழ் வழியில் பயிற்சி நெறிகளை நடத்துகின்றன. கல்வித் தத்துவம், உளவியல் மதிப்பீட்டு முறைகள், கல்வி முறைகளின் வளர்ச்சி, கல்வி நிர்வாகம், கல்வித் திட்டமிடல், கற்பித்தல் முறைகள், பாட ஏற்பாட்டுத் தத்துவங்கள், கல்விச் சமூகவியல், கல்விப் பொருளியல் போன்ற பாடத் துறைகள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழில் கற்பிக்கப்படுகின்றன.

**ஆசிரியர் கல்விப் பயிற்சியைத் தமிழில் வழங்கும் நிறுவனங்கள்**

*1. பல்கலைக்கழகங்கள்:*

கொழும்புப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்(தற்போது கல்வியியல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.)
திறந்தவெளிப் பல்கலைக்கழகம்

*2. தேசியக் கல்வி நிறுவனம்:*

*3. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்:*

எத்தென்ஸ்சைட்
கோப்பாய்
மட்டக்களப்பு
அட்டாளைச்சேனை
அலுத்கம

*4. தேசியக் கல்வியியல் கல்லூரிகள்:*

பத்தன
மட்டக்களப்பு
வவுனியா
அட்டாளைச்சேனை
யாழ்ப்பாணம்

யாழ் பல்கலைக்கழகம் தவிர்த்த ஏனைய தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் கல்வியியல் உயர்பட்டப் பயிற்சி நெறிகளைத்(M.Ed.,/M. Phil.,) தமிழ் வழியில் நடத்த முன்வருவதில்லை என்ற முக்கிய முறைப்பாடொன்று உண்டு. தென்னிலங்கையில் இப்பயிற்சி நெறிகளைப் பயிலக்கூடிய தகுதியுடையவர்கள் ஏராளமாக இருந்த போதிலும் அதற்கான வாய்ப்புகளைத் தென்னிந்தியப் பல்கலைக்கழகங்கள் வழங்கத் தவறிவிட்டன. ஆயினும் அண்மையில் திறந்தவெளிப் பல்கலைக்கழகமும், தேசியக் கல்வி நிறுவனமும், தமிழ்வழியில் முதுமாணி (M.Ed.,M.A.,) கற்கை நெறிகளைத் தொடங்கியுள்ளன. *(இலங்கையில் தமிழ்க்கல்வி, சோ. சந்திரசேகரன், ப.15).*

ஒவ்வொரு மாநிலத்திலும் அவரவர் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதும், மொழிப் பயிற்சிக்கான மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதும், காலங்காலமாக நடந்து கொண்டு வருகிறது. பல மாறுதல்களும் கல்வியாளர்களின் துணையுடன் நடந்து வருவதும் வரலாறு.

**தமிழ்நாடே விழித்தெழு! தமிழர்களே உணர்வு கொள்வீர்!**

**மக்கள் ஆட்சியில் மக்கள் மொழியில் மக்களுக்குக் கல்வி அவசியம்**

மருத்துவத் தமிழ்க் கல்வி வளர்ச்சியுறாததற்குப் பல்வேறு அரசியல் சமூகக் காரணங்கள் உண்டு. ஒரு சமூகத்தில் முழுமையான ஆட்சி மொழியாக, மலராத மொழியை அச்சமூகத்தினர் கல்வி மொழியாக ஏற்றுக்கொள்வதில் பல்வேறு சமூகத்தடைகள் உண்டென்பது வரலாற்று உண்மை.

அரசு எங்கும் தமிழ் என்பதை அறிவியல் கல்வி நிலையிலும் நடைமுறைப்படுத்த விழைந்தால்,



அதற்குக் கல்வி மொழி நிலைசார் தடைகள் இல்லை, இருக்கின்ற மிகச் சில தடைகளை அகற்றுவது மிக எளிதே.

இருக்கின்றதை இல்லாததுபோல் அங்கும், இங்கும் நடக்கும் சில மொழிபெயர்ப்பு தவறுகளை மட்டும் சுட்டிக்காட்டி எப்படியும் தமிழ்வழிக்கல்வி வரக்கூடாது என்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு எதிர்ப்பதில் ஏதோ சூட்சுமம் மட்டும் உள்ளது என்பது தெளிவாகப் புரிகிறது.

**சூட்சுமம் என்ன?**

தமிழ்வழிக்கல்வி தமிழ்நாட்டில் விடுதலைக்கு முன்பே கட்டாயமாக்கப்பட்டிருந்தது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாக ஆறாம் வகுப்புக்கு மேல் ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தது. 1941 இல் மாணவர்கள் முதலாவதாகத் தமிழ்வழிக்கல்வி பெற்று பள்ளியிறுதித் தேர்வினை எழுதினார்கள்.

பொதுக் கல்வியில் தாய்மொழி வழிக்கல்வி கட்டாயம் என்று ஒரு நிலை இருந்தது. ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டது. விடுதலைக்கு முன்பே இங்கே நிலவிய, இந்த நிலை கைநழுவிப் போனது தமிழகத்துக்குப் பெருமையளிப்பதாக இல்லை. தமிழக வரலாற்றில் எந்தக் காலகட்டத்திலும் ஓர் அயல்மொழி ஒரு கட்டாயப்பாடமாக்கி இருபதாம் நூற்றாண்டுக்கு முன் எந்த ஆட்சியும் மக்கள் மீது திணித்ததில்லை. இருபதாம் நூற்றாண்டில் அதிலும் நாம் விடுதலை பெற்ற பின் தமிழ்நாட்டில் ஓர் அயல்மொழியை ஒரு கட்டாயப்பாடமாக்கிப் பொதுக்கல்வியிலேயே மக்கள் மீது திணித்திருக்கிறோம். அதே நேரத்தில் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சொந்தமான மொழியைப் புறக்கணித்துவிட்டுக்கூட ஒருவன் பட்டமும், பதவியும் பெற முடியும் என்னும் ஓர் அவல நிலை உருவாகத் தமிழகம் எப்படியோ இடம் கொடுத்துவிட்டது.

வடமொழி ஆதிக்க எதிர்ப்புச் சூழலையும், இந்தி ஆதிக்க எதிர்ப்புச் சூழலையும் நன்கு பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர்களே இந்நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில் ஆங்கிலப் பற்றாளர்கள் ஆங்கில ஆதிக்கத்திற்கு என்றுமில்லாத அளவுக்கு இங்கே வழிவகுத்து விட்டனர்.

பன்மொழிச் சூழலைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் ஒரு மொழியை மட்டும் மேலே தூக்கி நிறுத்தி ஆதிக்க மொழியாக ஆக்குவது மக்களாட்சிப் பண்புக்கும் பொருந்தாது. ஒரு மொழி, ஆதிக்க மொழி ஆகிவிட்டால் அது மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பதாக ஆகிவிடும். தமிழ்வழிக் கல்விக்கும், ஒரு வகையில் தடையாகத்தான் இருக்கும். *(டாக்டர் பொற்கோ, 1986:90).*

தமிழ் வழிக்கல்வி என்பது கல்வியாளர்களும், தலைவர்களும், துறை வல்லுநர்களும், ஆட்சியாளர்களும் ஒருங்கிணைந்து முழு மூச்சோடு பாடுபட்டு நிறைவேற்ற வேண்டிய பணி. இந்தப் பணி பல ஆண்டுகளுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். மக்களாட்சியில் மக்கள் மொழியின் வாயிலாக மக்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும். இதுபற்றிய பொறுப்புணர்ச்சி தமிழகத்தில் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும், தமிழ்வழிக்கல்வி என்பது தமிழுக்குக் கிடைக்க வேண்டிய உரிமையில் ஓர் இன்றியமையாத பகுதி. இதை விடுத்து ஆங்கில வழியில் பயின்றால் உலகம் முழுவதும் வேலை கிடைக்கும் என்று

கூறி கானல் நீர் கனவுகளை வளர்க்கிறார்கள். இது உண்மையில்லை. ஆங்கில வழியில் படித்தவர்கள் 2 விழுக்காடே வெளிநாடுகளுக்கு, வேலைக்குப் போகிறார்கள். அதிலும் வளர்ந்துள்ள நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற ஆங்கிலம் பேசும் நாடுகள் சிலவே. அரபு நாடுகளுக்கு வேலைக்குப் போக ஆங்கிலம் தேவையில்லை. போகிறவர்களும் அரபி மொழியைக் கற்றுக்கொள்ளப் போவதில்லை. இதுவே உண்மை.

ஒரு நாடு வெளிநாடுகளில் வேலை தேடுவதை அடிப்படைத் திட்டமாக வைத்து தனது கல்விக் கொள்கையையோ, பொருளாதாரக் கொள்கையையோ வகுத்தால் அந்நாடு முன்னேற்றத்தின் முதல்படியில் கூட ஏற முடியாது.

இது தவிர விஞ்ஞானிகள் அனைவரும் ஆங்கிலேயர் என்பது போன்ற தவறான பார்வையும் உள்ளது. விஞ்ஞானிகள் அவரவர் தாய் மொழியில் கண்டுபிடிப்புகளை எழுதுகிறார்கள். சில சமயங்களில் ஆங்கிலம் தவிர்த்து மற்ற மொழிகளில் வெளிவரும் ஆய்வுக் கட்டுரைகளில் கட்டுரைச் சுருக்கம் உள்ளது.

இது போலவே பல்கலைப்படிப்புகள் தொழிற்கல்வியில் நூற்கள் இல்லாது படிப்புகளைத் தொடங்க முடியாது என்று சொல்வதும் ஒரு முரட்டுவாதம். தமிழ்நாட்டை நோக்கினால் கூட தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழியாகப் பொறியியல், மருத்துவம் தொடர்பான பல பாட நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இதைத் தொடர்ந்து 1997, 1998-ஆம் கல்வி ஆண்டில் பொறியியலைத் தமிழ் வழியில் கற்பிப்பதாகத் தமிழக அரசு அறிவித்தது. 700 மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியல் கற்க விண்ணப்பித்தனர். ஆனால் அரசு பல காரணங்களைக் கூறி இதை நடைமுறைப்படுத்தவில்லை. எனினும் மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியலைக் கற்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருப்பதே இத்திட்டத்திற்கு வெற்றி, இல்லையா? வெற்றிதான். இதற்குத் தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியத்தையும் அவருடன் கை கோத்து நின்ற முனைவர் இராமசுந்தரத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதனைத் தொடர்ந்து அண்ணா பல்கலைக் கழகத்தின் 8 கல்லூரிகளில் இரண்டு பாடங்கள் தமிழ் வழியாக நடத்தப்படுகின்றன.

நடப்புகளைக் கூட்டிக் கழித்து பார்க்கையில் நாம் அறிவது புரட்சிக்கவி பாரதிதாசனுக்கு புலப்பட்டதுதான். அதுதான்,

**தமிழ்க் கல்வி தமிழ் நாட்டில்**
**கட்டாயம் என்பதோடு**
**சட்டம் செய்க**

என்ற ஆணையேயாகும்.

**மன மாற்றமும் உள்ள உறுதியும் தேவை**

தமிழைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் எனக் கூறும்போது பாடநூற்கள் இல்லை, கலைச் சொற்கள் இல்லை, வேலை கிடைக்காது, வெளிநாடு செல்ல இயலாது என்பன போன்ற தடைகள் எழுப்பப்படுகின்றன. வேலை வாய்ப்பு, வெளிநாட்டு வாய்ப்பு இரண்டும் அரசியல், பொருளாதாரச் சக்திகளோடு தொடர்புடையன. திட்டமிட்ட பொருளாதாரமும் சமுதாய அமைப்பு குறித்த அரசியல் சித்தாந்தமும் நடைமுறைப்படுத்தப்பட்டால் வேலைவாய்ப்பை உருவாக்குதல் எளிது. பல சோசலிச நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு சிக்கலாக இருந்ததே இல்லை. அதே நேரத்தில், பல முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாகக் குற்றங்கள் பெருகியதையும் பார்த்திருக்கிறோம். அரசியல் பொருளாதாரச் சித்தாந்தம் சமுதாய நலன் கருதியதாக அமையும்போது இந்தப் பிரச்சினை எழ வாய்ப்பில்லை.

ஆங்கிலம் கற்றால் அயல்நாடு செல்லலாம் என்பதும் ஒருவகை மயக்கம்தான். ஆங்கிலம் முதன்மை மொழியாக உள்ள நாடுகளில் வேண்டுமானால் ஆங்கில வழிக்கல்வி உதவக்கூடும். ஜெர்மன், சுவிட்சர்லாந்து, ஜப்பான், ஸ்பெயின் முதலிய நாடுகளில் ஆங்கிலம் உதவப் போவதில்லை. அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்றால்தான் நிலைத்து நிற்க முடியும். ஆங்கிலம் கல்வி மொழியாக இல்லாத நாடுகளுக்குப் பயிலச் செல்லும் நமது மாணவர்கள் அங்குள்ள பயிற்று மொழியைக் கற்ற பின்னரே படிப்பைத் தொடர முடிகிறது. ஒரு போலிஷ் மாணவன் 4 ஆண்டுகளில் முடிக்கும் படிப்பை ஆங்கிலம் வழிக்கற்ற இந்திய மாணவன் 5 ஆண்டுகளில் முடிக்கிறான். இவற்றில் ஓராண்டு போலிஷ் மொழிக்கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. ஆங்கிலம் கோலோச்சாத சில நாடுகளில் இதுதான் நிலை. கடந்த 200 ஆண்டுகளாக ஆங்கிலம் வழிக் கற்ற நம்மவரில் எத்தனை பேர் வெளியிடங்களில் பணி புரிகிறார்கள்? அப்படி பணியாற்றுபவரின் சமூக நிலை என்ன? சமுதாயத்தின் உயர் மட்டத்தில் உள்ள சிலர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளச் சமுதாயம் முழுவதுமே பலி ஆக வேண்டுமா? இத்தனை ஆண்டுகள் ஆங்கிலம் வழிப் படித்தவர்களில் எத்தனை பேர் தேசிய, சர்வதேசியப் புகழ் வாய்ந்த நூல்களை, கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர்? வெளிநாடுகளில் / மாநிலங்களில் பணியாற்றும் தமிழர்களின் எண்ணிக்கையும் ஆங்கிலம் வழிக் கற்ற அவர்கள் எழுதியுள்ள ஆங்கில நூல்களின் எண்ணிக்கையும் மிகக்குறைவே. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் எழுதப்பட்ட நூல்களே நமது கல்விக் கூடங்களைக் கட்டுக்குள் வைத்துள்ளன. ஆக, நமது ஆங்கில வழிக் கல்வி சிலரது முன்னேற்றத்திற்குப் பயன்பட்டதே தவிர, ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும்

பயன்படவில்லை என்பதே உண்மை. இந்த உண்மை புரியாததால் சமுதாயத்தின் அடிநிலையில் உள்ளவர்களும் ஆங்கில மோகம் கொண்டு அவதிப்படுகின்றனர்.

தமிழ் மொழிகாக்க உறுதி ஏற்போம். ஒவ்வொரு மொழியும் பயிற்று மொழியாகும் போது புதிய துறை சார்ந்த கல்வியே அம்மொழிக்கு புதிய அனுபவமாகவே அமையும்,

பல புதிய துறைகளைத் தமிழில்கொண்டு வரும்போது கலைச் சொற்கள் இன்மை, உலக அளவில் வேலை வாய்ப்பு, உயர்கல்வி தமிழில் தொடர வாய்ப்பின்மை போன்ற பல சிந்தனைகள் மனதில் எழக்கூடும். ஆனால் அத்தனையும் சாத்தியமானதே,

பாடநூல்கள் இல்லை என்ற குறை தாய்மொழி வழிக்கல்விக்குத் தடையாக இருக்க முடியாது. ஏனெனில் அவசியம் இருந்தால் நூற்கள் தானே பெருகும். பாடநூல்கள் அனைத்தும் இருக்கிற மொழிதான் பயிற்று மொழியாக வேண்டுமெனில் உலகிலுள்ள எம்மொழியும் ஆக முடியாது.

உலகில் உள்ள 187 நாடுகளில் ஆட்டிப் படைக்கிற வல்லமை கொண்ட நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் முதலியவை. இங்கிலாந்து, அமெரிக்காவைத் தவிர்த்து ஜெர்மனியில் ஜெர்மனிய மொழியே, பிரான்சில் பிரெஞ்சு மட்டுமே. ஜப்பானில் ஜப்பானிய மொழி மட்டுமே. தத்தம் தாய்மொழி வழியில் கற்றுத் தாய்மொழியில் மட்டும் ஆட்சிமொழி பெற்ற இவர்களே இன்று உலகத்தை ஆட்டிப்படைக்கின்றனர்.

அரசியல், அறிவியல், பொருளியல், தொழில் நுட்ப இயல், கணினி இயல் என்கிற எல்லாத் துறைக் கல்வியையும் அவரவர் தாய்மொழியில் கற்றதனால் தான் அவர்கள் அறிவாளிகளாகக் கண்டுபிடிப்பாளர்களாக உலகத்தை ஆட்டிப்படைப்பவர்களாக உருவாக முடிந்தது. இதுவே நடக்கக் கூடியது. இதுவே சரியானது.

மேற்கண்ட நாடுகளில் தொழில் நுட்ப அறிவுக்கான மேற்படிப்புக்குப் போகிற மற்ற நாட்டினரும் எந்த எந்த நாட்டிற்குப் போகிறார்களோ? அந்த அந்த நாட்டுத் தாய் மொழியை ஓராண்டு காலம் கற்றுக் கொண்டு அதன் வழியாகப் பெற்று, செயலாற்றுகின்ற அறிவை (working knowledge) மட்டுமே வைத்துக் கொண்டு அந்தந்த மொழி மூலம் மட்டுமே மேல் படிப்பு, ஆய்வுப்படிப்பு என்பதை ஆங்காங்கே பெறுகிறார்கள்.

ஐரோப்பாவிலுள்ள 20 தனித்தனி நாட்டினரும் அவரவர் தாய்மொழி வழியேதான் எல்லாத் துறைக் கல்வியையும் பெறுகின்றனர். ஆங்காங்கு உள்ள அரசும் மக்களும், கல்வியாளர்களும், ஏடுகளும் மாணவர்களும் இதை அப்படியே ஏற்கின்றனர். தமிழ்வழிக்கல்வி கேட்கிற யாரும் ஆங்கிலத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மொழிப் பயிற்சி வேறு, பயிற்று மொழி வேறு என்பதை நாம் சரியாக உணர்ந்தாக வேண்டும். தமிழ்வழிக்கல்வி எல்லா நிலைகளிலும் பயிற்று மொழியாக இருக்க ஆங்கிலம் 1950-ஆம் ஆண்டு பயிற்று மொழித் திட்டத்தைப் போல ஒரு மொழிப்பாடமாக இருக்கலாம்.

அறிவியல் நூல்கள் இல்லாதபோது தமிழில் பயிற்சி எப்படி முடியும்? என்று ஒரு தடை பேசப்பட்டது. உயர்நிலைப்பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழி ஆக்கிய நிலையில் தரமான நூல்கள் வெளியிடப்பட்டன. ஆகவே தேவை மிகும்போது பயிற்று மொழியாகத் தமிழை ஆக்கிய பின்னரே இது கைக் கூடியது. தேவை என்பது ஏற்பட்டால் நூல்கள் தானாகவே எழுதப்பட்டு வெளிவரும் தேவையான பயன்பாட்டிற்கான நூல்கள் இருக்கும் நிலையிலேயே ஒரு மொழி பயிற்று மொழி ஆகவேண்டும் என்று கூறினால் அது அந்த மொழிக்குப் பொருந்தா நிலைப்பாடேயாகும். நம் நாட்டினருக்கும் ஆங்கிலேயர் வருகைக்கு முன் அறிவியல் அறிவு கிடையாது என்றும் எல்லாமே மேலை நாட்டிலிருந்தே பெற்று வருகிறோம் என்ற கருத்து இன்று பரவலாகப் பேசப்படுகிறது. இது சரியானதல்ல. ஏனெனில் கல்லணை, தஞ்சை பெரியகோவில் கட்டுமானம் போன்ற அறிவியல் திறன் இன்று வரை போற்றப்படுகிறது. இது தவிர தொல்காப்பியர் கூறும் உயிரியல் கோட்பாடுகளும் தமிழரின் அறிவியல் திறத்தை வெளிக்காட்டும் கண்ணாடியாகும்.

தமிழ்ப் பயிற்று மொழியாக்க வேண்டுமெனில் தமிழர்களிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை. அரசின் சரியான மொழிக்கொள்கை, நூற்றில் ஒருவர் வெளிநாடு செல்வதைப் பார்த்து அனைவருக்கும் ஆங்கிலேமே பயிற்று மொழியாக இருப்பது நல்லது என்ற தவறான எண்ணம் போன்றவைகள் கவனத்தில் கொள்ள வேண்டும். கல்வியாளர் வா.செ.குழந்தைசாமி மிக வேகமாக வளர்ந்து வரும் உலகம் அறிவியலோடு தமிழும் போட்டியிட்டு வளர வேண்டுமெனவும், முத்தமிழோடு நான்காம் அறிவியல் தமிழும் ஒருங்கிணைந்து போவதே சிறந்த ஒன்றாகும் என்கிறார். இல்லையெனில் நம் மொழி வளர்ச்சி பின்தங்கிப் போய்விடுமோ என அஞ்சி,

> "நாளும் நம்மொழி பிந்துதடா
> புவி நம்மைப் பிரிந்து முந்துதடா
> ஆளுமை தருவது கல்வியடா"

என ஏக்கம் கொண்டு எழுச்சியூட்டுகிறார்.

●

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

# என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...

## ஏப்ரல் 2022 வெளியீடு

# போரும் இடதுசாரிகளும்

**மார்செல்லோ முஸ்ட்டோ**

தமிழாக்கம்: **எஸ்.வி.ராஜதுரை**

1864ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சர்வதேசத் தொழிலாளர் சங்கத்திலிருந்த சோசலிசப் புரட்சியாளர்களிலிருந்து 20ஆம் நூற்றாண்டு சோசலிசப் புரட்சியாளர்களான ரோஸா லுக்ஸம்பர்க், லெனின் முதலியோர் வரை முதலாளியத்துக்கும் போர்களுக்குமுள்ள தொடர்பு பற்றி கூறிய கருத்துகளும் உழைக்கும் மக்கள் அத்தகைய போர்களை எதிர்த்தாக வேண்டும் என்பது பற்றி அவர்கள் கூறிய கருத்துகளுமடங்கிய சிறுநூல், காலத்தின் கட்டாயம் கருதி வெளியிடப்படுகிறது.




₹ 30/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**


41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050

☎ 044-26251968, 26258410, 48601884 | Email: info@ncbh.in | www.ncbhpublisher.in


**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 250/-




₹ 210/-




₹ 350/-




₹ 210/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை



# அடிப்படை மாற்றத்திற்கான தலைமைத்துவம்

க. பழனித்துரை

உலகத்தில் நடந்த பெரும் மாற்றங்கள் அனைத்தும் பெரும் அரசியல் சிந்தனைகள் கொண்டவர்களால் செயல்பாட்டின் மூலம் நடத்தப்பட்டது. பெரும் வியத்தகு சமூக மாற்றங்களை விஞ் ஞானிகளோ, அறிவுஜீவிகளோ அல்லது அதிகாரிகளோ கொண்டு வரவில்லை. அனைத்தும் அரசியல் தலைவர்களால் வந்தவைகள். மற்றவர்கள் அதற்கு உதவிகரமாக செயல்பட்டிருப்பார்கள். மக்கள் சமூகத்திற்குள் செல்லக்கூடிய ஆற்றலும் சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற கடப்பாடும் அரசியல் தலைவர்களிடம்தான் இருந்து வந்துள்ளது. அந்த தலைமைத்துவத்தில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகையான தலைமைத்துவத்திற்கும் ஏற்ற வகையில் அணுகுமுறைகள், வழிமுறைகள், யுக்திகள் கடைப்பிடிக்கப்படும். இந்தத் தலைமைத்துவம் பற்றி மிக அதிக அளவில் ஆய்வுகள் வரவில்லை. மாறாக அவைகள் அனைத்தும் தனிமனித வரலாறாகத்தான் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இன்று தலைமைத்துவம் என்ற பெயரில் எல்லையில்லா அளவுக்கு ஆய்வுகள் செய்து புத்தகங்கள் வெளியிடப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவற்றைப் படித்துவிட்டு தலைமைத்துவம் பற்றி மக்கள் பிரதிநிதிகளிடம் உரையாற்றுகின்றனர். இந்தத் தலைமைத்துவம் என்பது சந்தைக்கானது,

வணிகத்திற்கானது, லாபம் ஈட்டுவதற்கானது. அந்தத் தலைமைத்துவம் மக்களை வழிநடத்தும் மக்கள் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவம் அல்ல. மக்களை எப்படிச் சுரண்டலாம் என்பதற்கு அந்தத் தலைமைத்துவத்தில் வழி இருக்கலாம். எனவே சந்தைத் தலைமைத்துவம் பற்றி மக்கள் தலைவர்களிடம் விவாதிப்பது அவர்களுக்கு தவறான வழிகாட்டுவதாகும்.

அடுத்து மற்றொரு நிலையில் தலைமைத்துவம் என்பது செயல்பட்டு வருகிறது. ஆனால் அந்தத் தலைமைத்துவத்தைப் பற்றி யாரும் பேசுவதும் இல்லை, எழுதுவதும் இல்லை, விவாதிப்பதும் இல்லை, ஆராய்ச்சி செய்வதும் இல்லை. அப்படிப்பட்ட மனிதர்களை நாம் பெரிதாகப் போற்றி மதிப்பதும் இல்லை. ஆனால் அந்தத் தலைமைதான் உலகத்தில் பெரும்பான்மையான நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் தேவைப்படுகிறது. ஏனென்றால் இந்த உலகமய பொருளாதாரத்தால் விளைந்த எல்லை இல்லா ஏற்றத் தாழ்வுகளும், புறக்கணிப்புகளும், இயற்கை அழிப்புக்களும் ஆங்காங்கே புதிய தலைமையைத் தேடி ஏங்கி நிற்கின்றன சமூகங்கள். யாரின் துணையும் இன்றி, மனித சமுதாயத்தின் மீது நம்பிக்கையும், மாறா அன்பும் பற்றும் கொண்டு தொடர்ந்த சமூக அடிப்படை மாற்றங்களுக்காக பலர் செயல்பட்டு வருகின்றனர். அந்தத் தலைமைதான் இன்று ஆயிரக்கணக்கில் நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் தேவை. இவர்கள் மக்களுடன் மக்களாகச் செயல்படக் கூடியவர்கள். செயல்பட்டும் கொண்டிருக்கின்றனர். இந்தத் தலைமைத்துவம் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவு. ஆனால் இந்தத் தலைமைதான் நமது இன்றைய உள்ளாட்சிகளுக்குத் தேவை. ஒரு கிராமத்து தையல்காரர் வாரத்தில் ஒருநாள் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் சீருடையில் உள்ள கிழிசலை கூலி வாங்காமல் தைத்துக் கொடுத்து விடுகிறார். ஒரு நாளை சமுதாயத்திற்கு ஒதுக்கி விடுகிறார். அதேபோல் லட்சக்கணக்கான பனை விதைகளை ஊர் ஊராகச் சென்று குளக்கரைகளிலும், பொது இடங்களில் புதைத்து மக்கள் பங்கேற்போடு வளர்த்து வருகிறார். நம்மாழ்வாரோடு பயணித்து ஒருவர் ஒரு கிராமத்திற்கு வந்து நஞ்சில்லா உணவு தயாரிப்புக்கு இயற்கை விவசாயத்தை விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து நூற்றுக்கணக்கான இயற்கை விவசாயிகளை உருவாக்கி வருகிறார். ஆதிவாசிக் குழந்தைகள் படிப்பதற்கு காட்டுப்பள்ளி ஒன்றை உருவாக்கி நடத்தி வருகின்றனர் ஓர் இளைஞர்கள் கூட்டம். ஒரு சுய உதவிக் குழுவை உருவாக்கி, சீட்டுப்பிடித்து, பால்மாடு வாங்கிக் கொடுத்து, பால் வணிகம் செய்ய வைத்து நூற்றுக்கணக்கான குடும்பங்களை வறுமையிலிருந்து வெளியேற்றிய சாதனையை ஒரு படிக்காத பெண் செய்துள்ளார் என்பதை எப்படிப் பார்ப்பது? கிராமத்தில் படித்துவிட்டு வேலை இல்லாமல் சுற்றித் திரியும் இளைஞர்களைப் பார்த்து விட்டு, கோவில் பணம் வங்கியில்தானே வைத்துள்ளோம், அவற்றை எடுத்து இந்த இளைஞர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வேலை செய்ய வைத்து அந்த இளைஞர்களின் குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்தியதுடன், கோவில் பணத்தை வட்டியின் மூலம் பெருக்கிய செயல்பாட்டை என்னவென்று பார்ப்பது? பொறியியலில் பட்டம் பெற்று உயர் கல்விக்காக ஆஸ்திரேலியா செல்ல இருந்த பெண், சாதாரண இளைஞர்கள் களத்தில் சாதாரண மனிதர்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவதை பார்த்துவிட்டு தனக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திலிருந்து கிடைத்த கல்விச் சேர்க்கைக்கான உத்தரவை பெற்றோர்களுக்குத் தெரியாமல் கிழித்து எரிந்துவிட்டு, சமூக மாற்றத்திற்காகச் செயல்படும் இளைஞர்களுடன் இணைந்து தூய்மை துப்புரவு, குப்பை மேலாண்மையில் ஆய்வுச் செயல்பாட்டில் இறங்கியதை என்னவென்று பார்ப்பது? கிராமத்தில் உள்ள இளைஞர்களை ஒன்று திரட்டி கிராமப்புற மேம்பாட்டுக்காக என்னென்ன திட்டங்கள் எந்தெந்தத் துறைகள் மூலம் நடைபெறுகிறதென்பதை தெரிந்து, அந்தத் திட்டச் செயல்பாடுகளில் ஒரு பைசா கூட யாரும் கை வைக்காமல் பாதுகாக்க கிராம சபையில் பங்கேற்று ஊர் மக்களைச் செயல்பட வைத்த அந்த இளைஞரை என்ன என்று அழைப்பது?

இப்படி எண்ணிலடங்கா இளைஞர்கள் சிறிய சிறிய பணிகளை அர்ப்பணிப்புடன் தான் இயங்கக்கூடிய இடங்களில் செய்து வருகின்றனர். அவர்களின் செயல்பாடுகளின் மூலம் பெரும் மாற்றங்கள் வருவதன் அடிப்படையில் அப்படிச் செயல்படும் மனிதர்களின் மேல் எல்லையற்ற அன்பையும் நம்பிக்கையும் பொதுமக்கள் வைத்துச் செயல்படுகின்றனர். இவர்களுக்கு யாரும் அதிகாரங்களை சட்டத்தின் மூலம் அளிக்கவில்லை, இவர்களுக்கு நிதியை யாரும் அவர்கள் வங்கிக் கணக்கில் போடவில்லை. இவர்களை பொதுமக்களும் தேடி மனுச் செய்யவில்லை. மாறாக மானுடத்தின் மீது மாறா அன்பும் பற்றும் கொண்டு பொறுப்புக்களை தங்கள் தோள்களில் தாங்களே எடுத்து வைத்துக் கொண்டு தன்னை இழந்து செயல்படும் மனிதர்களை நாம் தலைவர்கள் என்று அழைப்பதில்லை. மாறாக அவர்களை தன்னார்வலர்கள் என்று

அழைக்கின்றோம். இவர்களை தலைவர்கள் என்று யாரும் அழைப்பதில்லை. ஏனென்றால் இவர்கள் நிறுவனங்களில் உள்ள பதவிகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்வதில்லை. நிறுவனங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமரும்போது அதற்கு ஒரு பெயர் சூட்டப்பட்டுள்ளது அதுதான் தலைவர், உபதலைவர். இந்த நிறுவனங்களில் பதவிகளில் அமரும்போது அந்தப் பதவிகளுக்கான பொறுப்புக்கள் சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்டிருக்கும். அந்தப் பொறுப்புக்களை கட்டாயக் கடமைகளாகக் கருதி பணி செய்ய வேண்டும். அவைகள் அனைத்தும் விதிக்கப்பட்ட பணிகள். தலைவர்கள் என்பவர்கள் விதிக்கப்பட்ட பணிகள் மட்டும் செய்வதற்கு வந்தவர்கள் அல்ல இவர்களுடைய பணிகள் ஒப்படைக்கப்பட்ட பணிகளைத் தாண்டி மக்களின் உணர்ந்த தேவைகளுக்கென தீர்வினை சட்ட வரையறைக்குள் காண்பதும், தான் பொறுப்பேற்ற பகுதியின் மேம்பாட்டை ஒரு கனவின் மூலம் திட்டமிட்டுச்செயல்படுவதும், சமூக மேம்பாட்டுக்கான செயல்பாடுகளில் மக்களுக்கு வழிகாட்டி பங்கேற்க வைப்பதும் மிக முக்கியமான பணிகள் என்ற புரிதலுடன் செயல்பட்டால்தான் அவர்கள் தலைவராக முடியும். அடிப்படையில் தலைவர்கள் எதனால் அளவீடு செய்யப்படுகிறார்கள் என்றால் சாதனைகளின் தன்மையால்தான். எனவே பதவிகளில் இருப்போர் எப்பொழுது தலைவர்களாக ஆகின்றார்கள் என்றால் தங்கள் சாதனைகள் மூலமாகத்தான். தலைவர்களுக்கு கட்டியங்கூறுவது, வரலாற்றில் பதியும் அளவுக்கு அவர்கள் செய்கின்ற சேவைகள்தான். தலைவருக்கான அடையாளங்கள் என்னென்ன என்பதுதான் அடுத்த கேள்வி. தலைவர் என்று கூறும்போது மிகத் தெளிவாக எதற்குத் தலைவர் என்பதை விளக்கி விட்டால், அதற்கான அடிப்படைக் கூறுகளை நாம் இனம் கண்டு விடலாம். நாம் இன்று விவாதிப்பது உள்ளாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பற்றித்தான் விவாதித்துக் கொண்டுள்ளோம். எனவே அவர்களுக்கான தலைமைத்துவம் பற்றித் தான் நாம் விவாதிக்க வேண்டும். மக்களாட்சியில் மக்கள் பிரதிநி-திகளுக்குத் தேவையான அடிப்படைகள்தானே நாம் பார்க்க வேண்டும். உண்மைதான் ஆனால் இன்று இந்தியாவில் உருவாக்கிய உள்ளாட்சிகள் அரசாங்கமாக உருவாக்கி, அவற்றை ஆளுகை செய்ய எப்படிமக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வழி செய்திருக்கிறார்கள் என்றால் 50% பெண்களும், தலித்துக்களுக்கு அவர்கள் ஜனத்தொகைக்குத் தகுந்த அளவில் இட ஒதுக்கீடு என்று பார்க்கும்போது 70% மான மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சியில் இதுவரை புறந்தள்ளப்பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும், விளிம்புநிலை மக்களிலிருந்தும் வந்துள்ளனர். எனவே இவர்கள்தான் பொறுப்புக்களை ஏற்று, அதிகாரத்தை எடுத்து இதுவரை மத்திய, மாநில அரசுகளால் சென்றடைய முடியாத மக்களை அடைந்து அடிப்படை மாற்றத்தை மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைப் பங்கேற்க வைத்து கொண்டுவர வேண்டும். அதற்கான திறன் வளர்ப்பு, ஆற்றல் மேம்பாடு, பார்வை உருவாக்கம் எனச் செயல்பட வேண்டும்.

இங்கு வரக்கூடிய பிரதிநிதிகளுக்கு வித்தியாசமான தலைமைத்துவம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இந்திய சமூகம் பல்வேறு ஆதிக்க பார்வை கொண்டு இயங்கும் தன்மை கொண்டது. அந்த ஆதிக்கங்களை மக்கள் ஆதரவுடன் உடைத்து சமத்துவம் கொண்டுவர வேண்டும். இந்த சமத்துவம் சமூக பொருளாதார



சமத்துவமாகும். இதற்கு சமூக நீதி பற்றிய பார்வையும் அதை அடைந்திடும் வழிமுறையும் புரிந்திருக்க வேண்டும். அடுத்து இந்த உள்ளாட்சியில் கடையனுக்கும் கடைத்தேற்றம்தான் இதன் தலையாய பணி. அதைத்தான் சிந்தனையில் கொண்டு செயல்பட வேண்டும். அடுத்து உள்ளாட்சியை எது அடிப்படைப் பணி என்ற புரிதலை ஏற்படுத்தாமல் இதுவரை உள்ளாட்சி என்பது சாலை அமைத்தல், தண்ணீர் வினியோகம், தெருவிளக்கு பராமரித்தல், சிறுபாலம் கட்டுதல், சிறு சிறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்தல் என்ற நிலையில் வருகின்ற நிதிக்கு பணி செய்யும் ஓர் அமைப்பாகவே உள்ளாட்சியை வைத்திருக்க தேவையான ஒரு மனோபாவத்தைத் தான் ஏற்படுத்தி வைத்திருந்தனர். முதலில் உள்ளாட்சித் தலைவர்கள் எது அடிப்படை மாற்றம் என்று புரிந்து

கொள்ள வேண்டும். ஒரு சமூகம் சமத்துவத்துடன் ஒருவரையொருவர் மதித்து ஆதிக்கமற்று செயல்பட்டு வாழ வேண்டும். அங்கு மேம்பாடு என்பது அனைவருக்குமானது, அனைவரையும் உள்ளடக்கியது அத்துடன் கடையர்களுக்கு முன்னுரிமை என்ற பார்வையில் செயல்படுவது. அரசு தந்துள்ள வாய்ப்புக்கள் அது சட்டமாக இருந்தாலும் அல்லது திட்டமாக இருந்தாலும் அவைகள் அனைத்தும் அரசாங்கம் போடும் பிச்சையல்ல, பயன்கள் அல்ல, அவைகள் அனைத்தும் மக்களின் உரிமைகள் என்ற பார்வையில் நடைமுறைப்படுத்த வேண்டும். சாதாரண மக்களை, உழைத்து வாழும் மக்களை மரியாதையுடன் நடத்த மனநிலை பெற்றிருக்க வேண்டும். அடுத்து எல்லாத் தரப்பு மக்களும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களும் விளிம்பு நிலை மக்களும் ஒரு மதிக்கத்தக்க மரியாதையுடைய மானுட வாழ்வை, எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழத் தேவையான எல்லா அடிப்படை வசதிககளையும் செய்து அறிவியல் அடிப்படையில் வாழ்வை நடத்திடத் தேவையான ஒரு விழிப்புணர்வையும் மனோபாவத்தையும் உருவாக்க வேண்டும். இதற்கு என்ன தேவை? முதலில் இவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும், அடுத்து வசிப்பிடம் துப்புரவு மற்றும் தூய்மையுடன் வாழ்விடமாக மாற தேவையான வசதிகள் செய்திடல் வேண்டும், இவர்களின் குடிநீர்த் தேவை புரிதலுடன் தேவையான அளவுக்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் வழங்கப்படல் வேண்டும். சமூகத்தில் வளர் இளம் பெண்கள் ரத்த சோகையின்றி வாழ வழிவகை செய்ய வேண்டும். அவர்கள் திருமண வயது எய்திய உடன் அவர்களுக்கு திருமண ஏற்பாடு செய்ய தேவையான புரிதலை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அவர்கள் திருமணம் ஆகும் நிலையில் 42 கிலோ எடையுடன் இருக்குமாறு பார்த்துக் கொள்ள ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

திருமணமான பெண்கள் கர்ப்பமுற்று இருந்தால் அரசு தரும் திட்டங்கள் மூலம் அவர்களின் கர்ப்பகால கவனிப்பு நடக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்து குழந்தை பிறப்பு மருத்துவமனையில் நடக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த கர்ப்பிணிப் பெண் நிறைந்த எடையுடன் குழந்தை பெறுவதை உறுதி செய்ய வேண்டும். குழந்தை பிறப்புக்குப் பின் குழந்தையும் தாயும் ஆரோக்கியமாக வாழ பேருகாலக் கவனிப்பு முறையாக நடக்கிறதா என்று கவனிக்க வேண்டும். குழந்தை ஊட்டச்சத்து குறைவு என்ற நிலையில் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வாழ்விடத்தில் தூய்மை பேணுவதும் குழந்தைகளை வளர்ப்பதில் சத்துணவின் முக்கியம் அறிதலும், வளர் இளம் பெண்கள் ரத்த சோகையின்றி வாழ்வதன் முக்கியத்துவம் அறிதலும், தூய்மையான தண்ணீரின் முக்கியத்துவம் அறிதலும், குழந்தை கருவுற்ற நாளிலிருந்து 2000 நாட்களுக்கு குழந்தைகளைப் பேணிக் காப்பதன் அவசியம் அறிந்தும், ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் அறிந்தும் செயல்பட தேவையான ஓர் புரிதலை, பார்வையை, விழிப்புணர்வை மக்கள் பிரதி-நிதிகள் உருவாக்கிக் கொண்டு, மக்களிடமும் உருவாக்கிட வேண்டும். இந்த அடிப்படைப் பணிகள் நடந்திட்டால் ஏழைகள் மேம்படுவர். இந்த மாற்றங்களைத் தான் அடிப்படை மாற்றங்கள் என்று வரையறுக்கப்படுகிறது.

இந்தப் பணிகளைத்தான் உள்ளாட்சிகள் செய்திட பணிக்கப்பட்டுள்ளது. ஒரு தலைவர் என்பவர் முதலில் மக்கள் பிரச்சினைகளை அறிந்து அவைகளைத் தீர்க்க தன் கனவின் மூலம் வழிமுறை காண்பவர். தலைவர்களுக்கு மக்கள்மேல் மாறா அன்பும் பற்றும் இருக்க வேண்டும். அவர்களை மதித்து நடத்தும் மனநிலை தலைவர்களுக்கு வேண்டும். மக்களுக்கு கடமைப்பட்டவர், என்ற உணர்வில் மக்களின் குரலுக்கு செவி சாய்ப்பது, மக்களுடன் மக்களாக வாழ்வது, மக்களின் பிரச்சினைகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்வது, சவால்களாக மக்கள் பிரச்சினை வரும்போது அவைகளை சமாளித்து தீர்வினைக் காணும் ஆற்றல் படைத்தவராக தங்களை உருவாக்கிக்கொள்வது, மக்களுடன் பணி செய்யும் பாங்கினைப் பெறுவது, மக்களுக்கு மேம்பாட்டுக்கான நம்பிக்கையைத் தருவது, மக்களை எல்லா மேம்பாட்டுச் செயல்பாடுகளிலும் பங்கு பெறத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பணியில் ஒன்றி நிபுணத்துவத்துடன் செயல்படும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுவது, எப்பொழுதும் மக்களுடனும், பணிக்குத் தேவையான நிபுணர்களுடனும், ஊடகத்துடனும், அதிகாரிகளுடனும் உள்ளார்ந்த தொடர்பில் இருப்பது, தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொண்டு புதுமைகள் நோக்கிப் பயணிப்பது, மக்கள் பார்வையில் மேம்பட்டவராக மக்கள் பிரதிநிதிகள் தங்கள் சிந்தனையை, பார்வையை, நடத்தையை, செயல்பாடுகளை மாற்றிக் கொண்டு செயல்படுவது போன்ற குணங்களைக் கொண்டவராக ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் அச்சமற்று நேர்மையுடன், சமூக கரிசனத்துடன் செயல்படும் பாங்கினைப் பெற்று இருத்தல்தான் அடிப்படை மாற்றங்களைச் செய்யவல்ல தலைமை. அந்தத் தலைமைதான் இன்றைய தேவையாக இருக்கின்றது.

●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)



நினைவுக் கட்டுரை

## சேக்கிழார் அடிப்பொடி

# தி.ந. இராமச்சந்திரன்

## (1934 - 2021)

அ.கா.பெருமாள்

> "ஒரு முறை ஜெயகாந்தன் இவரது வீட்டுக்குச் சென்றபோது இவரது பெரிய நூல் நிலையத்தைப் பார்த்து மலைத்துப் போய் 'உங்களுக்கு மேதமை எப்படி வந்தது என்பதைத் தெரிந்துகொண்டேன்' என்றாராம்."

தஞ்சைப் பகுதியில் ஒருவர் ஆனந்த விகடன் வார இதழ் ஆசிரியர் மீது வழக்கு தொடர்ந்தார். அவர் எழுதிய கதையை விகடன் வேறு ஒருவர் பெயரில் வெளியிட்டிருந்தது என்பது குற்றச்சாட்டு. அப்போது ஆனந்தவிகடனை எதிர்த்து வழக்கு போட முடியுமா என்று சில சிற்றிதழ்கள் துணுக்குகள் எழுதின. இது எண்பதுகளில் நடந்தது.

அப்போது ஆனந்த விகடனுக்கு எதிராக வாதாடியவர் டி. என். ஆர் என்று அழைக்கப்பட்ட இராமச்சந்திரன் ஆவார். இறுதியில் ஆனந்தவிகடன் தோல்வியடைந்தது

தஞ்சை வேதாந்த மடத்திற்குத் தானே தலைவராக வரவேண்டும் என்று ஒருவர் வழக்கு தொடர்ந்தார். அப்போது அச்செய்தி பரவலாய் பேசப்பட்டது. இந்த வழக்கில் சித்தாந்தம், வேதாந்தம் அறிந்தவர் மட்டுமே வாதாட முடியும் என்பது யதார்த்தம். டி.என்.ஆர் வாதாடினார். வெற்றி பெற்றார். இப்படியாக பல வழக்குகளில் வெற்றி பெற்ற புகழ் பெற்ற வழக்குரைஞர் டி.என்.ஆர்.

தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் கணிசமான அளவு கொடை வழங்கியவர்களின் பட்டியலில் வழக்குரைஞர்களுக்கு நிறைய இடம் உண்டு. வேதநாயகம் பிள்ளை, வ.உ.சி, ஜே.எம்.

நல்லுசாமி பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, ரா பி சேதுப்பிள்ளை, கா.சு.பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், சி.கே.சுப்பிரமணிய முதலியார் என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

நான் சேகரித்த தமிழறிஞர்கள் பட்டியலில் 26-க்கு மேற்பட்டவர்கள் தமிழ் அறிஞர்களாகவும் வழக்குரைஞர்களாகவும் வாழ்ந்ததை அறிந்தேன். சிலர் நல்ல வழக்குரைஞர்களாகவும் நல்ல தமிழ் அறிஞர்களாகவும் இருந்தனர். இவர்களில் சிலர் தமிழ் ஆர்வத்தால் வக்கீல் தொழிலை விட்டவர்களும் உண்டு.

இந்தப் பட்டியலில் நல்ல வழக்குரைஞராகவும் தமிழில் ஆழ்ந்த படிப்பும், அர்ப்பணிப்பும் உடையவர்களாகவும் இருந்தவர்களின் வரிசையில் டி. என்.ஆர். என்ற தில்லைத்தானம் நடராஜ அய்யர் ராமச்சந்திர அய்யர் (18 - 8 - 1934 - 6 - 4 - 2021 ) முக்கியமானவர்.

இதுபோலவே அடிப்பொடி என்ற பின்னொட்டு கொண்டவர்கள் சிலர் உண்டு. இவர்களில் கம்பன் அடிப்பொடியான சா.கணேசன் எல்லோரும் அறிந்த அறிஞர். சேக்கிழார் அடிப்பொடி டி.என்.ஆர் ஒருவர்தான். சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு உரை எழுதியவரும் வாழ்க்கை முழுதும் சேக்கிழார் பற்றி செய்தி சேகரித்தவருமான சி.கே.சுப்பிரமணிய முதலியார் கூட தன்னைச் சேக்கிழார் அடிப்பொடி என்று வெளிப்படையாகக் கூறவில்லை. மற்றவர்களும் சொல்லவில்லை.

டி.என்.ஆர் வாழ்ந்த காலத்தில் பல்கலைக் கழகங்களிலும் தனித் தமிழ் அமைப்புக்களிலும் தமிழ் அறிஞர்களிடமும் பெரும் மரியாதைக்கு உரியவராக டி.என்.ஆர் இருந்தாலும் நவீன வாசகரிடமும் ஆசிரியர்களிடமும் பெரிய அளவில் அறிமுகமாகவில்லை. அவர் பெருமளவில் ஆங்கிலத்தில் எழுதியதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இவர் தரமான ஆங்கில மொழிபெயர்ப்பாளர். "பெருமளவில் சைவ நூல்களை மொழிபெயர்த்தவர்'. தமிழில் குறைவாக எழுதியவர் - இப்படி சில காரணங்களால் இவர் வாழ்ந்த காலத்தில் பெருமளவில் பேசப்படாதவராக இருந்திருக்கலாம்.

தஞ்சை வட கிழக்குப் பக்கம் ஒரு தெருவில் 50 எண் கொண்ட வீட்டில் ஊஞ்சலாடும் ஓசையும், பேச்சுச் சத்தமும் கேட்டால் சேக்கிழார் அடிப்பொடி நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார் என்று ஊகிக்கலாம். வீட்டின் உள்ளே சென்றால் சிவந்த மேனி, நெற்றி நிறைய திருநீறு, கழுத்தில் ருத்ராட்சம். வாயில் வெற்றிலை பாக்கை சுவைக்கும் டி.என்.ஆர் ஐச் சுற்றி நண்பர்கள், புத்தகங்கள். அவர் பேசிக்கொண்டே இருப்பார்.

காவிரியின் வடகரையில் இருப்பது திருவையாறு. இதன் மேற்கே ஒரு கல் தொலைவில் திருநெய்த்தானம் உள்ளது. இப்போது இது தில்லைத்தானம் எனப்படுகிறது. இங்கே முதல் பராந்தகன் சோழன் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோவில் உண்டு. நெய்யாடிய பாலாம்பிகை உள்ளார், தில்லைத்தானத்தைச் சுற்றியுள்ள ஏழு கிராமங்களிலும் நடக்கும் திருவிழாக்களில் எடுக்கப்படும் வாகனங்கள் இந்த ஊருக்கு வரும்.

இந்த ஊரில் நடராஜ ஐயர் என்னும் செல்வந்தர் இருந்தார். மனைவி காமாட்சி. இவர்களுக்கு 14 குழந்தைகள். இவர்களில் டி.என்.ஆர் மூன்றாவது மகன். பிறப்பு (18.8.1934) டி.என்.ஆருக்கு இட்ட பெயர் சத்திய மூர்த்தி, பள்ளிக்கூடத்தில் ராமச்சந்திரன்,. தற்காலத்தில் பின்னர் தில்லைத்தான ராமச்சந்திரன் ஆனார். சுருக்கமாக டி.என்.ஆர்.

தந்தை செல்வந்தர் எஸ்.எம்.டி என்னும் பெயரில் பேருந்துக் கழகம் நடத்தினார். சொந்தமாய் நிறைய நிலங்கள் உண்டு அரிசியாலையும் வைத்திருந்தார். சிறந்த நிர்வாகி. இந்தச் சூழ்நிலையில் வளர்ந்தவர் டி.என்.ஆர்.

பள்ளிப்படிப்பு சொந்த ஊரில், இளமையில் ஆங்கிலத்தில் ஈடுபாடு. திருச்சி புனித ஜோசப் கல்லூரியில் பி.காம் முடித்தார். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் படித்தார். உடனே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்துகொண்டார்.

தந்தையின் கட்டாயத்திற்காக தஞ்சை நீதிமன்றத்தில் பதிவு செய்து கொண்டார். புகழ்பெற்ற வழக்குரைஞரின் மகள் கல்யாணியை மணந்தார், தந்தை இறந்தபின் (1967) பேருந்துக் கழகத்தைக் கவனித்துக் கொண்டார். ஆனால் தொழில் நஷ்டக்கணக்குக் காட்டியது. வக்கில் தொழிலில் கவனம் செலுத்தினார். 1994 க்குப் பின்னர் நீதிமன்றத்திற்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டார்.

டி.என்.ஆருக்கு நான்கு மக்கள். எல்லோரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். தந்தையிடம் மிகுந்த மரியாதை வைத்திருப்பவர்கள்.

டி.என்.ஆர் மொழி பெயர்ப்பாளராக உருவாவதற்கு திரிலோக சீதாராமன் சந்திப்பு முக்கிய

காரணம். இது டி.என்.ஆரின் இருபத்தி ஏழாம் வயதில் நிகழ்ந்தது. இந்த இடத்தில் திரிலோக சீதாராம் பற்றி கொஞ்சம் அறிய வேண்டிய அவசியம் இருக்கிறது.

நவீன தமிழ் வாசகன் நோபல் பரிசு பெற்ற ஹெர்மன் ஹெம்ஸேயின் சித்தார்த்தா நாவலின் மொழிபெயர்ப்பின் மூலம் திரிலோக சீதாராமை அறிந்திருப்பான். இவர் உன்னதமான மொழிபெயர்ப்பாளர் என்பதற்கு இந்த நாவல் உதாரணம்.

திரிலோக சீதாராமன் (1917-1973) தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் கவிஞர். பாரதி பாடல்களைப் பரப்பியவர். 'சிவாஜி', 'கிராம ஊழியன்' என்னும் இரண்டு இதழ்களை நடத்தியவர். பாரதியின் மனைவி செல்லம்மா கடையம் ஊரில் கஷ்டப்படுகிறார் என்பதை அறிந்து திருச்சிக்கு அழைத்துச் சென்றவர். செல்லம்மா பாரதியின் இறுதிக்காலத்தில் அவரைக் கவனித்தவர்களில் திரிலோகசீதாராமும் ஒருவர். "இவர் காமராஜின் நெருங்கிய நண்பர்" என்பது இன்னொரு செய்தி.

திரிலோக சீதாராமால் பெருமளவில் பெரிதும் பாதிக்கப்பட்டவர். டி.என்.ஆர். கடைசி வரை இந்த பாதிப்பு இருந்தது. சீதாராம் நடத்திய சிவாஜி இதழில் டி.என்.ஆர் எழுதினார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் இந்த இதழ் வந்தது. இந்த இதழில்தான் பாரதி, சேக்கிழார் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு வந்தது.

டி.என்.ஆர். 1966 முதல் 2004 வரை ஆங்கிலத்திலும் தமிழிலும் 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் 34க்கு மேற்பட்ட புத்தகங்களையும் எழுதி உள்ளார். 'சிவாஜி' 'கணையாழி' போன்ற இதழ்களிலும் சைவ மாநாட்டு மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் முழுதும் தொகுக்கப்படவில்லை.

டி.என்.ஆர் தமிழில் எழுதிய நூல்களில் சேக்கிழார் (சாகித்திய அகாடமி 1995) சிவஞான முனிவர் (சாகித்திய அகடமி 1999) வழி வழி பாரதி (2000) சைவசித்தாந்த கையேடு போன்ற நூல்கள் குறிப்பிடத்தகுந்தவை.

இவரது நூல்களில் பெரும்பாலும் சைவம் தொடர்பானவை அதிகம். மெய்கண்ட சாத்திரங்களான நெஞ்சுவிடு தூது, சிவப்பிரகாசம், திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார், கொடிக்கவி முதலாக பத்துக்கும் மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

தருமபுர ஆதீனம் வழி ஆறாம் திருமுறை, கைவல்லிய நவநீதம், சைவ சித்தாந்த நிறுவனத்தின் வழி பதி பசு பாசம் ஆகியவற்றை மொழிபெயர்த்திருக்கிறார். தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் இவரது பெரியபுராணம் மொழிபெயர்ப்பை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறது. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் திருவாசகம் மொழிபெயர்ப்பை வெளியிட்டது.

பாரதியின் பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, பஞ்சரத்தின கீர்த்தனை உட்பட பல பாடல்களை மொழிபெயர்த்திருக்கிறார். இவற்றில் பல பாடல்கள் சிவாஜி இதழ்களில் வந்தவை.

டி.என்.ஆர் லண்டன் பி.பி.சியிலும் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலும் பாரிஸ் தமிழ்ச் சங்கத்திலும் பேசச் சென்றிருக்கிறார். இவர் வெளிநாடுகளில் கவிதையைப் பற்றி பேசிய பேச்சு Tales and poems of South india என்னும் தலைப்பில் குறுந்தகடாக வெளிவந்திருக்கிறது.

இவர் வாழ்ந்த காலத்தில் சோழநாட்டு வட்டாரத்தில் பெருமைப்படுத்தப் பட்டிருக்கிறார். இவரைப் பற்றி அப்துல்காதர் என்பவர் இயற்றிய சித்திரக்கவிகள் உண்டு.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. இது கொண்டாடப்பட்டது (2001) இந்த விழாவில் இவர் நீண்ட நேரம் உரையாற்றியிருக்கிறார். பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் இவரைப் பேசும்படி வேண்டிக் கொண்டனவாம்.

இவரை சைவ மடங்கள் மிகவும் பாராட்டி இருக்கின்றன. பாரதி நூற்றாண்டு விழாவில் பாரதி சித்தாந்த செம்மல் என்னும் விருதைப் பெற்றார். இதுபோன்று பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்

டி.என்.ஆர் பற்றிப் பேசி முடிக்கும் நேரத்தில் ஒரு விஷயத்தைக் கட்டாயம் சொல்லி ஆக வேண்டும் இவரது சொந்த நூலகம் பற்றி பலரும் வியந்து பாராட்டி இருக்கிறார்கள். இவரது தந்தையின் பெயரால் அமைந்த இந்த நூல் நிலையத்தில் 40,000 நூற்கள் உள்ளனவாம். இந்த நூல் நிலையம் வழி சில புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறார்.

ஒரு முறை ஜெயகாந்தன் இவரது வீட்டுக்குச் சென்றபோது இவரது பெரிய நூல் நிலையத்தைப் பார்த்து மலைத்துப் போய் 'உங்களுக்கு மேதமை எப்படி வந்தது என்பதைத் தெரிந்துகொண்டேன்' என்றாராம்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 365




₹ 275




₹ 180




₹ 460

கட்டுரை

# சர்வாதிகாரப் பெற்றோர்கள்



மருத்துவர். **ப. வைத்திலிங்கம்**

பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தை பிறக்கும் முன்பாகவே எப்படி எல்லாம் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று கனவு கண்டு திட்டம் போட ஆரம்பித்து விடுவார்கள். பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்ற புதிர் ஒரு பக்கம் இருந்தாலும், ஆணாக இருந்தால் எப்படி வளர்ப்பது, பெண்ணாக இருந்தால் எப்படி வளர்ப்பது என்ற சிந்தனை அவர்கள் மனதில் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். தங்கள் குழந்தை அனைவரின் பாராட்டுதலுக்கும் உரிய பண்புகளுடன் வளர வேண்டும் என்று விரும்புவார்கள். அதற்காக பெற்றோர்கள் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளில் ஒன்று, குழந்தைகள் நல்ல முறையில் வளருவதற்கான அன்பும், அக்கறையும், பாராட்டும், கண்டிப்பும் உள்ள உணர்வுபூர்வமான சூழல் வீட்டில் அமையும்படி பார்த்துக்கொள்வது.

தங்கள் குழந்தையை வளர்க்க பெற்றோர்கள் முன்னெடுக்கும் முறைகளைப் பார்க்கும் போது அவர்களிடையே நிறைய வேறுபாடுகள் தெரிகின்றன. அவர்களின் குடும்பச் சூழலுடன் தாங்கள் சார்ந்துள்ள சமூகம், கலாச்சாரம், மொழி, நாடு என பல்வேறு காரணிகளும் சேர்ந்து அவர்களின் குழந்தை வளர்ப்பு முறையைத் தீர்மானிக்கின்றன.

> “முதலில் ‘சொன்னதைச் செய், எதிர்த்துப் பேசாதே’ என்பார்கள். குழந்தைகள் எப்போதும் பெற்றோர்கள் பேச்சுக்கு மறுவார்த்தை சொல்லாமல் கீழ்ப்படிய வேண்டும் என்று நினைப்பார்கள்.”

நம் இந்தியா உள்பட அனைத்து கிழக்காசிய நாடுகளிலும் குழந்தைகளை அதிகப்படியான கட்டுப்பாடுகளுடன் வளர்க்க விரும்புகிறார்கள். நல்லொழுக்கம், கீழ்ப்படிதல், மரியாதை, உண்மை பேசுதல், நேர்மை போன்ற குணங்களுக்கு எல்லோரும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் அதற்காக சில பெற்றோர்கள் மிகுந்த கண்டிப்புடன் சில நேரங்களில் தண்டித்தும் வளர்க்க முற்படும்போது அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை கரடு முரடாகி விடுகிறது. இந்த முயற்சி கொஞ்சம் சுதந்திரத்தோடு வளர விரும்பும் குழந்தைகளுக்கு பலன் அளிக்க மாட்டேன் என்கிறது.

DIANA BAUMRIND என்ற அமெரிக்க உளவியல் நிபுணர் 1967இல் பெற்றோர்கள் குழந்தைகளை எப்படி வளர்க்கிறார்கள்? என்று ஆராய்ச்சி செய்து முடிவுகளை வெளியிட்டார். அவர் தனது ஆராய்ச்சிக்கு இரண்டு முக்கியமான கேள்விகளை எடுத்துக்கொண்டார். 1.குழந்தைகளிடம் பெற்றோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? 2. குழந்தைகளின் தேவைகளான அன்பு, அரவணைப்பு, அக்கறை, கண்டிப்பு போன்றவைகளுக்கு பெற்றோர்கள் எவ்வாறு ஈடு கொடுக்கிறார்கள்?

மேலே சொன்ன இரண்டு கேள்விகளுக்குக் கிடைத்த பதில்களில் இருந்து குழந்தை வளர்க்கும் முறையை 3 வகைகளாகப் பிரித்தார். அதில் ஒரு வகைதான் இந்த AUTHORITARIAN PARENTING என்று சொல்லப்படும் சர்வாதிகாரக் குழந்தை வளர்ப்பு முறை. இந்த முறையில் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களுக்கு குழந்தைகளிடம் இருந்து எதிர்பார்ப்புகள் மிகமிக அதிகமாக இருக்கும். ஆனால் குழந்தைகளின் தேவைகளுக்கு இவர்களின் பங்களிப்பு மிகமிகக் குறைவு. நாம் அன்றாடம் இவ்வகையான பெற்றோர்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்

**இவர்களை எப்படி அடையாளம் காணுவது?**

வீட்டில் இவர்களின் சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையானவை. மிலிட்டரி ரூல்தான். சர்க்கஸ் ரிங் மாஸ்டரைப் போல எப்போதும் குழந்தைகள் மீது ஆதிக்கம். முதலில் ‘சொன்னதைச் செய், எதிர்த்துப் பேசாதே’ என்பார்கள். குழந்தைகள் எப்போதும் பெற்றோர்கள் பேச்சுக்கு மறுவார்த்தை சொல்லாமல் கீழ்ப்படிய வேண்டும் என்று நினைப்பார்கள். இவர்களுக்குக் கண்டித்து வளர்ப்பதை விடவும் தண்டித்து வளர்ப்பதில் நம்பிக்கை அதிகம். குழந்தைகளின் விளக்கத்தையோ பேச்சையோ கேட்க மாட்டார்கள். இவர்களும் குழந்தைகள் லெவலுக்கு மனதளவில் இறங்கி வந்து ஏன் எதற்கு என்று குழந்தைகளிடம் விளக்குவதோ விவாதிப்பதோ கிடையாது.

குழந்தைகளிடம் இருந்து இவர்களுக்கு எதிர்பார்ப்புகள் மிகவும் அதிகமாக இருக்கும். எதிலும் முதல்வனாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் அதற்காகக் குழந்தைகள் மீது அக்கறையையும் அன்பையும் காட்டி ஊக்குவிக்க மாட்டார்கள். நம் குழந்தை இந்தச் செயலை நன்றாகச் செய்து முடிப்பான் என்று நம்ப மாட்டார்கள். அந்த செயலைச் செய்து முடிக்கக் குழந்தைக்கு உதவுவதோ அல்லது குழந்தையின் முயற்சியைப் பாராட்டுவதோ கிடையாது. எப்போதும் குழந்தைகளிடம் இருந்து மனதளவில் தள்ளியே இருப்பார்கள்.

இவர்களால் குழந்தைகள் செய்யும் சிறுசிறு தவறுகளைக் கூட தாங்க முடியாது. வார்த்தைகளாலும் சில நேரங்களில் அடித்துத் துன்புறுத்தியும் குழந்தைகளை அவமானப்படுத்தி விடுவார்கள். மீண்டும் செய்யாதே என்று கண்டித்து அறிவுறுத்தி விட்டுவிட மாட்டார்கள். செய்த தவறை மன்னித்து மறந்து குழந்தைகளோடு அன்பாகப் பேசவும் தெரியாது. குழந்தைகளைத் தண்டித்து விட்டோமே என்று பின்னர் வருத்தப்படவும் மாட்டார்கள். பொதுவாகவே இவர்களுக்கு குழந்தைகள் மீது உள்ள பாசத்தைக் காண்பிக்கத் தெரியாது. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டான் என்பார்கள். கோபத்தை எப்படி வெளிப்படுத்துவது என்பதை இவர்கள் தாங்கள் அறியாமலேயே தங்கள் குழந்தைக்கும் சொல்லிக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள்.

இந்த வகைப் பெற்றோர்களுக்கு சமுதாயம் மிகவும் இரக்கமற்றதாகவும் கொடூரமானதாகவும் தோன்றுவதால் அதில் தங்கள் குழந்தை எப்படி வாழப்போகிறான் என்ற மனக்கவலை அதிகம் இருக்கும். தாங்கள் சார்ந்துள்ள சமூகம், கலாச்சாரம் போன்றவைகள் போதித்து வரும் நெறிமுறைகள் பிறழாமல் குழந்தையை வளர்க்க முற்படுவார்கள். அம்மாதிரியான கடின வாழ்க்கைக்குத் தங்கள் குழந்தையைத் தயார்படுத்தவே இப்படிக் கட்டுப்பாடும் தண்டனையும் சேர்ந்த குழந்தை வளர்ப்பு முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். எல்லாமும் குழந்தைகளின் நன்மைக்குத்தான் என்று நினைத்துக் கொள்வார்கள்.

தாங்கள் குழந்தைகளாக இருந்த போது எவ்வாறு தங்கள் பெற்றோர்கள் அவர்களை வளர்த்தார்கள் என்ற எண்ணம் அவ்வப்போது இவர்கள் மனதில் ஓடும்.

**குழந்தைகளுக்கு என்ன பாதிப்புகள் வரலாம்?**

இம்மாதிரி மிகுந்த கட்டுப்பாட்டோடு கொஞ்சம் கூட சுதந்திரம் இல்லாமல் வளரும் குழந்தைகள் மகிழ்ச்சியாக வளருவதில்லை . எப்போதும் தன்னம்பிக்கையின்றி தனிமை விரும்பிகளாக குற்ற உணர்வோடு இருப்பார்கள். இவர்களிடத்தில் அதிகமான கீழ்ப்படிதலும் மனச்சோர்வும் தென்படும். மற்றவர்களிடத்தில் உரையாடும் போது தன்னுடைய கருத்தை உரக்கச் சொல்லவோ அல்லது பிறரின் கருத்தை விமரிசித்தோ பேசப் பயப்படுவார்கள். தனித்துவமும் வளராமல், சுயமாகச் சிந்தித்து முடிவும் எடுக்கத் தெரியாமல் மிகவும் தடுமாறுவார்கள். சில நேரங்களில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தாம்தான் காரணம் என்ற குற்ற உணர்வும் வந்து விடும். பின்னாளில் இவர்கள் மனநோயால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக மனவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



விடலைப்பருவம் ஆரம்பித்து பெற்றோர்களின் பிடி தளரும்போது முரட்டுத்தனமும், கோபமும், பிடிவாதமும் வந்து விடும். ஒரு சில குழந்தைகள் மனச்சோர்வு, மன அழுத்தம், குற்ற உணர்வு, தற்கொலை எண்ணம் போன்றவைகளாலும் பாதிக்கப் படுகிறார்கள். கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் சில நேரங்களில் இளங்குற்றவாளிகள் என்ற அளவுக்குப் போய் விடுகிறார்கள்.

**பெற்றோர்கள் என்ன செய்யலாம்?**

எல்லாப் பெற்றோர்களும் தங்கள் குழந்தை எல்லோரையும் மதித்து நடப்பவனாக, நல்ல பண்புகள் நிறைந்தவனாக உடன்பிறந்தவர்களையும் பெற்றோர்களையும் அரவணைத்துச் செல்பவனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். மிகுந்த கட்டுப்பாடு, தண்டித்தல் என்று வளர்க்கும் பெற்றோர்களும் தங்கள் குழந்தையின் எதிர்காலம் என்ற நினைப்பில்தான் செய்கிறார்களே ஒழிய, குழந்தையைத் தண்டித்து துன்புறுத்த வேண்டும் என்று செய்வதில்லை. இப்படி மிலிட்டரி ரூல் போட்டு வளர்க்கும் பெற்றோர்களுக்கும் அதனால் பின்னாளில் குழந்தைக்கு ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் பற்றியும் தெரிவதில்லை . எனவே இந்தக் கடுமையான கட்டுப்பாட்டுடன் கூடிய குழந்தை வளர்ப்பு முறை குழந்தையின் மன நலத்திற்கு நல்லதல்ல என்பதை முதலில் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மனவியலாளர்கள் குழந்தை வளர்ப்பு முறையைப் பல விதமாகப் பிரித்து ஆராய்ந்தாலும் பெரும்பாலான குடும்பங்களில், எல்லோரும் ஒரே மாதிரியான வளர்ப்பு முறையைக் கையாளுவதில்லை. ஒவ்வொருவரின் அணுகுமுறையிலும் நிறைய வித்தியாசங்கள். அப்பா கட்டுப்பாடுடன் இருந்தால் அம்மா அன்பையும் அக்கறையையும் அதிகம் காட்டுவார். இல்லையென்றால் தாத்தா பாட்டி அன்புடன் வளர்ப்பார்கள். இப்படி வீட்டில் உள்ளவர்கள் குழந்தையைக் கையாளும் விதம் வெவ்வேறாக இருப்பதால், இந்த மிலிட்டரி கட்டுப்பாடுகளின் தாக்கமும் குழந்தைகள் மீது முழுமையாகப் படுவதில்லை. சில குடும்பங்களில் ஆண் குழந்தையை ஒரு பாணியிலும் பெண் குழந்தையை இன்னொரு பானியிலும் வளர்ப்பார்கள். இப்படி குடும்பத்தில் உள்ள அனைவரின் தாக்கமும் சேர்ந்து சம நிலைப்படுத்த முயற்சிப்பதால்தான் பெரும்பாலான குடும்பங்களில் குழந்தைகள் அதிகம் பாதிக்காமல் வளர்கிறார்கள்.

நம் இந்தியா, சீனா போன்ற கிழக்காசிய நாடுகளில் பெரும்பாலும் இம்மாதிரி கண்டிப்புடன் குழந்தை வளர்க்கும் முறைதான். வாழ்க்கை நெறிமுறைகளுக்கும், சமூகக், கலாச்சாரக் கட்டுப்பாட்டுக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வளர்க்கிறார்கள். ஆனால் தற்போது உலகம் எவ்வளவோ மாறி விட்டது. குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து கற்றுக்கொள்வதை விடவும் வெளி உலகத்தில் இருந்து நிறையக் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகள் மீது வெளி உலகத்தின் தாக்கம் மிகமிக அதிகமாக உள்ளது. பெற்றோர்கள் பயப்படுவது போலவே குழந்தைகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளும் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. கட்டுப்பாடு என்ற பெயரில் குழந்தைகளின் இறக்கையை ஆரம்பத்திலேயே ஒடிப்பதை நிறுத்திவிட்டு பெற்றோர்கள் கொஞ்சம் இறங்கி வந்து குழந்தைகளுக்கும் இடம் கொடுத்து, ஒவ்வொரு செயலையும் விளக்கி, அவர்களையும் பேச விட்டு, தைரியம் கொடுத்து தன்னம்பிக்கையுடன் வளர்க்கலாமே! அதனால் குழந்தைகளுக்கும் இந்த உலகத்தை எளிதாக எதிர்கொள்ளும் பக்குவம் வந்து விடுமே!


●

கட்டுரையாளர் குழந்தைகள் உடல்நலம்
மற்றும் மனநல மருத்துவர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 80




₹ 270




₹ 200





₹ 230




# மார்க்சின் நுணுக்கமான பார்வைகளை நாம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை

**அ.மார்க்ஸ்**



**NCBH நிறுவனம் மார்க்ஸ் – ஏங்கல்ஸ் எழுத்துக்களின் தேர்ந்தெடுத்த படைப்பு ஒன்றை 20 தொகுதிகளாக வெளியிட்டுள்ளதையும், அந்த ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு அறிமுக / விளக்க உரையாக முத்துமோகனின் கட்டுரை ஒன்றும் முன்னுரையாக எழுதப்பட்டதையும் தோழர்கள் அறிவார்கள். சென்ற மாதம் முத்துமோகனின் இந்த விளக்க உரைகள் மட்டும் ஒரு தனி நூலாகத் தொகுக்கப்பட்டு எனது விரிவான முன்னுரையுடன் அந்த நூல் வெளி வந்தது (படைப்பின் அற்புதத் தருணங்கள், பக். 232). அந்த நூலை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.**

**ஒன்று**

*(i): கார்ல் மார்க்ஸ் அடிப்படையில் ஒரு தத்துவச் செயல்பாட்டாளர். (Political scientist). அரசியல்வாதி, கோட்பாட்டாளர், ஏராளமாக எழுதிக் குவித்தவர். சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சியின் பின்புலத்தில் மார்க்சியம் பொருளற்றுப் போனதாக சாமுவேல் ஹட்டிங்டன் போன்ற வலதுசாரி எழுத்தாளர்களால் முன்மொழியப்பட்டன. "இனி வர்க்கப் போராட்டம் என்பதற்குப் பொருள் இல்லை" என்கிற கருத்தும் வலுவாக முன்வைக்கப்பட்டது.*

*இப்படியான முதலாளித்துவப் பிரச்சாரம் ஏற்புடையவைதானா? நோபல் பரிசுபெற்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் போன்ற அறிஞர்கள் தாங்கள் ஒரு காலத்தில் அப்படிச் சொன்னதை இன்று அவர்களே மறுத்துள்ளனர். இன்று உலக அளவில் கோவிட் 19 தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொண்ட நாடுகளாக இன்றளவும் ஓரளவு மார்க்சியப் பொருளாதாரத்தை முற்றிலும் உதறித்தள்ளாத சீனா, ஃபிடல் காஸ்ட்ரோவின் கியூபா முதலான நாடுகளே குறிப்பிடப் படுகின்றன. கோவிட் தாக்குதலை குறிப்பிடத்தக்க வகையில் ஒப்பீட்டளவில் அவைதாம் வெற்றிகொண்டன.*

*மார்க்சின் எழுத்துக்களை ஒரு தத்துவவியலாளர் எழுதிய பொருளாதார ஆய்வு எனலாம். அவற்றை முழுமையாக, நுணுக்கங்களுடன் மொழிபெயர்க்கும் அளவிற்கு இங்கே ஆட்களும் இல்லை. கட்சி வகுப்புகளிலும் கூட அவை நுணுக்கமாக விளக்கப்படுவதில்லை. சந்தித்த பிரச்சினைகளும் எல்லா நாடுகளிலும் ஒன்றேபோல இருப்பதில்லை. கால மாறுபாடுகளும் இப்படிப் புரியாமல் போவதில்*

ஒரு பங்கு வகிக்கின்றன. NCBH இன் இந்த 20 தொகுப்புகளும் இப்படியான பின்னணியில்தான் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் முத்துமோகன் இந்தக் கட்டுரைகளுக்கு எழுதியுள்ள இந்த விளக்கக் கட்டுரைகளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்கிறோம்.

(ii): உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது என்பது ஓரளவில் இன்றைய சூழலை விளக்கி நின்றாலும் இந்த நாடுகள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகள் தொடரத்தான் செய்கின்றன. அதே போல மத, இன அடிப்படையிலான வேறுபாடுகளும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. ஒரே நாடுகளுக்குள் உள்ள பெரும்பான்மை X சிறுபான்மை எனும் வேறுபாடுகளும் இன்று நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றன.

(iii). மார்க்ஸ் எல்லாவற்றையும், அன்று தனக்குக் கிடைத்த ஆதாரங்களின் பின்னணியில் மிக நுட்பமாக விளக்குவதை நாம் கவனமாகப் புரிந்து கொள்ளல் அவசியம். உலக இலக்கியங்களையும், உலகச் சூழலையும் ஆழமாக அவர், தனக்கு அன்று கிடைத்த சொற்பமான ஆதாரங்களின் உதவியுடன் விளக்குகிறார். வட இந்தியர்களை 'இந்துக்கள்' எனச் சொல்லும் மார்க்ஸ் தென்னிந்தியர்களை அப்படிச் சொல்வதில்லை. அவர்களை அதாவது மராத்தி, தமிழ், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளைப் பேசுவோரை, தக்காணம் பகுதி முதலானவற்றில் வசிப்போரை அவர் வடவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது முதலியவற்றை எல்லாம் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(iv). சோஷலிசக் கட்டுமானம், புரட்சிக்குப் பிந்திய சமூகம் முதலியன பற்றி, எல்லாம் பேசினாலும் 'சோஷலிச எதார்த்தவாதம்' என்றெல்லாம் அவர் பேசியதில்லை. அப்படி ஒரு இலக்கியக் கொள்கையை எல்லாம் கற்பித்துக் குழம்பிப், பின்னர் இப்போது அவற்றைக் கைவிட்டு நிற்பதெல்லாம் அதற்குப் பிந்திய நாம்தான் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ருஷ்யா முதலான சோஷலிச நாடுகளின் வீழ்ச்சிக்குப் பின் நாம்தான் 'சோஷலிச எதார்த்தவாதம்' எனும் இலக்கியக் கொள்கையையும். 'பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்' எனும் அரசியல் கொள்கையையும் கைவிட்டோம் என்பதை மறந்துவிடல் ஆகாது.

(v) 'புரட்சிக்குப் பிந்திய சமூகம்' குறித்த நமது கருத்துக்களை இன்று மார்க்சியர்கள் முற்றாகப் புறக்கணிப்பது கவனத்துக்குரியது. மார்க்சின் நுணுக்கமான பார்வைகளை நாம் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. மார்க்ஸ் மிக ஆழமாக உலக இலக்கியங்களைப் படித்தவர் மட்டுமல்ல, அவற்றைத் தன் எழுத்துக்களில் பயன்படுத்தியவர். "முதலாளியம் தன் சாயலிலேயே உலகத்தைப் படைக்கிறது" என்றார் மார்க்ஸ். அது பைபிளில் இருந்து எடுத்துக் கொண்ட ஒரு கோட்பாட்டை விமர்சன நோக்கில் முதலாளியத்தை விமர்சிக்கப் பயன்படுத்திய சொல்லாக்கம். "கடவுள் தன் சாயலில் உலகத்தைப் படைத்தார்" எனும் பைபிள் வாசகத்தைத்தான் மார்க்ஸ் அப்படிக் கிண்டலாகப் பயன்படுத்தினார். ஆனால் நாம் அதை அவ்வாறு நுணுக்கமாக எடுத்துக்கொள்ளாமல் முதலாளிய பாணியிலேயே, சொல்லப்போனால் இன்னும் இறுக்கமாக சோஷலிச நாடுகளைக் கட்டமைத்தோம். அதன் விளைவு எப்படி ஆனது என்பதை இப்போது நாம் விளங்கிக் கொள்கிறோம். சோஷலிச நாடுகள் உண்மையான சோசலிஷச் சமூகங்களாக அமையவில்லை. மக்களால் அவை தூக்கி எறியப்பட்டதை நாம் 1980களில் கண்முன் கண்டோம்.

(vi). "பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம்" - என நாம் முன்வைத்த கருத்தாக்கம் எப்படி ஒரு சோஷலிச நாட்டுக்குப் பொருத்தமாக இருக்க இயலும்? சர்வாதிகாரம் என்றால் அது சர்வாதிகாரம்தானே. அதைப் பாட்டாளிவர்க்கம் செய்தால் என்ன? முதலாளிவர்க்கம் செய்தால் என்ன? ருஷ்யா உள்ளிட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளால் ஆளப்பட்ட நாடுகள் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பொலபொலவென வீழ்ந்ததை நாம் இப்படிப் பார்ப்பது அவசியம். சுருங்கச் சொல்வதானால் "பாட்டாளிவர்கச் சர்வாதிகாரம்", "சோஷலிச எதார்த்தவாதம், முதலியன" மார்க்சியம் அல்ல.

**இரண்டு**

(i). மனிதனின் தேவைகள் வெறும் பசி ஆறுவது மற்றும் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வது ஆகியவற்றோடு முடிவடைவதில்லை. சுரண்டல் அநீதியானது எனச் சொல்வதோடும் அது முடிவடைவது இல்லை. மாறாக சுரண்டல் என்பது முதலாளியத்தின் தர்க்கபூர்வமான விளைவு என்பதை மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். ஆக முதலாளியம் அறிவுக்குப் புறம்பானது (irrational) என்பதே மார்க்சியம்.

(ii). புத்திசாலித்தனமான கண்டுபிடிப்புகளை முதலாளியம் மக்களுக்குச் சாதமான அறிவியல் வெளிப்பாடுகளாக அது ஏற்பதில்லை. மேலும் மேலும் லாபம் சம்பாதிக்கும் ஒரு வழியாகவும், மூலதனத்தைக் குவித்துக் கொண்டே போகும் வழியாகவும் மட்டுமே அது பார்க்கிறது. ஆனால் அதனால் என்ன பயன்? எந்திரங்கள் நுணுக்கமாகிக்

கொண்டே போகின்றன. ஆனால் தொழிலாளிகளின் வேலை நேரம் கூடிக்கொண்டுதானே போகிறது? அதனூடாகச் சுரண்டல் அதிகமாகிக் கொண்டுதானே போகிறது? 'சுரண்டல்' அதிகமாவது என்பது தொழிலாளிகள் ஏதுமற்றவர்களாக, எல்லா அதிகாரங்களும் அற்றவர்களாக (precariat) ஆவதற்குத்தானே இட்டுச் செல்கிறது.

(iii). நினைவிருக்கட்டும். முதலாளிகளும் இன்று நிம்மதி அற்றவர்களாகவே உள்ளனர். பொருளாதார நெருக்கடிகளை அவர்களால் தவிர்க்க இயலவில்லை. சோஷலிச அரசுகள் வீழ்த்தப்பட்டபின் இங்கே (2008 இல்) என்ன நடந்தது. உலகம் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியையும், வீழ்ச்சியையும் சந்திக்கவில்லையா?

**மூன்று**


மார்க்சியம் ஒரு தத்துவப் பாரம்பரியத்தில் முகிழ்த்த ஒன்று. மார்க்ஸ் அடிப்படையில் ஒரு தத்துவ இயலாளர் என்பதை நாம் மறக்கக் கூடாது. மார்க்சியத்தின் மூன்று பரிமாணங்கள்:

(i).ஹெகல் மற்றும் ஃபாயர்பாக்கின் தத்துவார்த்தப் பாரம்பரியத்தில் வந்தவர் மார்க்ஸ்.

(ii). மார்க்ஸ் முதலாளியத் தத்துவார்த்தப் பாரம்பரியத்தில் வந்தவர். உழைப்புச் சுரண்டல் குறித்த ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டவர்.. "உபரி மதிப்பு" உருவாக்கம் குறித்த கோட்பாட்டை உருவாக்கியவர் அவர். ஒன்றுமே இல்லாமல் முதலாளிக்கு லாபம் எப்படி வருகிறது: போட்ட முதல் முழுமையாக முதலாளிக்குக் கிடைத்துவிடுகிறது. பின் எப்படி அவனுக்கு லாபம் உருவாகிறது. தொழிலாளியின் உழைப்பிற்கு முழுமையான ஊதியம் கொடுக்கப் படுவதில்லை. கொடுக்கும் ஊதியத்தைக் காட்டிலும் உபரி உழைப்பை அவன் அளிக்கிறான். அதுவே முதலாளியில் லாபமாகத் திரள்கிறது.

(iii). மார்க்ஸ் ஒரு அரசியல்வாதி. பாட்டளி வர்க்க அரசியல்வாதி.

ஹெகல், ஃபாயர்பாக் எனும் இரு தத்துவவியலாளர்களின் பாரம்பரியத்தில் வந்தவர் மார்க்ஸ் என்றாலும் இந்த இருவரின் தத்துவங்களையும் அப்படியே ஏற்றுக் கொண்டவர் அல்ல. ஹெகலின் தத்துவம் இரு கூறுகளைக் கொண்டது. அவர் கருத்துமுதல்வாதி. கடவுளின் இருப்பை ஏற்பவர். மார்க்ஸ் அதை ஏற்பதில்லை. ஆனால் ஹெகல் ஒரு இயங்கியல்வாதி. எல்லாம் மாறிக்கொண்டும், இயக்கத்திலும் உள்ளது என்பது அவர் கருத்து. மார்க்ஸ் அதை ஏற்கிறார். "பழையன கழிதலும், புதியன புகுதலும் வலுவலகால வகையினானே " என்பது செய்யுள்.



நவீன காலம் (Modern Age) என்பது மதத்தின் பிடியிலிருந்து அனைத்தையும் விடுதலை செய்தது. நியூட்டன் முதலானோரின் விஞ்ஞான வளர்ச்சிகளால் ஊக்கப்பட்ட காலம் அது. மதத்தின் ஆதிக்கத்தை எதிர்த்த பெரும் சிந்தனைக் கிளர்ச்சி ஒன்று மேற்குலகில் அப்போது ஏற்பட்டது. மிகக் கடுமையான விமர்சனங்கள் மதத்தின் மீது, குறிப்பாக மேலைச்சூழலில் கிறிஸ்தவத்தின் மீது வைக்கப்பட்டன. அப்படியானவர்களில் ஒருவர்தான் மார்க்சின் ஆளுமை உருவாக்கத்தில் இடம் பெற்ற இந்த இன்னொரு முக்கிய தத்துவவியலாளரான ஃபாயர்பாக்.

"மனிதனின் ஆக உன்னதமான உணர்வான 'உண்மை' குறித்த உணர்நிலையை மதம் விஷம் ஊட்டி அழிக்கிறது"; எனவும் "மதம் என்பது மனித மனத்தின் (வெற்றுக்) கனவு; இன்றைய யுகத்தில் மாயைகளே புனிதமாகப் போற்றப்படுகின்றன, உண்மைகள் அற்பமாக அலட்சியம் செய்யப்படுகின்றன." எனவும்- மதத்தைக் கடுமையாகச் சாடியவர் அவர். அவரைப் பொருத்தமட்டில் எல்லாவிதமான மத வெளிப்பாடுகளும் நிறைவேற்றப்படாத மனித ஏக்கங்களின் கருத்துருவாக்கப்பட்ட பிம்பங்கள்தான்; கடவுள் என்னும் மாயைதான்.

ஹெகலைப்போல் அல்லாமல் ஃபாயர்பாக் கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது..

ஹெகல், ஃபாயர்பாக் என்கிற சமகால இரு முக்கிய தத்துவ ஆளுமைகளால் உந்தப்பட்டவர்தான் மார்க்ஸ் எனில் அவரது தனிப்பட்ட பங்களிப்பு என்பது என்ன?

மார்க்ஸ் இந்த இரு மகத்தான சிந்தனையாளர்களாலும் ஊக்கப்பட்டவர்தானே ஒழிய அவர்களை அப்படியே ஏற்றுக் கொண்டவர் அல்ல. இருவரையும் ஏற்றுக்கொண்டார், ஆனால் அப்படியே அல்ல. இருவரையும் 'தலைகீழாக்கி' ஏற்றுக்கொண்டார் என்பர். அவர்களின் கருத்துக்களைக் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழல்களுடன் பொருத்தினார். ஹெகலின் கருத்துமுதல்வாதமும், ஃபாயர்பாக் முன்வைத்த கருத்துக்களை முதன்மைப்படுத்தாத அணுகல்முறையும்- இரண்டுமே ஓரம்சத்தில் இணைந்துபோவதை மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். தூலமான சமூக நிலைகளை, அதாவது வரலாற்றை அவை இரண்டுமே புறக்கணிப்பதுதான் அது. சமூக மாற்றங்களைப் புரிந்துகொள்ள ஹெகலின் சிந்தனை ஒரு சிறந்த கருவிதான். ஆனால் இந்த மாற்றங்கள் என்பன சமகாலப் பொருளியல் சூழல்களிலிருந்து உருவாவதை அவர் பார்க்கத் தவறினார். அதை வெறும் ஒரு 'உலக ஆன்மா' அல்லது 'உலக இயக்கு சிந்தனை' என்பதன் வெளிப்பாடு என நிறுத்திக் கொண்டதே ஹெகலின் பிரச்சினை.

அதேபோல ஃபாயர்பாக்கின் மதம் குறித்த விமர்சனமும் தூலமான எதார்த்தங்களின் அடிப்படையில் அமையவில்லை. மனிதன் தன் ஏக்கங்களையும், எதார்த்தத்தில் நிறைவேற்றிக் கொள்ள இயலாத தன் தேவைகளையும் ஆசைகளையும் அவன் மதத்தில் ஏற்றி ஆறுதல் தேடினான் என்றார் ஃபாயர்பாக். அந்த வகையில் கடவுளும் மனிதனும் வேறு வேறல்ல. "கடவுள்தான் மனிதன்; மனிதன்தான் கடவுள்" எனவும் "இறையியல் என்பது வேறொன்றுமில்லை; மானுடவியல்தான் (anthropology) இறையியல்" எனவும் ஃபாயர்பாக் கூறியதன் பொருள் இதுதான். தான் வாழ்வில் சாதிக்க இயலாத அனைத்தையும் மனிதன் கடவுளிடம் ஏற்றி ஆறுதல் கண்டான். "மனிதன் தன் வடிவில் கடவுளைப் படைத்துக் கொண்டான்" என இறையியல் (Theology) சொல்வதன் பொருள் இதுவே. "பாவங்களிலிருந்து" (sins) விடுபட இயலாத தன் இயலாமையை அவன் கடவுளின் புனிதத்தன்மையில் ஏற்றி வைத்து ஆறுதல் கண்டான். தனது படைப்பாற்றல் தன்னிடமிருந்து கைநழுவிப் போனதை (அந்நியமானதை) அவன் அளவிடற்கரிய படைப்பாற்றல் மிக்கவராகக் கடவுளைக் கற்பிப்பதன் மூலம் தீர்த்துக் கொண்டான். சமூகத் தீமைகளை அழிக்க இயலாதத் தன் கையாலாகாத்தனத்தை எல்லாத் தீமைகளையும் அழிக்க வல்லவராகக் கடவுளைக் கற்பிப்பதன் மூலம் மறைத்துக் கொண்டான் அல்லது தன் நினைவிலிருந்து ஒளித்துக் கொண்டான்.

1841 ல் The Essence of Christianity எனும் ஃபாயர்பாக்கின் (Feuerbach) நூல் வெளிவந்தது. 'மனிதனின் கையாலாகாத் தன்மையே கடவுளின் பிறப்பிடம்' என அவர் அதில் குறிப்பிட்டார். தான் என்னவாக விரும்பினானோ அவ்வாறே மனிதன் கடவுளைப் படைத்தான். மனிதப் பண்புகளை தெய்வீகமாகக் கட்டமைக்கும்போதே மதம் என்பது உண்மையாகிறது. 'இறையியல்' எனும் பெயரில் கடவுளை மனிதரிடமிருந்து வேறுபடுத்திப் பிரிக்கும்போது அது பொய்யாகிறது என்று கூறிய ஃபாயர்பாக் கிறிஸ்தவம் மானுடரின் அரசியல் ஆற்றலை அழிக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார். மேலைச் சூழலில் அவர் கிறிஸ்தவம் எனக் கூறியது எல்லா மதங்களுக்கும் பொருந்தும்.

இவ்வாறு மனிதனின் உண்மையான இருப்பு குறித்த உணர்நிலையை மதம் அழிக்கிறது, அவனது அரசியல் உணர்வை மழுங்கடிக்கிறது என்பதை எல்லாம் ஃபாயர்பாக் மிகச் சரியாக அடையாளம் கண்டாரே ஒழிய அது எவ்வாறு அழிக்கப்பட்டுகிறது, அதன் நோக்கம், பின்னணி, செயல்முறை, அவற்றில் வர்க்கங்களின் பாத்திரம் ஆகியவற்றை அவர் பேசவில்லை என்பதை மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.

இந்தப் பின்னணியில்தான் 1848 இல் மார்க்ஸ் - எங்கல்சின் 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' வெளிவந்தது. "இதுவரை வரலாற்றில் கண்ட சமூகங்களின் வரலாறுகள் அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே" எனும் புகழ்பெற்ற வாசகத்தை அது கொண்டிருந்தது. ஆக, வரலாற்றின் உண்மையான இயக்குவிசை என்பது உண்மையான வர்க்கங்களுக்கிடையே நிகழ்ந்த உண்மையான வர்க்கப் போராட்டங்களின் விளை பொருளே. இந்த உண்மையான வர்க்கப் போராட்டங்கள் உண்மையான வரலாற்று மாற்றங்களுக்குக் காரணமாயின. இந்த வரலாற்றின் ஊடாகப் புதிய வர்க்கங்கள் உருவாயின. இவற்றுக்கிடையே புதிய வர்க்கப் போராட்டங்கள் உருவாயின. எதை அழித்து எது முகிழ்த்ததோ அதை அழித்து அடுத்தது முகிழ்க்கும் என ஹெகல் கூறியதன் பொருள் இதுவே. இப்படிப் புதிதாக உருவான மாற்றங்களின் ஊடாகப் புதிய பார்வைகளும் புதிய சிந்தனைகளும் உருவாகும் என்பது பொருள்.

1871 இல் உருவாகி ஒரு 71 நாட்களில் கருகிப்போன முதல் கம்யூனிஸ்ட் ஆட்சி - பாரிஸ் கம்யூன் - குறித்துச் சில சொற்கள் இங்கே பதிவு செய்வது அவசியம். 'பிரான்சில் உள்நாட்டுப்போர்' எனும் தலைப்பில் அந்த இருமாத கால கம்யூனிஸ்ட் ஆட்சி குறித்து கார்ல் மார்க்ஸ் அப்போது எழுதினார். "மாபெரும் வரலாற்றுச் சம்பவம் நடந்திருக்கும்போதோ இல்லை அப்போதுதான் முடிவடைந்திருக்கும்போதோ அதன் முக்கியத்துவம், தன்மை, விளைவுகள் ஆகியன

குறித்து எழுதியவர் கார்ல் மார்க்ஸ்" - என இது குறித்து எங்கல்ஸ் எழுதியுள்ளது குறிப்பிடத் தக்கது.

தொழிற் புரட்சிக்குப் பின், ஒரு நூற்றாண்டுகால தொழிலாளர் இயக்கங்களுக்குப் பின் தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்திய எழுச்சியின் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றிய நிகழ்வு அது. மார்க்சியத்திற்குள் பல்வேறு விவாதங்கள் நடந்து கொண்டிருந்த சூழலில் உருவானது அது.

அன்றைய சூழலை சரியாக விளங்கிக் கொண்டு திட்டவட்டமான வடிவத்துடன் அரசு உருவாக்கப்படவில்லை எனும் விமர்சனமும் அதன்மீது உண்டு. இப்படிப் புரட்சி குறித்து ஆயிரம் ஆயிரம் கேள்விகளை உள்ளடக்கிய ஒரு வரலாறு அது.

1949 -50 காலகட்டத்தில் மார்க்சியச் சிந்தனையின் ஊடாக உருப்பெற்றிருந்த திட்டமிட்ட பொருளாதாரம் எனும் கோட்பாடு கடுமையான எதிர்ப்பிற்கு உள்ளாகியது.

கம்யூனிஸ்ட் நாடுகள் மட்டுமின்றி அன்று புதிதாக உருப்பெற்றிருந்த இந்தியா உட்பட ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஆளுகை வடிவமாக அன்று உருப்பெற்றிருந்தது அது. அதனூடாக பொருளாதாரத்தின் மீது அரசுக் கட்டுப்பாடுகள் செயல்பட்டன. சந்தைக்கு முழு அதிகாரம் என்கிற கருத்தாக்கம் ஏற்கப்படவில்லை.

ஆனால் இந்நிலை தொடரவில்லை. இந்தச் சூழலில்தான் ஒரு பின்னோக்கிய நகர்வாக திட்டமிட்ட பொருளாதாரம் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு சுதந்திரச் சந்தை எனும் கருத்தாக்கம் மேலுக்கு வந்தது. போகப்போக அந்த நிலை உலக அளவில் அதிகமாகி இன்று மிகச் சில நாடுகள் தவிர இந்தியா உட்பட அனைத்து நாடுகளிலும் சுதந்திரச் சந்தை, அதாவது அரசுக் கட்டுப்பாடற்ற முதலாளியம் கோலோச்சும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பாஜகவின் நரேந்திரமோடி ஆட்சி உருவானபோது முதலில் ஒழிக்கப்பட்ட ஜனநாயக நிறுவனக்களில் ஒன்று 'திட்ட ஆணையம்' என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

1980 இல் ஃப்ரான்சிஸ் ஃபகுயாமா போன்றவர்களால் *"End of History"* என இப்படியான திட்டமிட்ட பொருளாதாரம் என்பதிலிருந்து சுதந்திரச் சந்தை உருப்பெற்ற நிலை கொண்டாடப்பட்டதையும் நாம் இங்கு நினைவு கூற வேண்டும்.

இந்த நிலையின் ஊடாக உருவாகியுள்ள மாற்றங்களை நான் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கண்முன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுள்ளோம். இன்று மோடி அரசு வெளியிட்டுள்ள கல்விக் கொள்கையில் இட ஒதுக்கீடு எனும் பேச்சில்லை. மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரங்கள் அதிகமாகியுள்ளன. தடா, பொடா எதிர்க்கப்பட்டுப் பின்னோக்கித் தள்ளப்பட்ட காலம் போய் இன்று UAPA, AFPSA முதலான கொடுஞ் சட்டங்கள் இந்தியா முழுவதும் நிரந்தரமாகக் கோலோச்சுகின்றன, நிரந்தர வேலை எனும் கருத்தாக்கம் இப்போது அழிவை நோக்கிப் போய்க் கொண்டுள்ளது. ....

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

1789 ஃப்ரெஞ்சுப் புரட்சி, ஐரோப்பிய நாடுகளில் 'சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம்' முழக்கங்கள் எழுந்தன... நெப்போலியன் வென்றான். பின் அவனும் அழிக்கப்பட்டான். பலவீனமான ஆட்சி, படை எடுப்புகள், தோல்வி முதலான பின்னணியில் பாரிஸ் கம்யூன் வெற்றி. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்.

எல்லாம் ஒரு காலம்...

நிரந்தர இராணுவம் ஒழிப்பு, பொது வாக்கெடுப்புகள் மூலம் கவுன்சிலர்கள் தேர்வு, மக்களுக்குத் திருப்பி அழைக்கும் உரிமை, போலீஸ் என்பது அரசின் கருவி எனும் நிலை நீக்கப்பட்டு, சட்டம் ஒழுங்குக்கு மட்டுமே பொறுப்பாக்கப்படுதல், நிரந்தர இராணுவம் மற்றும் அரசுப் பதவிகள் ஒழிக்கப்படுதல், மலிவான அரசு எனும் நிலை உருவாக்கப்படுதல், கல்வி இலவசம், அரசு அதிகாரம் பலவீனப்படுத்தப்பட்டு, கம்யூன் அதிகாரம், தொண்டர் படைகள் இப்படி... பணக்காரர்களைத் தவிர பிற எல்லோராலும் ஒரு தொழிலாளிவர்க்க அரசாக ஏற்றுக் கொள்ளப்படல்,

என்ன அற்புதமான மாற்றங்கள்... அந்தச் சின்ன கால இடைவெளியில்!!!

இன்னொருபக்கம் எதிரிகள் கடும் வன்முறைகள், கொலைகள் ஊடாக மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி "உழைப்பை அடிமைப்படுத்துவது" அவர்களுக்கு உடனடி முக்கிய திட்டமாக இருந்தது. ஃப்ரெஞ்சுப் படைகள் இராணுவம் என பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக ஆளும் வர்க்கம் ஒன்றுபட்டது.

இன்னொருபக்கம் புரட்சியாளர்கள் மீது விமர்சனங்களும் இருந்தன. பழைய அரசின் அதிகார வடிவங்கள் தொடர்ந்தது, சோஷலிச மாற்றம் குறித்துத் துல்லியமான வடிவம் திட்டமிடாதது...

இப்படி.. நெருக்கடி வரும்போது பழைய அதிகார வடிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய நிலை உருவானது...

இவை எல்லாம் இன்று கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுக்கு. இறுக்கமான உடனடி பதில்கள் ஏதும் எனக்குத் தோன்றவில்லை. யாரிடமும் பதில் இல்லை. ஆழமாக அந்தச் சூழலை இன்னும் தீவிரமாக ஆராய வேண்டும். இப்படிக் கொஞ்ச நஞ்ச அதிகாரத்தைப் பழம் வடிவில் பயன்படுத்தியும் கூட மிக எளிதாக 71 நாட்களில் எதிரிகளால் அதிகாரம் மீண்டும் கைப்பற்றப்படும் நிலை இருந்ததை அறியும்போது.....

பின் என்னதான் செய்வது?

40 ஆண்டுகளுக்குப் பின் ருஷ்யப் புரட்சி . அப்போது கம்யூன்கள், சோவியத்கள் எல்லாம் உருவாயின. ருஷ்யப் புரட்சி அடுத்த பல பத்தாண்டுகள் உலகின் முக்கிய இராணுவ ஆற்றல்களில் ஒன்றாக ஆட்சி புரிய முடிந்தது என்பது உண்மைதான். ஆனால் அதுவும் சொந்த நாட்டு மக்களால் தூக்கி எறியப்பட்டுதானே அழிந்தது. அந்த இடத்தில் இன்று ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருப்பது யார்? கம்யூனிஸ்டுகள் அல்லவே.

நமக்கு முன் உள்ள கேள்வி: “பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை ஏற்பதா இல்லையா?”

சோஷலிச ஜனநாயகம் ஒன்றை நாம் ஏன் உருவாக்க முடியவில்லை? படை எடுப்புகளை எதிர்கொள்ள மட்டும் இராணுவம் என்பதெல்லாம் சாத்தியமே இல்லையா?

இந்தக் கேள்விகளை நான் 30 ஆண்டுகாலமாகக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

ஒரு சோஷலிச அரசை உலகமே அழித்தொழிக்கக் கங்கணம் கட்டும்போது படைகளே இல்லாத ஒரு ‘உடோபியா’வை உருவாக்க இயலாததை நாம் புரிந்துகொள்கிறோம். ஆனால் ஆயுதம் தாங்கிய படைகள் எனும்போது அந்த அரசு என்னவாக இருந்தாலும் அது ஆயுதம் தாங்கியப் படைதானே.

எதுவும் செய்ய முடியாது. நிலைமை மோசமாகிறது. கோவில் திருவிழாக்களுக்குப் போய் நாமும் கடை போடலாம் என்கிற கருத்தும் இப்போது நம் தோழர்களிடம் உருவாகிறதே,

ஜனநாயகம் என்பதே லட்சிய வடிவமாக இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. ஆனால் புராதனப் பொது உடைமைச் சமூகத்தைத் தவிர அது எந்தக் காலத்திலும் இருந்ததில்லை.

*தொடரும்*

***(கன்னியாகுமரி மாவட்ட கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் நடைபெற்ற பேராசிரியர் நா.வா. நினைவு 42வது இலக்கிய முகாமில் கலந்துகொண்டு பேராசிரியர், ந.முத்துமோகன் படைப்பாற்றல் குறித்து பேரா. அ.மார்க்ஸ் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம்)***

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், சமூகவியல் மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்.



14.03.2022 அன்று கோவையில் 36வது தேசிய புத்தகக்கண்காட்சியை கோவை மாநகராட்சி மேயர் திருமதி கல்பண ஆனந்தகுமார் அவர்கள் திறந்துவைத்தார். இதில் மாவட்ட மைய நூலகர் பே.ராஜேந்திரன், முனைவர் த.விஸ்வநாதன், முனைவர் நீ.குப்புசாமி, ப.பா.ரமணி, என்சிபிஎச் மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் கிளை மேலாளர் எஸ்.குணசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

## கட்டுரை



# அழகியல் என்னும் அணுகுமுறை

முனைவர் சி. ஜஸ்டின் செல்வராஜ்

அழகியல் (aesthetics) என்பது, அழகுணர்ச்சி (esthetics) என்றும் அழைக்கப்படுகிறது. அழகு மற்றும் சுவை குறித்து ஆராயும் தத்துவப் படிப்பு அழகியல் என்று அழைக்கப்படுகிறது. கலையின் தத்துவம், இயற்கை கலை மற்றும் கலைப் படைப்புகளுக்கு விளக்கமளிக்கின்ற அல்லது மதிப்பீடு செய்கின்ற ஒரு துறையாகவும் வளர்ந்து வருகின்றது. அழகியலைக் குறிக்கும் "aesthetics" என்ற சொல் "aisthetikos" என்ற கிரேக்க சொல்லிலிருந்து தோன்றியது ஆகும். இதன் பொருள். 'புலனறிதல்' என்பதாகும். இடைக்காலத்தில் *Alexander Baumgarten* எனும் அழகியலர் *Reflection of Poetry (1735)* எனும் தனது நூலில் முதன் முதலாக *aesthetics* என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அழகியல் என்ற கல்விப் புலத்தினை ஒரு பொது வரையறைக்குள் கொண்டு வந்துவிட முடியுமா என்றால் அது கடினமான ஒன்றுதான். அழகான, அசிங்கமான, விழுமிய, நேர்த்தியான, சுவை, விமர்சனம், கவின் கலைகள், சிந்தித்தல், இன்பம் போன்ற சிந்தனைகள் மற்றும் அவை குறித்த அனுபவம் இணைந்து அழகு மற்றும் சுவை போன்ற கருத்துக்களைத் தீர்மானிக்கின்றன. அழகியல் குறித்தக் கருத்துக்களை, உணர்வுகளை எடுத்துரைப்பதற்கு சரியான புரிதல் கொண்ட தத்துவார்த்த அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. இக்கட்டுரையானது அழகியல் ஆய்வுப் புலத்தில் பயன்படுத்தப் படக்கூடிய கலைச் சொற்கள் குறித்தப் புரிதலை விளக்க முற்படுவதோடு மட்டுமல்லாது, பிறதுறைகளோடு இணைந்து இயங்கும் முறையியலையும், அணுகுமுறையாக எவ்வாறு உருவெடுக்கிறது என்ற செயல்பாட்டினையும் விளக்குகின்றது.

**அழகு குறித்த அறிஞர்களின் கருத்துக்கள்**

ப்ளேட்டோ "வடிவம் தான் அழகு" என்கிறார். அரிஸ்டாட்டில் "தனித்தனிப் பொருள்களின் பண்புகளுக்கு ஏற்ப அவற்றை முறைப்படுத்துவதால் அழகு உண்டாகிறது என்கிறார்". படைப்புப் பனுவலின் அக அமைப்புச் சீர்மையும், படைப்பின் சமூக செயல்பாடும், சமூக மதிப்புகளோடு படைப்பிற்குரிய உறவும் ஒன்று சேரும்போது அப்படைப்பு அழகுடையதாக மாறுகிறது என்று *Mukarovsky (1979)* கூறுகிறார். ஓர் இலக்கியப் படைப்பின் ஒட்டுமொத்தமே அழகைத் தருகின்றது என்று *G. Lukach (Marxian Aesthetics)* கூறுகிறார். அதோடு மட்டுமல்லாமல் முறைமை (order), ஒத்திசைவு (symmetry), துல்லியம் (definiteness) ஆகியவை அழகுக்கு அடிப்படை என்கிறார். படைப்பின் அழகு என்பது படைப்பாளியின் படிப்புத்திறனிலிருந்து வெளிப்படுகிறது என்று *F.R. Levis (1962)* குறிப்பிடுகின்றார். வாசகனின் வாசிப்பில்தான் அழகு வெளிப்படுகிறது என்பது *Roland Barthes* கருத்து. அந்த வாசிப்பிற்கு இவர் *super reader* என்று கூறுகிறார். அழகு என்பது விளக்கத்துடன் இணைந்தது. குறியீடுகளை விளங்கிக் கொள்ளுதலே விளக்கம் என்று பொருள்படும். அனுபவங்களை விளங்கிக் கொள்வதைக் கலைவடிவங்கள் ஊடுகடத்துகின்றன. விளங்கிக்

கொள்ளுதல் என்பது சார்புடைய ஓர் எண்ணக்கரு. சமூகத்தின் விளைபொருளாகிய மொழி அழகியலைப் புலப்படுத்தும் பண்பு கொண்டது. புலக்காட்சி கொள்ளல், சிந்தித்தல், அறிவையும் அனுபவங்களையும் தேக்கி வைத்தல், ஊடு கடத்தல் முதலிய செயற்பாடுகள் மொழியால் மேற்கொள்ளப்படுகின்றன.

அழகியல் என்பது கலைகளின் தத்துவங்களில் உள்ள துறைகளில் ஒன்று. அழகியல் மொழி மட்டுமின்றி இயற்கைப் பொருட்களையும் எல்கையாகக் கொண்டுள்ளது. ஒரு பொருளானது ஒருவர் பார்வையில் அழகு நிறைந்ததாய் இருந்து மற்றவருக்கு அது அழகியல் தன்மை குறைவாய் உள்ளதாய் தோன்ற வாய்ப்புள்ளது. காரணம் அழகியல் குறித்த நியாயங்கள் ஒருசார்புத் தன்மையில் இருப்பதே ஆகும். பலதரப்பட்ட மக்களின் பல்வேறு மனநிலைகளோடு அழகியல் இணைக்கப்பட்டுள்ளது என்பதே அதன் பதில். அதே நேரத்தில், அழகியல் தரத்தை வரையறுத்தல் என்ற கேள்விக்கு குறைந்தபட்சம் அழகியல் வரையறுக்கப்பட, கொள்கைகளை கண்டறிய வேண்டும் என்றால், அழகு அல்லது மற்ற அழகியல் கருத்துக்கள் குறித்து அறிய ஒரு தத்துவவியல் ஆய்வு என்பது அவசியமாகிறது.

அழகியல் விஷயத்தை ஒரு பொது வரையறைக்குள் கொண்டு வருவது கடினம். அதற்கான வரையறை உருவாக்குவதே நவீன அழகியலின் முக்கியப் பணியாக உள்ளது. நம் அனுபவம் ஒரு சுவாரசியமாக மற்றும் புதிராக உலகினில் தெரிந்திருந்தால், அழகான, அசிங்கமான, விழுமிய, மற்றும் நேர்த்தியான தளங்களில் சுவை, விமர்சனம், நுண்கலை, சிந்தித்தல், புலனுணர்வு குறித்த அனைத்தும் நமது கொள்கைகள், கூட்டுறவு மற்றும் ஒத்த நலன்களில் ஈடுபட்டு வருகின்றோம் என்று கூறலாம். நமது இந்த உணர்வு தவறானது என்று இருந்தால், நாம் கொண்ட அழகு மற்றும் சுவை போன்ற கருத்துக்களும் தவறானதாகவே இருக்கும். நமது உலக நோக்கோடு இயைந்து உருவாக்கிக் கொள்ளுகின்ற மேற்கூறிய முடிவுகள் தவறானது என்று இருப்பின், பொருள் குறித்த அழகு மற்றும் சுவை போன்ற கருத்துக்களை மறுபரிசீலனை செய்வது அவசியமாகின்றது.

**அழகியல்**

அழகியலின் பொருள் குறித்த அணுகுமுறையான அழகியல் பொருட்களைத் தேர்ந்தெடுத்து அந்த மாதிரியின் முக்கியத்துவத்தை அழகியல் பொருள் மற்றும் தத்துவ அழகியல் ஆகிய இரண்டினையும் கூறலாம். இந்த வேறுபாடு இடைக்கால தத்துவ மரபிலும் மற்றும் சமீப நிகழ்வியல் குறித்த ஆய்வுகளிலும் முக்கிய பங்கு வகித்தது. உதாரணமாக ஒரு நபர் ஒரு இருட்டறையில் மண்டபத்தில் உள்ள ஒரு வெள்ளை துணி மடிப்பு பார்த்து பயந்து, ஒரு ஆவி என்று நினைக்கிறார். அந்தப் பொருளானது ஒரு பேயாக இருக்கும் போது, இங்கே, பயம் துணி ஆகிறது. ஆனால் பயம் ஒரு தத்துவ விவாதம். அஞ்சப்படுகிற விஷயங்களை ஒரு விவாதமாக வழங்கினாலும், பொருள் எப்போதும் தன்னுடைய இருப்பில் உள்ளது. அதேசமயம் பொருள் குறித்த அந்த பயம் மனதில் நிலையாகவே உள்ளது. *Clive Bell (Art, 1914)* கலைக் கோட்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது அதுவே அதன் முக்கிய வடிவமாகவும் உருப்பெறுகிறது என்கிறார். ஆக கலை என்பது அதன் தன்மையின் அடிப்படையில் வேறுபடுகின்றது என்று அவர் கருதுகிறார். எப்போது ஒன்று கலை என்று அறியப்படுகிறது என்பதற்கு அவர் தரும் பதிலும் இதுதான்"அது எப்போது கலை என்று அறியப்படுகிறதோ அப்போதுதான்", என்கிறார்.

மேலும், இது கலை வடிவங்கள் இடையுள்ள ஒற்றுமையை மட்டும் பார்ப்பதல்லாமல் அவைகளின் வேறுபாடுகளினையும் கவனத்தில் கொள்வது என்பதும் தத்துவார்த்த முக்கியத்துவம் வாய்ந்தது. அது கிட்டத்தட்ட எதையும் அழகான பார்வையில் சில புள்ளியில் இருந்து காணலாம் என்பதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். அதே நேரத்தில், அழகு குறித்த ஒருவரின் அனுபவம் முக்கியமாக அழகானது எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பது அந்தப் பொருள் குறித்த அறிவைப் பொறுத்தது. ஒன்றைக் கல் என்று சொல்வதற்கும், அதனையே இன்னொருவர் சிற்பம் என்று சொல்லுவதற்கும் பொருள் குறித்த அறிவு என்பது இங்கு முதன்மையாக நிற்கின்றது. காண்ட் *(Kant)* - ன் அழகியல் வெளியீட்டுத்திறன் கோட்பாட்டின்படி நமது அழகியல் உணர்வு எப்போதும் பொருள் பற்றிய ஒரு கருத்து வழியே சார்ந்திருக்கின்றது. அதேநேரத்தில் மனித உருவத்தின் அழகும் உருவம் குறித்த வரையறையில்தான் அடங்குகின்றது. (உதாரணமாக: ஒரு சாரார் குதிரையின் வளர்ந்த இடுப்பு அழகாக உள்ளதாக கருதுகின்றனர். ஏனென்றால் வளைந்த அம்சங்கள், முதுகு போன்றவைகளைக் கூறலாம்). ஆக அழகியல் குறித்த எந்த முடிவுகளும் பொதுவானதாக இருப்பதில்லை. அழகான அம்சங்கள் அடங்கிய சிற்ப செயல்பாடு உள்ளது; அதே அழகியல் வேலைப்பாடுகள் ஒரு கட்டிடக்கலைக்குத் தேவையில்லாமல் இருக்கலாம்.

**அழகியல் உணர்வு**

ஒரு குறிப்பிட்ட வர்க்கம் மட்டுமே அழகியல் நலன்கள், அழகியல் அனுபவம், உற்பத்தி, கலை பாராட்டுதல், அழகு, வெளிப்பாடு, மற்றும் வடிவம் போன்ற கருத்துக்களைப் பயன்படுத்துகின்றனர். இக்குந்த தளங்களுக்கு மனிதர்கள் அணுக என்ன இருக்கிறது? என்று பிளாட்டோ போன்ற ஆரம்பகால தத்துவஞானிகள் காலத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்வியாக இருந்தாலும், *Emmanuel Kant* போன்றவர்களும் இடைக்காலத்தில் தங்களின் பங்காக கேள்விகள் எழுப்ப மறுக்கவும் இல்லை என்றே கூறலாம். ரிணீஸீமீ கூறுவது யாதெனில் பகுத்தறிவு என்ற ஒன்று மட்டும்தான், அழகியல் ஆர்வம், அழகியல் குறித்த விமர்சனத்தை வைக்க முடியும்; அழகியலில் பகுத்தறிவு செலுத்தப்படும் வரை அது முழுமை பெறுவதில்லை என்கிறார். ஏனெனில் "பகுத்தறிவிற்கு தத்துவார்த்த நிலையிலும் சரி, நடைமுறையளவிலும் சரி அதற்கான பணிகள் ஏராளம் " என்பதே அவர் கூறும் விளக்கம் ஆகும்.

அழகியல் அனுபவம் மற்றும் அழகு குறித்த விமர்சன தளத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியவைகளை Kant பின்வருமாறு கூறுகிறார்.

1. அழகியல் அனுபவம் என்பது அறிவார்ந்த/ பகுத்தறிவுள்ள உயிரிகளிடம் உள்ளது.
2. ஒவ்வோர் உயிரியிடமும் பகுத்தறிவு சிந்தனை இருப்பது அவசியம் எனவும்
3. அழகியல் அனுபவம் என்பது அறநெறிக்கு நெருங்கிய நிலையில் இருக்கிறது எனவும் கூறுகிறார்.

**அழகியல் அனுபவம்**

அழகியல் அனுபவம், ஓர் உள்ளுணர்வு தன்மை கொண்டது. இந்த அணுகுமுறைக்கு எளிய இரண்டு முன்மொழிவுகள் தரப்படுகின்றன: 1. அழகியல் பொருள் என்பது பொருளின் உணர்வு அனுபவம் போன்றது. அது கேட்டல், பார்த்தல், அல்லது கற்பனை செய்தல் எனும்போது உணர்ச்சி வடிவில் உள்ளது. 2. அழகியல் பொருள் கருத்தில் கொள்ளக்கூடிய ஒன்று; அதன் தோற்றமானது அகநிலையின் விருப்பமாகவும் ஒரு பொருள் குறித்த உணர்ச்சி கலந்த இன்பமாக மட்டும் இல்லாமல் களஞ்சியமாகவும் உள்ளது. Kant - ற்கு பிந்தைய அழகியல் குறித்த கருத்தியல் அனைத்தும் மேற்கூறிய இரண்டு முன்மொழிவுகளைச் சார்ந்து இருந்தது. Hegel - ன் கலைக் கோட்பாடானது அதாவது "எண்ணத்தின் புலனுணர்வு உருவகம்" என்ற நிலையை எட்டியது. Kant அதை பின்வருமாறு குறிப்பிடுகிறார். "உணர்ச்சி" என்பது, "தனிப்பட்ட (individual)" "குறிப்பிட்ட (particular)", மற்றும் "தீர்மானிக்கப்பட்ட (determined)", "அறிவார்ந்த (intellectual)" "அருவமான (abstract)", "பருண்மையான (concrete)", "உலகளாவிய (global)", "பொது (general)" போன்றவற்றோடு இணைந்துள்ளது என்கிறார். எண்ணங்கள் சில சமயங்களில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது. Kant இதனை முரண்பட்ட அறங்களின் இணைவில் ஏற்பட்ட"சுவை" என்று குறிப்பிடுகிறார்.

அழகியல் மதிப்பீடு (aesthetic Judgement) என்பது Kant கண்ட கருத்தாக்கமாகும். அதன்படி, அவரவர் அகனிலைக்கு ஏற்ப அழகுணர்ச்சி அமையும். i) சுய முடிவு (self determine) உ.ம்: தேர்ந்தெடுத்த ஒன்றினை அழகு என்றும் மற்றவற்றை அழகில்லை என்று மறுக்கும் (எனக்குப் பிடித்தது என்ற சுய தீர்மானத்தினை இங்குக் குறிப்பிடலாம்) ii) பிரபஞ்சம் (universal) உ.ம்: அனைவரும் ஏற்கும் அழகை ரசிக்க வைக்கும் (உலக அழகி), iii) தேவை (necessary) உ.ம்: தனக்கு வேண்டியதை அழகாக்கிக் கொள்ளும் (காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு), iv) நோக்கம் (purpose) உ.ம்: (உள்நோக்கத்தோடு அழகை ஏற்றுக்கொள்ளும்). ஆக Kant-ன் படி அழகு என்பது உணர்ச்சியோடு இயைந்த அழகுணர்ச்சி. இதனையே (அழகியலை) Hegel துல்லியத்துடன் (precision) இணைத்துப் பார்க்கிறார். இவர் கலைக்கு இணையாக அழகியலைப் பயன்படுத்துகிறார். அழகியல் அல்லது அழகுணர்ச்சிப் பற்றி கூறும் போது மூன்று வகை புலனறிவைப் பிரித்துக் காட்டுகிறார். முறையே 1. பொருத்தமான புலனுணர்வு (proper sensible) 2. பொதுவான புலனுணர்வு (common sensible) 3. புலனுணர்வுத் தரம் (sensible quality). மேலும் அழகியல் அனுபவமானது கீழ்க்கண்டவாறும் இணைந்திருப்பதைக் காணலாம். அவையாவன: 1. ஞாபகங்கள், 2. உணர்வு, 3. அறிதல் திறன். அதோடு மட்டுமல்லாது அழகியல் அனுபவத்திற்கான சூழல்கள் பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றன. முறையே, 1. சமூக சூழல் (இனச் சூழல், வர்க்கம், பாலினம், பண்பாடு, அரசியல்), 2. ஒழுக்கச் சூழல் (சமயம், பாலினம், வன்முறை)

3. சுவை (நல்ல சுவை, என்னுடைய சுவை (my taste)). மேலும் சில புறக்காரணிகளால் அழகியல் அனுபவமானது தீர்மானிக்கப்படுகிறது. அவையாவன...1. தகவல் தரும் காரணிகள் (தலைமுறைகள், ஒப்பீடு, பூர்வீக இருப்பு), 2. தற்சார்பு காரணிகள் (உளவியல் காரணிகள், உடலமைப்பியல், தூரநிலை போன்றவை)

**அழகியலும் உளவியலும்**

அழகு என்பது உளவியலோடு தொடர்புடையது: பல வண்ணங்களினாலே தீட்டிய ஓவியமும் அழகாக இருக்கின்றது. ஒரே ஒரு வண்ணத்தினாலே தீட்டிய ஓவியமும் அழகாகத் தான் இருக்கின்றது. வண்ணம் என்ற ஒரு மாறியை வைத்துக்கொண்டு உளவியல் தொடர்பான முடிவை எடுக்க முடியாது. பல்வேறு மாறிகளை தொகுப்பதன் வாயிலாகவே அழகியல் நயப்பு பற்றிய விளக்கங்களைப் பெற முடியும் என்பது தெளிவாகின்றது.

**கலையும் அழகியலும்**

ஒன்றைக் குறித்த தாக்கம், அதனைத் தொடர்ந்து ஆக்கப் பெறும் கலை வடிவங்களில் மனவெழுச்சிக் குமுறல்கள் மிகையளவில் காணப்படுகின்றன. தாமதித்த நிலையில் ஆக்கப் பெறும் கலைவடிவங்களில் மனவெழுச்சி ஒருவித ஒழுங்கமைப்புடன் காணப்படுகின்றது. கலை வெளியீடு என்பது "பயன்", "செலவு - மனித உழைப்பு; கலைப்பொருளாக்கத்திற் பொதிந்துள்ள உழைப்பின் தொடர்பு நாட்டுப்புற மரபுகளிலே தெளிவாக விளக்கப்படுகின்றன. 'ஆடல் அறியா அரங்கு', 'கேள்வி ஞானம்', 'சித்திரமும் கைப்பழக்கம்', போன்ற தொடர்கள் மறைமுகமாகவும், நேர்முகமாகவும் கல்வியோடும் பயிற்சியோடும் இணைந்த உழைப்பின் இன்றியமையாப் பண்பைக் கலைகளிலே புலப்படுத்துகின்றன." ஒருவரது உளகோலங்களின் வேர்கள் யதார்த்தத்திலேயே புதைந்து நிற்கும். நாட்டுப்புறக் கலைகளில் இதன் தொடர்ச்சியை வெகு எளிதாகக் காணலாம் (நாட்டுப்புற இலக்கிய வடிவம் என்பது அந்தந்தச் சூழலுக்குத் தகுந்தாற் போல் மாறக்கூடியது); "சிக்கனம் - கவிதை என்பது மொழி சிக்கனத்தின் வடிவம்".

இனிமையான மனவெழுச்சிகள், அழகு தருகின்றன. மகிழ்ச்சி, களிப்பு, அன்பு, காதல் போன்ற இனிய

மனவெழுச்சிகள் அழகைத் தூண்டுகின்றன. இனிமை தராத மனவெழுச்சிகளும் அழகைத் தருகின்றன. ஏனெனில் அவை அவை வாழ்க்கைப் போரின் வெற்றிக்கும், முரண்பாடுகளின் புரிந்துணர்வுக்கும், உறுதுணையாக நிற்கின்றன. கலைஞனது உணர்வுகளும், சுவைப்பவனது உணர்வுகளும் சமநிலை கொள்வதற்கு இருசாராரும் ஒரே சமூகப் பிணைப்புடையோராய் இருத்தல் வேண்டப்படுகிறது. இல்லாவிடில் ஒருவரது உணர்ச்சி மற்றவருக்கு இரவற் பண்புடையதாகி விடும். கற்பனைத்திறன் மூவகை அருவிகளாகச் செயற்படும். அழகியற் கற்பனை, அறிவியற் கற்பனை, சமயக் கற்பனை என்றவாறு அறியப்படுகின்றது. கற்பனையின் பங்கு மனித அனுபவத்தின் உணர்ச்சி மற்றும் அறிவார்ந்த கூறுகள் அவைகளுக்கு இடையே இருக்கும் சாத்தியம், உறவுகள் மற்றும் சார்புகளை பற்றி அறிய மிக இன்றியமையாத ஒன்றாக உள்ளது. காண்ட் கூறுவது போல் 'நவீன தத்துவவியலில் ஒரு தனித்துவமான "மன ஆசிரிய" அல்லது "கற்பனை செயலாக்க" எனும் மன நடவடிக்கை வெளிப்படுத்துகிறது. மொழிக்கு முதற்காரணமாய் காதாற் கேட்கப்படும் ஒலி அணுத்திறனில் செயலாக இருப்பது எழுத்தாகும். இவ் எழுத்துக்கள் ஒலி, வரி வடிவங்கள் கொண்டவை. ஒலி வடிவின் எழுத்துக்கு அடையாளமான ஒரு குறியீடாகவே வரிவடிவம் அமைகின்றது. அழகியல் அனுபவம் இயற்கையுடனான உயிர் உறவில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. சுற்றுப்புறமானது ஒருங்கிணைவு, நிலைத்தன்மை, அழகு போன்றவற்றை பெற்றுத் திகழ வேண்டும்; இயற்கையினை இரசிப்பதற்கு அறிவியல் அறிவு மிக அவசியம்; இயற்கைச் சூழல் இரசனை மற்றும் இயற்கை பாதுகாப்பு போன்ற சிந்தனை பல்துறை அறிஞர்கள் வாயிலாக முன்னெடுக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**நாட்டார்/நாட்டுப்புற அழகியல்**

அழகியல் என்பது நாகரீக மனிதர்களிடம் மட்டுமே காணப்படுவதென்ற கருத்து முற்றிலும் தவறானது. நாட்டார் அழகியலுக்குண்டான தனித்துவம் மற்றும் முக்கியத்துவம் என்பதை பின்வருமாறு கூற முடியும். நாட்டார் வழக்காறுகளுக்கும் - நிகழ்த்துக் கலைக்குமான உறவு; நிகழ்கலை வடிவத்திற்கும் - வழிபாட்டு சடங்கிற்குமான உறவு; வழிபாட்டுச் சடங்கிற்கும், பழக்க வழக்கம் - புழங்குபொருட்களுக்குமான உறவு அழகியல் தன்மை கொண்டவை. எல்லாவற்றிற்கும் மேலாக சூழலைப் பொறுத்து நாட்டுபுற அழகியலின் தன்மை மாறுகிறது. உதாரணமாக நாட்டார் வழக்காறுகளின் பனுவலுக்கு ஒரு வடிவம் கிடையாது. பனுவலின் நீட்சியும், அளவும் நிகழ்த்துநர்-பார்வையாளர் பொறுத்தே அமைகின்றது. நாட்டார் நாட்டுப்புற அழகியலைப் பொறுத்தளவில், அழகில் உலகப் பொதுவான அழகு *(Universal Beauty)* என்று ஒன்று கிடையாது. ஏனெனில் அது சமூக, பண்பாட்டு, பொருளாதார நிலைமைகளால் உருவாக்கப்படுகின்றது என்பதே ஆகும்.

**அழகியல் அணுகுமுறைகள்**

அழகியலின் மூன்று அணுகுமுறைகள் மூன்று விரிவான தளங்களில் உள்ளன. அவை பின்வருமாறு.

**1. அழகியல் இலக்கியம்**

பெரும்பாலும் அழகியல் என்பது இலக்கிய விமர்சனம் என்ற நிலையிலே இருந்தது. அதோடு மட்டுமல்லாது அதற்கான நியாயங்களையும், தர்க்க, சீர்பாடுகளையும் சொற்ப காலம் அது கொண்டிருந்தது. *Edmund Burk* என்பவர் தன்னுடைய *"On the Sublime and Beautiful (1757)"* என்ற புத்தகத்தில் அழகியல் குறித்த கருத்தாக்கத்திற்கும், அழகியலின் குணாதிசயங்களைப் படிப்பதற்கும் மனிதனின் மனப்பான்மையே முதன்மை என்கிறார். அவர் குறிப்பிடுகிற கம்பீரம் *(sublime)* மற்றும் அழகு *(beauty)* என்பது இன்றைய நவீன அழகியல் அணுகுமுறைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சமீபகாலங்களில் தத்துவவியலாளர்கள் நவீன இலக்கியக் கோட்பாடுகளான பிரதிநிதித்துவம், உணர்வு வெளிப்பாடு, வடிவம், நடை, உணர்ச்சி பசப்பு போன்றவைகளில் அதிகமாக கவனம் செலுத்தி வருகின்றனர். இவைகளுக்கு இரண்டு வித நோக்கங்கள் இருக்க முடியும்: ஒன்று, எப்படி இந்த விளக்கங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன என்பது? இரண்டாவது, மனித அனுபவங்களில் அழகியல் எப்படி தனித்துவம் வாய்ந்தவைகளாக அறியப்படுகின்றது/வெளிப்படுத்தப்படுகின்றன என்பது?

**2. அழகியல் தத்துவம்**

அழகியல் அனுபவத்தில் மறுமொழிகள், மனோபாவங்கள், உணர்வுகள் போன்றவைகளும் மனித அழகியல் குறித்த தத்துவ இயல் ஆய்விற்கு கணக்கிலெடுத்துக்கொள்ளப்படுகின்றன. *Emmanuel Kant* தன்னுடைய *"The Critique of Judgement" (1790)* என்ற நூலில் அழகியலின் சிறப்பினை தீர்மானிப்பது எது என்பது பற்றிச் சொல்லும்போது இவ்வாறு கூறுகிறார். நமது அறிவியல் பூர்வமான ஆர்வங்களையும், நடைமுறை சாத்தியங்களையும் குறிப்பிட்ட ஒன்றன் மேல் கொண்டுள்ள தொடர்பில் பிரித்து விடுகிறோம். ஆகவே அழகியல் என்பது ஒரு சார்பற்ற மனோபாவம் என்பதை இதன்மூலம் புரிந்து கொள்ளவேண்டும். பல கோணங்களில் அழகியல் உணர்வை வெளிப்படுத்த வாய்ப்புள்ளது என்பது இதன் மூலம் நிறுவ முடியும். ஆனால் *Kant*-ன் இந்தக் கருத்தை *G.W.F. Hegel* மற்றும் *Ludwig Wittgenstein (Philosophical Investigations (1953))* போன்றோர்கள் விமர்சனம் செய்கிறார்கள். ஏனெனில் 'அழகியல் மனோபாவம்', 'அழகியல் அனுபவம்' என்பது முழுக்க முழுக்க தத்துவ உளவியலினை சார்ந்த ஒன்று என்று குறிப்பிடுகிறார்கள். ஒரு முக்கியமான வேறுபாட்டை இந்நேரம் மனதில் கொள்ள வேண்டும். அதாவது மனதின் தத்துவம் மற்றும் உளவியல் அனுபவம். தத்துவம் என்பது அறிவியல் அல்ல. ஏனெனில் ஒரு நிகழ்விற்கான

காரணத்தை பரிசோதனை செய்வதில்லை. அது செய்வது கருத்தியல் ரீதியான விசாரணை. நிகழ்வியம் (phenomenology) மற்றும் கருத்தியல் விசாரணை இரண்டும் தத்துவவியலில் மிக முக்கியமான ஒன்று. ஒன்றுக்கொன்று வேறுபட்டதாயினும் அறிவியல் முறையில் நாம் கண்டறிய வேண்டியவற்றைக் குறித்து வரையறுக்கப்பட வேண்டியுள்ளதை நமக்கு நினைவுப் படுத்துகிறது.

### 3. அழகியல் பொருண்மை

இந்த அணுகுமுறையானது நாம் தேர்ந்தெடுத்துள்ள பொருள் மற்றும் அதன் பொருண்மையின் அடிப்படையில் விவரிக்க வேண்டிய சவால்களை பிரதிபலிக்கின்றது. வழக்கமான வர்க்கம், கலை படைப்புகளை உள்ளடக்கிய முதன்மையான அழகியல் நிலைகளையும் முன்னிலைப் படுத்துகிறது (இயற்கை, பொருளின் பரிமாணங்கள் போன்றவைகள்). நாம் இத்தகைய ஒரு அணுகுமுறையை ஏற்க வேண்டும் என்றால், அழகியல் மற்றும் கலைகளின் தத்துவம் இடையே ஓர் உண்மையான வேறுபாடு முற்று பெறவேண்டிய நிலை வந்து விடுகின்றது. மற்றும் அழகியல் கருத்துக்கள், அழகியல் அனுபவத்தின் வழியே படைப்புக்களைப் புரிந்து கொள்வதற்கும் முறையே கருத்துக்கள், கலை மற்றும் அவற்றை எதிர்கொள்ளும் அனுபவங்களும் அவசியமாகிறது. இவ்வாறு ஹெகலின், அழகியல் மீதான தத்துவவியலின் ஆளுமை, கலை வடிவங்களும், ஆன்மீக உள்ளடக்கமும் அழகியலின் முக்கியப் பணியாகக் கருதப்படுகிறது. அழகியலில் இதேபோல் கலைச் சிக்கல்களில் அழகியல் கவனம் செலுத்தியது பழைமையான அணுகுமுறை என்று ஹெகல் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அழகியலின் பொருண்மை குறித்த அணுகுமுறை, கலை மீது இந்தக் கவனம் தேவையில்லை என்று கருதப்படுகிறது. யாரேனும் அழகியல் மேல் வைத்திருக்கும் ஒரு வெளிப்படையான மதிப்பு கூட ஒருவேளை ஓர் ஒப்பீட்டளவில் முக்கியத்துவமற்ற வெளிப்பாடாக இருக்கலாம். அழகியலின் முதல் கவனம் என்பது உண்மையான, மேன்மையான அழகியல் அம்ச பொருட்களைக் கண்டுபிடித்து ஆய்வு செய்வது ஆகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று அணுகுமுறைகளையும் பொருத்திப் பார்க்கும்போது ஒன்று கொன்று பொருத்தப்பாடு இல்லாமலிருந்தாலும் அவைகளுக்குள் அழகியல் என்ற பொதுதளத்தின் இணக்கம் இருக்கின்றது. அழகியல் குறித்த இந்த மூன்று அணுகுமுறைகளினையும் முத்தரப்பு வடிவம் (tripartite) என்று அழைக்கலாம்.

### நிறைவாக

அழகியலைப் பற்றிய ஆய்வுப் புலமானது செயற்கையான சூழல், இயற்கையான சூழல், பண்பாட்டுச் சூழல் போன்ற வகைமைகளோடு ஆராய்வதோடு மட்டுமல்லாது, அவற்றின் பல்நிலை வடிவங்களோடு (various forms) தொடர்புபடுத்தி அழகியல் அறிவுத்துறையை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியம். அறிவுசார் அம்சங்கள் (cognitive aspects) மரபு வழி அறிவு முறைகள் (indigenous knowledge system), நவீன அறிவியல் (modern science), போன்றவைகளின் உதவியோடு அழகியல் புலத்தை அணுகும் பொழுதுதான் ஆழமான புரிதலோடு அழகியல் விளக்கம் (interpreting beauty and taste) மற்றும் அழகியலை அணுகுதல் ஆரம்பமாகின்றன.

### பார்வை நூற்கள்:


- இ. முத்தையா, நாட்டுப்புற பண்பாட்டு மரபு: மாற்று மரபு, மதுரை: அரசு பதிப்பகம், 1998
- இராமசாமி, மு. 2012. நாடக அழகியல், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
- க. குளத்தூரன், 2018. சுற்றுச்சூழலும் அழகியலும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
- கிருஷ்ணவேணி, ஏ.என். 2008, இந்திய அழகியல், சென்னை: குமரன் புத்தக இல்லம்.
- ச. ஜெயராசா, அழகியல், இணுவில்-மருதனாமடம்: அம்மா வெளியீடு, 1989.
- தி.கு. இரவிசந்திரன், தொல்காப்பியமும் ஃப்ராய்டியமும்: அழகியல் இணைநிலைகள், சென்னை: அலைகள் வெளியீட்டகம், 2011. பக்.105-134
- தி.சு.நடராசன், தமிழ் அழகியல், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், 2012
- மல்லிகா, அரங்க. 2008. தலித் பெண்ணிய அழகியல், சென்னை: அறிவுப்பதிப்பகம்.
- வேணுகோபால், சரசுவதி, இ. முத்தையா மற்றும் ஆசீர்வாதம், சீலா. 2000. தமிழக நாட்டுபுறக்கைவினைக்கலைகள்: பன்முகப் பார்வை, மதுரை: தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வு மையம்.
- Aristotle, 2018 (Reprint). Poetics, New Delhi: Finger Print Classics
- David E. Cooper (Ed.), Blackwell Companions to Philosophy, A Companion to Aesthetics; Oxford: Blackwell Pubishers, 1992 (2001 Reprinted)
- Deshpande, G.T. 2009. Indian Poetics, Paranjpe, Jayant (Trans.), Mumbai: Popular Prakashan. Pvt. Ltd.
- Gordan Graham, Philosophy of The Arts: An Introduction to aesthetics, London: Routledg, 1997 (2005 third edition).
- Jacques Ranciere, The Politics of Aesthetics: the distribution of the Sensible, Gabriel Rockhill (Trans.), London: Continum International Publishing Group, 2000 (2004 translation).
- Kendall Walton, "Aesthetics - What? Why? and Wherefore?", in The journal of Aesthetics and Art criticism, 65:2. Spring 2007
- Krishnaveney, A.N. 2009. The Theory of rasa: A Comparative Study, Jaffna: Harikanan
- Layton, Robert. 1991. The Anthropology of Art, Cambridge: Cambridge University Press.
- Muthukumarasamy, M.D. 2004. Folklore, Public Sphere and Civil Society, Chennai: National Folklore Support Centre
- Robert A. Georges and Michael Owen Jones. 1995. Folkloristics: An Introduction, Bloomington: Indiana University Press.
- Sykes, Karen. 2005. Arguing with Anthropology: An Introduction to critical theories of the gift, London: Routledge
- Tony Dunn, Aesthetics and Politics: Reymond Williams' Marxism and Literature, Herbert Marcuse's The Aesthetic Dimension.



கட்டுரையாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழக
நுண்கலைகள் மற்றும் அழகியல் துறை
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

# உங்கள் நூலகம் வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

**அச்சுக் காகிதம் மற்றும் மூலப்பொருட்கள் விலை வரலாறு காணாத வகையில் மிகக் கடுமையாக உயர்ந்துவிட்டமையால் ஏப்ரல் 2022 முதல் மாத இதழின் விலை ரூபாய் 45/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் வழக்கம்போல் தங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**புதிய சந்தா விவரம்**


**ஆண்டு சந்தா ரூ.540/-**
**மாணவர்களுக்கு ஆண்டு சந்தா ரூ.500/-**
**ஆயுள் சந்தா ரூ.5400/-**

**அயல்நாடு ஆண்டு சந்தா இந்திய ரூபாயில் 4050/- (தபால் செலவு தனி)**

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் சந்தா தொகையை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!





**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 176 | 518 | 2897 | 4333 | 5566 | 5575 | 5584 | 8786 |
| 509 | 880 | 3464 | 4334 | 5567 | 5576 | 5586 | 8787 |
| 510 | 1108 | 3466 | 4392 | 5568 | 5577 | 7403 | 8803 |
| 511 | 1152 | 3467 | 4714 | 5569 | 5578 | 7451 | |
| 512 | 1154 | 3468 | 4715 | 5570 | 5579 | 7596 | |
| 513 | 1155 | 3469 | 4717 | 5571 | 5580 | 7597 | |
| 514 | 2894 | 3473 | 4873 | 5572 | 5581 | 7908 | |
| 515 | 2895 | 3478 | 5565 | 5573 | 5582 | 7909 | |
| 517 | 2896 | 4332 | 5565 | 5574 | 5583 | 8785 | |

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

மதிப்புரை



# சுயராஜ்யமும் இந்து ராஜ்யமும்

## முன்னோடி கம்யூனிஸ்ட்டின் தொலைநோக்கான விமர்சனம்

**கமலாலயன்**

*1931*ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம் செல்வாக்கு மிக்க இயக்கமாக உருப்பெற்ற வேளையில், அதன் முன்னோடி பயணிகளுள் ஒருவராகத் திகழ்ந்த சிங்காரவேலர்“சுயராஜ்யம் யாருக்கு? என்று எழுதி வெளியிட்டார். அடுத்தடுத்த ஆண்டுகளில் அதன் இரண்டாவது, மூன்றாவது பாகங்களையும் சிங்காரவேலர் வெளியிட்டுள்ளார். அந்த மூன்று நூல்களையும் ஒரே நூலில் தொகுத்து, ஆசிரியர் குறிப்புகளுடன் செம்மையாகப் பதிப்பித்துள்ளார் இளம் ஆய்வாளர் க.காமராசன். சீர்மை பதிப்பகம் இதை மிக எளிய, ஆனால் சிறப்பான நூலாக வெளியிட்டுள்ளது.

இப்போது நாம் அறிமுகம் செய்ய முற்படும் சுயராஜ்யம் யாருக்கு? என்ற நூலை ஆரம்பகாலப் பொதுவுடைமை இயக்கம் சார்ந்த ஓர் ஆவணப்பதிப்பாக நாம் கருத முடியும். இது இந்தியத் தேசியவாதத்தை, அந்த இயக்கம் முன்வைத்த கொள்கைத் திட்டங்களை அரசியல் பார்வையில் விமர்சனம் செய்த நூல். அநேகமாக இந்த வகையில் தமிழில் வெளிவந்த முதல் நூல் என்ற வகையிலும் இதற்குக் கூடுதல் முக்கியத்துவம் உண்டு என்கிறார் இந்நூலின் பதிப்பாசிரியர்.

**நூலின் உள்ளடக்கம்**

தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் கொடுமையான அடக்குமுறைக் காலத்திலேயே தானாக முன்வந்துமுதலாவதாக கம்யூனிஸ்ட் என்று பிரகடனம் செய்துகொண்ட சிங்காரவேலர் அவர்கள் எழுதியது, “சுயராஜ்யம் யாருக்கு?” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்தப் புத்தகம்.

இந்த நூலில் அவர் சுயமரியாதை இயக்கத்தின் அடுத்த நகர்வாக பொதுவுடைமை சமூகம் - சிங்காரவேலரின் வார்த்தைகளில் சொன்னால், சமதர்ம ராஜ்யம் - நோக்கி நமது மக்களை அணிதிரட்டிப் போராட வேண்டுமென அறைகூவல் விடுக்கிறார். இந்த நோக்கத்தை முன்வைத்து, அன்றைய அரசியல் இயக்கங்களான காங்கிரஸ், நீதிக்கட்சி, கம்யூனிஸ்ட் ஆகியவற்றின் கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் சிங்காரவேலர் அலசி ஆராய்கிறார். அதோடு, அன்று ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷ் ராஜ்யம், அதை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காந்தியாரும், காங்கிரசும் முன்வைத்த சுயராஜ்யம் ஆகிய இரண்டு அரசியல் அதிகார அமைப்புகளின் லட்சணங்களை நுணுக்கமாகப்

பட்டியலிட்டு மதிப்பீடு செய்கிறார். பின், தனது தேர்வு என்ற வகையில் சமதர்ம ராஜ்யம் என்ற கனவை முன்வைக்கிறார். வெறும் கற்பனாவாதக் கனவாக அது இல்லை என்பதே அதன் சிறப்பு.

பிரிட்டிஷ் ராஜ்யம், தனது அரசதிகாரத்தைக் கொண்டு இந்திய மக்களுக்குச் செய்த தீமைகள் எவை? நன்மைகள் என்னென்ன? கூட்டிக்கழித்துப் பார்த்தால்,மக்களுக்கு மிஞ்சுவது என்னவாக இருக்கும் என்பன போன்ற செய்திகளை நூலின் முதல் பகுதியில் 22 சிறு சிறு பத்திகளில் தெளிவுபடுத்தியுள்ளார். இதன் மூலம் இந்திய நாட்டு மக்களின் உழைப்பையும், நாட்டின் அளவற்ற செல்வங்களையும் கொள்ளையடித்து உறிஞ்சி ஆங்கிலநாட்டு மக்களை வளமாக வைத்திருப்பதுதான் அதன் ஒட்டுமொத்தக் குறிக்கோள் என்பது புரிகிறது. இங்கிலாந்து மட்டுமன்றி, உலகம் எங்கும் ஆட்சி செய்கின்ற ஆளும் வர்க்கங்களின் செயல்கள்,கொள்கைகள், திட்டங்கள் யாவுமே யாருடைய நலன்களுக்கானவை என ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

பிரிட்டிஷ் ராஜ்யத்தை எதிர்த்து, 'சுயராஜ்யம்' கோரிப் போராடி வரும் காந்தியாரும், காங்கிரசும் முன்வைத்துள்ள கோரிக்கைகள், கொள்கைகள் யாருக்கானவை என்று சிங்காரவேலர் அம்பலப்படுத்தியிருக்கிறார். இந்த இரண்டாவது பகுதியிலும் 21 குறுங்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இறுதிப்பகுதியில், சமதர்ம ராஜ்யம் என்பதன் பொருள் என்ன, அந்த ராஜ்யம் அமைந்தால் அது மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்யும் என்பதை விளக்குகிறார். இதில் மூன்று தலைப்புகளில் 21 குறுங்கட்டுரைகள் உள்ளன. 1917ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற்ற சோஷலிசப் புரட்சியினால், அந்த நாட்டின் மக்கள் சமூகம், குறிப்பாகப் பெண்களும், குழந்தைகளும் அடைந்துள்ள உரிமைகளையும்,நலன்களையும் தெளிவுபடுத்துகிறார்.

சுயராஜ்யமும் சமதர்மமும், சமதர்ம ராஜ்யத்தின் இலட்சணங்கள், சமதர்ம ஆட்சி முறை ஆகிய மூன்று தலைப்புகளின் மூலம்தான் முன்வைக்கிற சமதர்ம சோஷலிஸ்ட் அரசமைப்பின் தன்மைகளை சிங்காரவேலர் விளக்கி இருக்கிறார்.முதல் இரண்டு அரசமைப்புகளான பிரிட்டிஷ் ராஜ்யமும், சுயராஜ்யமும் எப்படி, எந்தெந்த விதங்களில் சமதர்ம ராஜ்யத்திலிருந்து வேறுபட்டவையாக அமையும்; இந்த மூன்றில் எது உலகமக்களில் ஆகப் பெரும்பான்மையோருக்கு உண்மையில் முன்னேற்றங்களைக் கொண்டுவரும் என்பதையெல்லாம் எளிமையாகவும், ஆதாரப்பூர்வமாகவும் விளக்கியிருக்கிறார்.

**பேசுபொருளும் வாத ஒழுங்கும்**


நூலின் மூன்று பகுதிகளையும் கருத்தூன்றிப் படிக்கையில், தொண்ணூறு ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில், தன் காலத்து அரசியல் நிலைமைகளைப் பற்றி எவ்வளவு துல்லியமாக மதிப்பீடு செய்திருக்கிறார் சிங்காரவேலர் என்ற மலைப்பே நமக்குஏற்படுகிறது. சுயராஜ்யம் யாருக்கு? இந்தக் கேள்விக்கு 1922இல் கயா காங்கிரசில் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தந்த பதிலைக் குறிப்பிட்டு முதல் பகுதியின் முன்னுரை தொடங்குகிறது: "இனிவரும் சுயராஜ்யம், இந்திய தேசத்தில் வாழும் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேருக்கு!" என்பது தாசின் வாக்கு. இவர்கள் யார் எனில், பஞ்சை பனாதிகளாகிய (அன்றைய இந்தியாவின்) முப்பது கோடிப் பாமர மக்களே. மிகுதியுள்ள சிறுபான்மையோருக்கு சுயராஜ்யம் வேண்டாமோவெனில், அவர்கள் உலகில் கிடைக்கக்கூடிய ஆதிக்கம், சம்பத்து முதலிய சுகபோகங்களை ஏற்கெனவே அனுபவித்து வருகிறார்கள்.எனவே அவர்களுக்கு சுதந்திரம் வந்தாலென்ன, வராவிட்டாலென்ன? என்று எண்ணினார் போலும்! என்று சிங்காரவேலர் குறிப்பிடுகிறார். அந்த முப்பது கோடி மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளை சிங்காரவேலர் 'பிரிட்டிஷ் ராஜ்யம்' என்ற இந்த முதல் பகுதியில் விரிவாக ஆராய்கிறார்.

பிரிட்டிஷ் அரசின் பயன் பற்றிய கட்டுரையில் அந்த ஆட்சிக்காக இந்திய மக்கள் தலைகளில் சுமத்தப்படும் செலவுகளைத் தொகுத்துத் தருகிறார். "அந்தச் செலவுகளால், கடன்களால் இங்குள்ள மக்கள் சதா இல்லாமையால், தரித்திரத்தில் வாடுகின்றனர். வருமானக்குறைவால் ஜீவனக்குறைவும்,அதனால் பிணிமூப்பு சாக்காடு ஏற்பட்டு அவற்றின் பயனாகப் பலகோடி ஜனங்கள் வருந்தி வாழவும் மாளவும் நேரிடுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியின் பயன் இதுதான் போலும்!" என்பது சிங்காரவேலர் வைக்கும் முத்தாய்ப்பு. உண்பண்டம், தின்பண்டங்களாகிய சர்க்கரை, உப்பு ஆகியவற்றின் மீது கூட வரிப்போடுவதால் அவற்றை சரிவர வாங்கி உண்பதற்குக்கூட பெரும்பான்மையோருக்கு சக்தி இல்லாமற்போய் விடுவதை இரண்டாவது கட்டுரை சுட்டுகிறது. சுதேசிகள் செய்யும் பொருள்களுக்கு உதவியளிக்காமல், அயல்நாட்டு சரக்குகள் அபரிமிதமாக இங்கு விலையாகின்றன. இங்கு பல்லாயிரக்கணக்காகக் கைத்தொழில் புரிவோருக்கு வேலையின்மையால் வறுமை மேலும் அதிகரிக்கிறது. அதே சமயம், பிரிட்டிஷ் பட்டாளத்துக்கு செலவு ஐம்பது கோடிக்கு மேல்! கிராமவாசிகளின் நிலைமையோ- சொல்லவே வேண்டாம்!"

"இந்தக்குடிகள் அருந்தும் உணவை இதர நாடுகளில் நாய்கள் கூடத் தொடா. இப்படியான உணவை உண்டு,நாம் வாழும் இந்த இந்தியாவில் வசித்து வரும் குடிமக்களுடைய நிலைமையைக் குறித்து எழுதும்போது நெஞ்சம் துடிக்கின்றது... கண்களில் நீர் ஊற்றெடுத்துப் பெருகுகின்றது...!" என

சிங்காரவேலர் மனம் நொந்து எழுதுவதைப் படிக்கும் வேளையில், நமக்கு இராமலிங்க வள்ளலாரின் கனிந்த நெஞ்சு பெருக்கிய கண்ணீர்தான் நினைவுக்கு வருகின்றது. ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன் என்றாரே அவர்! அதே நிலைமைதான்!

வறுமைக்குக் காரணம், குடிகளுக்கு நிலம் சொந்தமில்லாமை, நிலத்தீர்வை அதிகமாயிருப்பது, மதங்களின் கொடுமை, சாதி வித்தியாசக் கொடுமை, சமூக வாழ்க்கையில் கொடுமை, ஜனங்களின் அற்ப வயது, பெண்களின் நிலைமை, பொதுக்கல்வி இன்மை, மத மாச்சரியக்கொடுமை என இந்திய மக்களுடைய அவல நிலைமைகளுக்கான காரணங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாகத் தனித்தனிக் கட்டுரைகளில் விவரிக்கிறார் சிங்காரவேலர்.




சுயராஜ்யம் யாருக்கு? | ம.சிங்காரவேலு
பதிப்பு-ஆசிரியர் : க. காமராசன் | வெளியீடு : நீர்மை
206 பக்கங்கள்; 200 ரூபாய்.

‘சாதி வேற்றுமையால் வருங்கேடு’ கட்டுரையில் அவர் முன்வைக்கும் ஒரு வாதம் மனதை உலுக்குகிறது: “மதங்கள் ஒரு பக்கம் வருத்த, ஜாதி வேற்றுமையாலும் நமது நாடு சிதறுண்டு கிடக்க நேரிட்டது. மதப்பற்றுடனும், ஜாதி வேற்றுமையுடனும் யாரும் பிறப்பது இல்லை. நடுவில் தோன்றிய தோற்றங்களே இவை இரண்டும். இந்த இரண்டும் மனிதனுடைய அறியாமையையும்,அகங்காரத்தையும் வளர்க்க வந்த பழக்க வழக்கங்களே ஆகும். சகோதரத்துவம் என்ற பேச்சு ஜாதி உள்ளவரை இந்தியாவில் வெறும் பேச்சே. மந்திர தந்திரங்களால் நோயைப் போக்க முடியாதது போலவே, நமது சமூகப் பெருநோயாகிய ஜாதி என்னும் நோயைக் கள்ள நியாயத்தால் போக்க முடியாது என அறிக. பூணூலைத் தரித்துக்கொண்டு, அதற்குரிய ஜாதி சடங்குகளைச் செய்துகொண்டு, ஜாதியை விட்டு விட்டதாகக் கூறும் நமது பெரியவர்களின் சொற்கள் கள்ள நியாயம் என அறிக. வேதாந்திகளும், காந்தியார் உள்பட காங்கிரஸ்காரர்களும் ஜாதி விஷயமாகச் சொல்லி வருவது இந்த மோசடி வழக்கே. பிரம்மவாதிக்கு ஜாதி இல்லையாம். ஆனால் அவன் விவகாரத்தில் இருக்கும்வரை ஜாதி அனுசரிக்க வேண்டியதாம். இந்த நியாயம் அபிப்பிராயத்துக்கும், நடக்கைக்கும் முரண்படுகின்றதே என்றால், அது வேத ஒழுக்கமாம்! இந்த “வழுக்கைத் தலை நியாய”த்தைக் கொண்டு ஜாதி மத ஆபாசங்களைத் தழுவி வருவதால் ஜாதி ஒழியாமல் பல்லாண்டுதோறும் இந்தியர் ஒற்றுமையைக் குலைத்துக்கொண்டே வருகின்றது.”

சிங்காரவேலரின் விமரிசனங்களில், போகிறபோக்கில் இப்படியான ‘வழுக்கைத்தலை’ நியாயங்களை சாடிக்கொண்டே போவதைக் காண்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியாவுக்குக் கிடைத்த நலன்களையுங்கூடப் பட்டியலிட்டுக் கூறுகிறார். தன்னுடைய மதிப்பீட்டுக்கு ஓர் ஆதாரமாக 1930இல் வெளிவந்த ‘இந்தியாவின் நெருக்கடி’ என்ற சிறு பிரசுரத்தையும் குறிப்பிடுகிறார்: “நீர்ப்பாசனங்களுக்காகச் செய்யப்பட்ட பெருங்கட்டட வேலைகள்; தேசம் முழுமையும் போடப்பட்டுள்ள ரெயில் பாதைகள்; அதே போல நாடு முழுவதிலும் ஆஸ்பத்திரிகளும், சுகாதார ஸ்தாபனங்களும் ஏற்படுத்தியுள்ளனர்; நான்காவது, நியாய ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டு வழக்குகள், சண்டைகள் முதலியவற்றைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு செய்துள்ள ஏற்பாடுகள்; கடைசியாக வரிகளை வசூலிக்கவும், நாட்டு அமைதியைக் காப்பாற்றவும், நியாயத் தீர்ப்பு செய்யவும் தகுதியான உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தியது.”

ஆனால், இவற்றுக்கான “செலவுகள் ‘தலை கனத்தவை’. செலவினத்தைத் தாங்க முடியாமையால்தான் ஜன சமூக வாழ்வுக்கு அத்தியாவசியமாகவுள்ள கல்வி, சுகாதாரம், வைத்தியம், விவசாயம் முதலியவற்றுக்குப் பணம் போதாமை ஆகிவிட்டது” என்று விளக்கும் சிங்காரவேலரின் தர்க்கம் நேரடியானது; எந்தப் பாசாங்கும் இல்லாமல், வார்த்தை ஜாலங்களில் மயக்காமல் நேரடியாக இயக்கஇயல் சிந்தனைகளோடு இலக்கை நோக்கிப் பாயும் அம்பு போன்ற கூர்மையுடன் தைப்பது.

பொருளாதார அடித்தளத்தைப் பற்றி எவ்வளவு வலிமையான வாதங்களை முன்வைக்கிறாரோ அதேயளவு வலிமையுடன் ஜாதி, மத, சமூகக் கொடுமைகளைக் களைந்தெறியவும் வலியுறுத்துகிறார். இந்த அம்சத்தில்தான் மற்ற சமகாலக் கம்யூனிஸ்டுகளிடமிருந்து சிங்காரவேலர் வேறுபடுகிறார். அதேபோல, காந்தியாரும் காங்கிரசும் முன்வைத்த சுயராஜ்யம் என்ன மாதிரியான நன்மைகளைத் தரும் என்பதிலும் அவருக்கு பிரமைகள் ஏதுமில்லை. அந்த சுயராஜ்யம் பற்றிய அலசலை இரண்டாம் பகுதியில் முன்வைக்கிறார். இரண்டுபக்க முன்னுரையில், அன்றைய இந்திய மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்த துன்ப துயரங்கள் அத்தனையையும் ஒன்று விடாமல் பட்டியலிட்டு விட்டுக் கடைசியில் முத்தாய்ப்பாக அவர் சொல்லுவதைப் பாருங்கள்: "அன்றாடம் வருமானம் ஒரு அணா மூன்று தம்படியான இந்தத் துக்ககரமான வாழ்வை எவ்விதமாக சுயராஜ்யத்தில் தீர்க்கப்போகின்றார்கள் என்பதைப் பார்ப்போம்."

காங்கிரஸ் முன்வைத்த திட்டம் பற்றிய விமர்சனம் இது: "தற்போது நடக்கும் பிரிட்டிஷ் ஆட்சிமுறையே சுயராஜ்யத்திற்கு அடிப்படை ஆகும். அதே மந்திரிகள், அதே கோர்ட்டுகள், அதே சட்டசபைகள், அதே கவர்னர்கள், அதே தனிவுடைமை, அதே ஜீவனம். ஆனால், இந்த வேலைகளைப் பார்ப்போர் தற்போதுள்ள ஆங்கிலேயர்களுக்குப் பதிலாக, இந்தியர்களாய் இருப்பார்கள். இந்த வித்தியாசம் ஒன்றைத்தவிர, மற்ற விஷயங்களில் பெரும்பான்மையும் அதே விகிதமே!" "காங்கிரஸ் அரசியல் திட்டம் புராதன முதலாளித் திட்டமே. வாஸ்தவத்தில் இது ஜனநாயகமே ஆகா" என்று தெளிவுபடுத்தி விடுகிறார் சிங்காரவேலர். "பொதுமக்களைப் பசிப்பிணியிலிருந்து மீட்கும்படியான சுயராஜ்யத்தை காந்தியார் வட்டமேஜையிலும் பேசவில்லை. காங்கிரசின் திட்டத்திலும் இல்லை. மடாதிபதிகளையும், மடங்களையும் ஒருபக்கம் தழுவிக் கொண்டு, ஜாதிமதவாதிகளையும் இன்னொரு பக்கத்தில் அணைத்துக்கொண்டு, பாங்கி முதலாளிகள், மில் முதலாளிகள், சுரங்க முதலாளிகள், நில முதலாளிகள், வீடுவாசல் முதலாளிகளுடன் கூடிக்கொண்டு தரித்திர நாராயணனுடைய பசித்தீவினையை எப்படி தனது சுயராஜ்யத்தில் காந்தியார் தீர்க்கப் போகிறார் என்றும் கேட்கின்றோம்."

இதுபோலவே கதர், கைராட்டினம், தர்மகர்த்தா முறை, குடி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு உள்ளிட்ட காந்தியாரின் திட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பரிசீலித்துப் பார்க்கிறார். அவை எப்படி நடைமுறையில் சாத்தியமில்லாதவை என்பதை அடுக்கடுக்கான கேள்விகளாலும் ஆதாரப்பூர்வமான மறுப்புகளாலும் நிறுவுகிறார். இந்திமொழியை எல்லாரும் கற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுவதை நிராகரிக்கிறார். மொழியில் தெய்வ பாஷை என்றோ, நீச பாஷை என்றோ எதுவுமில்லை என்பதைத் தெளிவாக உரைக்கிறார்.

மற்ற அரசியல் கட்சிகள், ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம் இவ்வாறு அன்றைக்குக் களத்திலிருந்த எந்த ஓர் அரசியல் இயக்கத்தையும் விட்டு விடாமல், புறக்கணிக்காமல் அலசி ஆராய்கிறார். மகம்மதிய-இந்து மதங்களுக்கிடையில் நிலவும் பிரச்சினைகள், காந்தியாரின் தடுமாற்றம் என்ற அம்சங்களைப் பற்றிய தன் கருத்துகளை விரிவாக முன்வைத்தபின், இறுதிப்பகுதியானசமதர்ம ராஜ்யம் பற்றிய விளக்கங்களுக்கு வருகிறார் சிங்காரவேலர்.

சுயராஜ்யமும் தேசியமும் என்ற தலைப்பில் எட்டுக் கட்டுரைகள்; சமதர்ம ராஜ்யத்தின் இலட்சணங்கள் என்ற தலைப்பில் மூன்று கட்டுரைகள்; சமதர்ம ஆட்சிமுறை என்ற தலைப்பில் பன்னிரண்டு கட்டுரைகள் ஆகியவற்றின் மூலம் சோஷலிச இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குரிய திட்டங்களைப் பற்றி சிங்காரவேலர் எழுதியிருக்கும் செய்திகளைப் படித்துப் பார்த்தால்தான் அவருடைய சிந்தனைகளின் ஆழத்தையும், அகலத்தையும் நாம் புரிந்துகொள்ள முடியும். இவற்றிலிருந்தும் மேற்கோள் காட்டுவதற்கும், விதந்தோதுவதற்கும் ஏராளமான அம்சங்கள் உள்ளன. ஆயினும் இக்கட்டுரை அந்த நூலைப்பற்றிய அறிமுகமே என்பதாலும், விரிவஞ்சியும் அதைத் தவிர்த்துள்ளேன்.

### இந்நூல் வாசிப்பின் இக்காலத் தேவை

இந்தியத் தேச அரசில் இன்று இந்துத்துவப் பாசிசம் ஆட்சி செலுத்திவரும் சூழலில், இந்தியத்தேசியவாதத்தின் தொடக்கமே இந்து தேசியவாதம்தான் என்ற கருத்து வலுவாக மேலெழுந்து வருகிற சூழலில் நாடு இன்று இருக்கிறது. இன்று மக்களுடைய வாழ்வின் சகல தளங்களிலும் பார்ப்பன வகுப்பின் மேலாதிக்கத்தை நிறுவிக்கொள்வதே இந்திய / இந்துத்தேசியவாதம் என்பது வெளிப்படை. இத்தகைய விமரிசனப்பார்வையை முதலில் தொடங்கி வைத்தவர் அயோத்திதாசர். அவரைத் தொடர்ந்து பார்ப்பனரல்லாதார் இயக்கம், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகியவை அவரவர் அரங்கங்களில் இந்தியத்தேசியவாதத்தை விமர்சனம் செய்து வந்துள்ளனர்.

இந்தப் பின்னணியில்தான், 'சுயமரியாதை-சமதர்ம இயக்கம்' என்ற முனைப்புடன் தோழர் சிங்காரவேலர் 'சுயராஜ்யம்யாருக்கு?' என்ற சிறுநூலை வெளியீட்டுள்ளார். இதன் முதல்பகுதியை சுயமரியாதை சுடர் : பொறி-1 என வரிசை எண் இட்டு 1931-இல் சென்னை கற்பகம் கம்பெனி

பதிப்பித்துள்ளது. இரண்டாம் பகுதியை 1933-இல் சமதர்ம பிரசுரம் வெளியிட்டுள்ளது.இதன் மூன்றாவது பகுதியான ‘எது வேண்டும்? சுயராஜ்யமா? சமாதர்ம ராஜ்யமா?’ என்ற சிறு நூலை 1934-இல் சமதர்ம பிரசுரம் வெளிக்கொண்டு வந்துள்ளது. இப்போது தேசியவாதம் குறித்த விமரிசன சிந்தனைக்காக இதனைத் திருத்தமான பதிப்பாகக் கொண்டுவர வேண்டும் என்று முடிவு செய்து,காமராசனும் சீர்மை பதிப்பகத்தாரும் வெளியிட்டுள்ளனர்.மேற்கண்ட மூன்று நூல்களையும் ஒரே நூலாக இணைத்து 206 பக்கங்களில் செம்மையான பதிப்பாக இப்போது வந்துள்ள ‘சுயராஜ்யம் யாருக்கு?’ அமைந்துள்ளது.

**பதிப்பாசிரியக் குறிப்பும் பதிப்பு முறையும்**

பதிப்பு-ஆசிரியர் என்ற முறையில், க.காமராசன் 39 பக்கங்களில் விரிவாகத் தனது குறிப்புகளை எழுதியுள்ளார். தான் பின்பற்றியுள்ள பதிப்பு நியமங்கள், முற்றிலும் வழக்கில் இல்லாத சில சொற்களை மட்டும் இன்றைய வழக்குப்படி மாற்றியுள்ளது, சில தெளிவான சொல்வடிவங்களை அமைத்திருப்பது போன்ற விவரங்களை இறுதியாகக் குறிப்பிட்டுள்ளார். தவிர, குறிப்புகளின் இறுதியில் சிங்காரவேலர் எழுதிய நூல்களின் பட்டியலையும், அவரைப்பற்றி மற்றவர்கள் எழுதிய நூல்களின் பட்டியலையும் கொடுத்திருக்கிறார்.

‘சிந்தனை சிற்பி சிங்காரவேலர்’ என (1866-1946) அறிஞர் அண்ணாவால் போற்றப்பட்ட ம.சிங்காரவேலு அவர்கள் பற்றிய ‘வாழ்வும் எழுத்தும்’ என்ற பதிப்பாசிரியக் குறிப்புப் பகுதி வெறுமனே நிகழ்வுகளின் தொகுப்பாகமட்டும் அமையவில்லை. மாறாக, சில நுணுக்கமான ஒப்பீடுகளின் தொகுப்பாகவும் உள்ளது: சிங்காரவேலர், பண்டித அயோத்திதாசரைவிட பதினைந்து வயது இளையவர்; எனினும் அயோத்திதாசரைப் போன்றே இவரும் அன்றைய தமிழகத்தின் பவுத்த மறுமலர்ச்சி இயக்க முன்னோடிகளில் ஒருவராவார். அதே போல, தந்தை பெரியாரைவிடவும் 19 வயது மூத்தவர்; ஆயினும்,பெரியாரைப் போலவே, இந்திய அரசியலில் ‘காந்தி யுகம்’ தொடங்கிய 1917இல் நேரடி அரசியல் களத்தில் நுழைந்தவர். சோவியத் ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை ஏற்று நடத்திய தோழர் லெனின் அவர்களை விட பத்து வயது மூத்தவர்; எனினும் அந்தப்புரட்சியினால் ஈர்க்கப்பட்டு, ஏறக்குறைய அறுபதாம் வயதில் தான் ஒரு ‘கம்யூனிஸ்ட்’ என அறிவித்துக் கொண்டவர். அவ்வாறு அன்றைய சூழலில் ஒருவர் தன்னைக் கம்யூனிஸ்ட் என்று அறிவித்துக் கொள்வதற்குப் பெருந்துணிவு தேவையாயிருந்தது. காரணம், பிரிட்டிஷ் இந்திய அரசு அன்றைய நாள்களில் யாரெல்லாம் கம்யூனிஸ்டுகள் என்று சந்தேகித்ததோ, அவர்கள் அத்தனைபேர் மீதும் தேசத் துரோக சதி வழக்குகளைப் போட்டு சிறையிலடைத்து, பெரும் கொடுமைகளை இழைத்து வந்தது. இதோடுகூட, அறுபது வயதில் அவர் தனது கருத்து நிலைகளை,அரசியல் நோக்கை மறுபரிசீலனை செய்து தன்னை கம்யூனிஸ்டாக மறுவார்ப்பு செய்துகொள்வதற்கான பெருந்துணிவும்,தெளிவும் இருந்தன.

மேற்கண்ட ஒப்பீடுகளை மிகவும் செறிவாகச் சுட்டிக்காட்டுகிறார் காமராசன். தவிர, கடலுடன் அன்றாட வாழ்வுக்குப் போராடும் மீனவர் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வந்தவராயிருப்பினும், பெரும் செல்வம் ஈட்டிய வியாபாரக் குடும்பத்தின் பின்னணியில் வாழ்ந்தவர்.படித்து வழக்குரைஞராகவும், வணிகராகவும் விளங்கியவர். மிகப்பெரும் நூல்நிலையத்தைத் தன் இல்லத்தில் பராமரித்து வந்தவர். ஏராளமான நூல்களை ஆங்கிலத்தில் படித்து, உள்வாங்கி எளிய தமிழில் மேலைய நவீன சிந்தனைகளையும்,அறிவுத்துறைகளையும், இயற்கை அறிவியல் புலங்களையும் தமிழுக்கு அறிமுகம் செய்தவர்.

இவருக்கு பவுத்த நெறியில் ஈடுபாடும் இருந்திருக்கிறது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் தோன்றிய பவுத்த மறுமலர்ச்சியின் போது சிங்காரவேலருக்கு அந்த நெறியில் ஈடுபாடு தொடங்கியிருக்ககலாம் என்பது காமராசனின் அனுமானம்.

மேலையுலகின் அறிவொளி மரபுக்கு இணையானதாக பவுத்தத்தை முன்னிறுத்தி வரித்துக்கொள்ளும் போக்கு அன்றைய உள்ளூர் அறிவாளிகளிடம் நிலவியுள்ளது. அந்தவகையில் சிங்காரவேலரும், அவரது சகபயணியான பேராசிரியர் இலட்சுமி நரசு அவர்களும் பவுத்த நெறியை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இந்த அறிஞர் குழுவிடம் வெளிப்பட்ட மிக முக்கியப் பண்புகளாக சாதிவேறுபாடுகள் எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, ஒடுக்கப்பட்ட மக்கள் நலன்மீதான அக்கறை ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார் காமராசன்.

தமிழ்நாட்டில் ‘விதிவிலக்கான’ ஒரு கம்யூனிஸ்டாக சிங்காரவேலர் விளங்கினார் என்று ஒரு குறிப்பு ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கிறது. என்ன காரணம்? அன்றைய தமிழக அரசியல் களத்தில் முதன்மை பெற்ற இந்தி எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களையெல்லாம் ஆதரித்து நின்றவர் அவர். இந்தக்கருத்தாக்கங்களை ஏற்றுக்கொண்டதுடன், அவற்றை வளர்த்தெடுக்கவும் செய்த சுயமரியாதை சமதர்மி சிங்காரவேலர்.

இந்திய, தமிழக கம்யூனிஸ்ட் இயக்கம் முன்னெடுத்துப் போராடிய கொள்கைகள், ஆவணங்கள், பரப்புரைகள், அந்த இயக்கத்தின் தலைவர்கள்,

ஆதரவாளர்கள், ஆய்வாளர்களுடைய எழுத்துகள் ஆகியவற்றையெல்லாம் கவனமாகப் பரிசீலனை செய்தோமெனில், மேற்கண்டவாறு சிங்காரவேலர் எடுத்த நிலைப்பாடுகள் எவ்வளவு வேறுபட்டவை என்பதை நம்மால் உணரமுடிகிறது.இந்திய சமூக வரலாறுகளை எழுதியிருக்கும் பல கம்யூனிஸ்ட் சார்பு ஆய்வாளர்களுடைய நூல்களும்,தலைவர்களின் நூல்களும் சாதிய ஆதிக்கம் என்ற அம்சம் இந்திய,குறிப்பாகத் தமிழக மக்களிடையே எவ்வளவு ஆழமாக வேரூன்றிப் போயிருக்கும் விஷ விருட்சம் என்பதற்குப் போதிய அழுத்தம் தந்திருக்கவில்லை என்பதை வாசிப்பவர்கள் எளிதில் உணரமுடியும்.இந்த அடிப்படையில் பார்க்கையில்,சிங்காரவேலர் ஒரு விதிவிலக்கான கம்யூனிஸ்டாகவே விளங்கியவர் என்பதை முழுமனதாக ஆமோதிக்க முடியும்.

பின்னிணைப்புகளில் சமதர்ம பிரசுரங்களுக்காகப் பெறப்பட்ட நன்கொடைகளின் விவரங்களை சிங்காரவேலர் தந்துள்ளார். முதல் பதிப்புக்குப் பதிப்பாளரும், குடி அரசு பதிப்பில் பதிப்பாளரும், இரண்டாம் பதிப்பில் வி. சர்க்கரை செட்டியார் ஆங்கிலத்தில் எழுதிய முன்னுரையும் இடம்பெற்றுள்ளன. அந்தப் பழைய பதிப்புகளின் முகப்பு அட்டைகள் இடம்பெறுகின்றன. இறுதியாக சமதர்ம புத்தகங்கள் கட்டுரையில் சிங்காரவேலரின் மனக்குமுறலைப் பார்க்கிறோம்: “மூடநம்பிக்கைகள் இன்றும் உலகம் எங்கும் பரவி இருத்தலுக்குக் காரணம், பொய் நம்பிக்கைகளை வளர்க்கும் புத்தகங்களே ஆகும்.மெய்ஞானமும், பகுத்தறிவும் உலகில் அதிகமாகப் பரவாததற்கு முக்கியக் காரணம், அவைகளைப் பற்றிப் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள் அதிகம் விலை படாமையால் என அறிக. இவ்விதம் நமது வாழ்வின் கவைக்கு உதவாத புத்தகங்களைக் கோடானுகோடி மக்கள் வாங்கிப்படிப்பதால் மூட நம்பிக்கைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் அடிமைத்தனமும் அறிவின்மையும் உலகில் நீடித்து வருகின்றன. இந்த நிலையில் என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. படிக்கின்றவர்கள் முன்வந்தால் ஒழிய நமது சமதர்மம் மூலையில்தான் கிடந்து வரும்” என்கிறார் சிங்காரவேலர். இந்த வரிகளுக்கு விளக்கம் தேவையில்லை.தொண்ணூறு ஆண்டுகள் கடந்த பின்னர், உலகெங்கனும் வலதுசாரி, மத அடிப்படைவாதப் பிற்போக்கு சக்திகளின் ஆதிக்கம் மேலோங்கிவரும் சூழலில், மேற்கண்ட நிலைமைகள் இன்றளவும்கூட பெரிதும் மாறிவிடவில்லை.

**பதிப்பாசிரியர்**

இந்நூலின் பதிப்பாசிரியர் தோழர் க. காமராசன், தமிழ்நாட்டு ஆய்வுலகில் நம்பிக்கையூட்டும் ஓர் இளைஞர். ஆழ்ந்த படிப்பனுபவத்துடன் மற்றவர்கள் சாதாரணமாகக் கடந்து போய் விடும் செய்திகளைக் கவனமாக அணுகி அவற்றின் பின்னணி அரசியலை அம்பலப்படுத்தி வருபவர்.ஆரவாரமில்லாமல் அமைதியாகப்பணி செய்யும் இயல்புடையவர். தனது கருத்துகளில் உறுதியாகக் காலூன்றி நின்று, அவற்றை நிறுவும் தரவுகளை முன்வைத்து வாதிடும் ஆய்வுக்கட்டுரைகளின் ஆசிரியர். ஆய்வு நூல்கள் பதிப்பு-ஆசிரியப்பணியிலும், ஆய்விதழ்களின் வெளியீட்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி வருபவர். பேராசிரியர் இரா. சீனிவாசன், பேராசிரியர் வீ.அரசு போன்ற மூத்த ஆய்வாளர்களுடன் இணைந்தும், தனியாகவும் பல்வேறு ஆய்வுகளையும், தொகுப்புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். இவர் சமீபத்தில் பதிப்பித்த நூல்தான் இப்போது மேற்கூறியவாறு சீர்மை பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்

## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Chennai |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | A.Sivakumar |
| Nationality | : | Indian |
| Address | : | Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |
| 4. Publisher's Name | : | Shanmugam Saravanan |
| Nationality | : | Indian |
| Address | : | New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |
| 5. Editor's Name | : | T.Stalin Gunasekaran |
| Nationality | : | Indian |
| Address | : | 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14. |


6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.


(Shanmugam Saravanan)

Signature of Publisher

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 180




₹ 175




₹ 130




₹ 110





பதிப்புத்துறையில் தொடர்ந்து 25 ஆண்டுகள் சேவை புரிந்தமைக்காக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் விற்பனை மேலாளர் ச.குமார் அவர்களை 06.03.2022 அன்று சென்னை புத்தகக் கண்காட்சி அரங்கில் நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்கள் பாராட்டி கௌரவித்தார்.


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 40




₹ 95




₹ 135



கட்டுரை

# தகனம் புதினத்தில் நாட்டுப்புறக் கூறுகள்

ப.இந்திரா

மேலை நாட்டுத் தாக்கத்தால் புதின இலக்கியம் தோன்றியிருப்பினும் இம்மண்ணிற்குப் பொருந்தும் வகையிலான வடிவமைப்பைக் கொள்ளும் வகையில் தொடக்கக்கால நாவல்கள் நாட்டுப்புறக் கதை அமைப்பினைப் பின்பற்றியுள்ளன. நம்முடைய பாரம்பரிய வரலாற்றினை அறிந்து கொள்ள நாட்டுப்புறக் கூறுகள் புத்துயிர் பெற்று இலக்கியப் படைப்பாளர்களின் படைப்பில், படைப்பாளர்களின் ஈடுபாட்டின் காரணமாக வாய்ப்பு நேரும்போதெல்லாம் பாத்திரங்களின் கூற்றாகவோ வெளிப்படுத்துகின்றனர். வேதநாயகம் பிள்ளை அவர்களின் தமிழின் முதல் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரத்தில்' நாட்டுப்புற இலக்கியத்தை கருவியாகக் கொண்டு அமைத்துள்ளார். அதே போல் தமிழில் இரண்டாவது நாவலான ராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரம்' நாட்டுப்புறக் கூறுகள் நிறைந்ததாக நாட்டுப்புற மணத்துடன் படைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுச் சுருக்கம்:**

பரந்துபட்ட விவசாய உற்பத்தியிலும், சாதி சார்ந்த தொழில்களிலும் இன்னபிற சிறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ள நமது கிராமங்களின் வாழ்க்கை முறையை புதினம் கருக்கொள்ளும் போதெல்லாம் கிராமத்தின் உருவாக்கத்தில் தவிர்க்க முடியாத கலையழகான நாட்டுப்புற இலக்கியம் இடம்பெற்றுவிடுகிறது. எனவே கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் புதினம், நாட்டுப்புற இலக்கியம் போர்வையைப் போர்த்திக் கொண்டே பிறக்கிறது. நாட்டுப்புற நாவலாசிரியர்கள் என்ற முத்திரை குத்தப்பட்டவர்களின் படைப்புகள் இதற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

ஆய்விற்கு எடுத்துக் கொண்ட ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'தகனம்' புதினம் வெட்டியான் தொழில் செய்யும் ஏழை மக்களின் வறுமையை மையமாக வைத்து அமைந்துள்ளது. தாழங்குப்பம் என்ற

கிராமத்தில் வாழும் மக்கள் வெட்டியான் தொழில் செய்து வருகின்றனர். அத்தொழிலில் அவர்களின் வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகள் என்னவென்பதை இந்நாவலின் மூலம் விளக்கியுள்ளார். ஆண்டாள் பிரியதர்ஷினி அந்நாட்டுப்புறக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழமொழிகள்:**

புதின ஆசிரியர் தாம் உணர்த்த நினைக்கும் கருத்தை வெளிப்படுத்த சிறந்த கருவியாகப் பழமொழியைக் கையாண்டுள்ளார். கதை சொல்லும் இப்பழமொழிகள் சொலவடை, முதுமொழி, பழஞ் சொல், முதுசொல் என்று பலவாறு அழைக்கின்றனர். இவற்றை தொன்மை மிக்கவை என்றும் சொல்லலாம். இன்றும் தோன்றிக் கொண்டு இருப்பவை என்றும் சொல்லலாம். சுருக்கமான வார்த்தையைக் கோவைகளில் சுவையேற்றிப் பார்க்கும்போது அவைகள் இனிக்கின்றன. சொன்னதையே திரும்பிச் சொல்லும்போது அதிலும் ஒரு சுவை ஏற்படுகிறது.

"நுண்மையுஞ் சுருக்கமும் ஒளியுமுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்ததற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப"[1]

என்று தொல்காப்பியர் பழமொழிக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

"பழைய மொழியே பழமொழி
பழமையும், எளிமையும், இனிமையும்
நிறைந்தவை
பழமொழிகளைக் கொண்டு மக்களின்
பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறியலாம்"[2]

என்று பழமொழியின் சிறப்பை திருமதி.கிருட்டிண சஞ் சிவி கூறியுள்ளதாக சு.சண்முக சுந்தரம் அவர்கள் தனது நூலில் கூறியுள்ளார்.

"நாட்டுப்புற மக்களின் நுண்மையான அறிவின்
வெளிப்பாடே பழமொழி"[3]

என்று பழமொழியைப் பற்றி மீ.அமு.நாசிர்அலி கூறுவதாக சு.சண்முகசுந்தரம் கூறியுள்ளார்.

புதினத்தில் உலகம், நாடு, ஊர், குடும்பம் எனப் பல நிலையிலும் பழமொழிகளை ஆசிரியர் கையாண்டுள்ளார். சின்ராசுவிற்கு குலத்தொழிலான வெட்டியான் வேலைக்குப் போகாமல் அலுவலக வேலைக்கு முயற்சி செய்து கிடைக்காததால் வீட்டிற்குத் திரும்பி வருகிறான். அப்போது பக்கத்துவீட்டு மாயாண்டி,

"கழுதைகெட்டால் குட்டிச் செவருதான்"[4]

என்று சின்ராசுவை பார்த்து நக்கலாகச் சொல்கிறான்.

"கும்பி காஞ்சா குச்சிக்குள்ளதான் வந்தாகணும்"[5]

என்ற பழமொழியை சில நாட்கள் கழித்து வந்த தன் மகனைப் பார்த்து சின்ராசுவின் தாய் முனியம்மா பேசுகிறாள். மயானத்தில் அலுவலகப் பணியாளராக வேலை பார்க்கும் மணிமாறன், வெட்டியான்களைப் பார்த்துப் பிணம் எரிக்க எந்திரம் வரபோகின்றது என்று கூறும்பொழுது

"உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா"[6]

கதைதான் என்று கூறுகிறான். எந்த வேலைக்கும் சொல்லாமல், அலுவலக வேலைக்குத்தான் போக வேண்டுமென்று முயற்சி செய்து அவ்வேலை கிடைக்காமல் திரும்பி வரும் தன் மகனைப் பார்த்து முனியம்மா,

"போன மச்சான் திரும்பி வந்தாச்சு"[7]

என்று பேசுகிறாள். சின்ராசுவின் தங்கை ராணிக்கு சடங்கு செய்யும்பொழுது மட்டன் பிரியாணி வாசனை ஊரைத் தூக்கியது. தாத்தாவுக்குக் கட்டுப்படுத்த முடியாமல் வாய் ஊறியது.

ஏட்டி மாரி ... எனக்கு ஒரு வா குடுட்டி,

"பசி வயத்துக்காரனை விட்டுவிட்டு புளி
ஏப்பக் காரனுக்குப் பந்தி வைக்கீக?"[8]

என்று தாத்தா கூப்பாடு போட்டார். ஆசிரியர் இது போன்ற பழமொழிகளை பதிவு செய்துள்ளார்.

**நாட்டுப்புறப் பாடல்கள்:**

நாட்டுப்புறப்பாடல் உள்ளத்தைக் கவரும் இனிய ஓசையுடன் சிறுசிறு சொற்களைக் கொண்டு எளிமையான நடையில் உணர்ச்சிக் கலப்புடன் கூடியது. எதுகை மோனையுடன் சொல் அடுக்கையும் பெற்றிருப்பது! ஒரு சொல்லோ, ஒரு தொடரோ ஓரடியோ மீண்டும் மீண்டும் இடம்பெறும் தன்மையுடையது. அந்தாதி அமைப்புடன் கூடியது. ஒரு பொருள் மீது பல அடுக்கி வருவது. தொழில் செய்யும் போதும், விளையாட்டின் போதும் பலரும் சேர்ந்து பாடும் கட்டமுதப் பாடலாக இருப்பது. பாடியவர் பெயர் தெரியாத நிலையினையுடையது. உரையாடல் தன்மையினைப் பெற்றிருப்பது. இவை நாட்டுப் புறப்பாடல்களின் இயல்புகளாகும். இந்நாட்டுப் புறப்பாடல்கள் நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதாக் கவிதைகள், காற்றில் மிதந்த கவிதைகள், மக்கள் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என்று பலவாறு அழைக்கின்றனர்.

கல்லாதவர் மட்டுமல்லாமல் கவிஞர் பெருமக்களும் கூட இந்த நாட்டுப்புறப் பாடல்களில் ஈடுபாடு கொண்டிருக்கின்றனர்.

"நாட்டுப்புறப் பாடல்கள் எளிமையானவை,
பகட்டில்லாதவை, பொய்கலப்பற்றவை,
நேரானவை, இனிமையும், இசைப்பொலிவும்
நிறைந்தவை, தீங்கற்ற கலைக் கருவூலங்கள்"[9]

என்று நாட்டுப்புறப் பாடல்கள் பற்றி திரு.அன்னகாமு கூறிய கருத்துக்களை சு.சண்முகசுந்தரம் அவர்கள் தனது நூலில் பதிவுசெய்துள்ளார். நாட்டுப் புறப்பாடல்கள் மக்களுடைய வாழ்வின் எல்லா நிலைகளிலும் அதாவது பிறப்பு, உழைப்பு, பயிர்த்தொழில், கைத்தொழில், திருமணம், சடங்கு, இறப்பு ஆகிய எல்லா நிலைகளிலும் மக்களை ஆட்படுத்தி வசப்படுத்துவனவாகும்.

"இரட்டக் குத்தற மாதவா
அறுப்பு அறுக்கிற சோதவா
மாட்ட மடக்குடா மாதவா
முக்கோ தக்கோடு
மூணாம் பெரிய கோடு
நாங்கு நடலம்
தேங்கா புடலம்
அஞ்சல் கொஞ்சல் தட்டாத்தி
அழுக்கெடுக்கும் வண்ணாத்தி
கோர் கோர் சித்தப்பா
கூட வா பெரியப்பா"[10]

என்ற பாடல் தகனம் புதினத்தில் இடம் பெற்ற நாட்டுப்புற விளையாட்டுப் பாடலாகும்.

**ஒப்பாரிப் பாடல்கள்:**

மனிதனுடைய வாழ்க்கை தாலாட்டுப்பாடலில் தொடங்கி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகிறது. ஒப்பாரியின் சொற்கள் எல்லாம் சோகச் சுமையுடன் விளங்குகின்றன. இறந்தவர்க்கும் தனக்கும் உள்ள உற்ற உறவுமுறை, அவர்களின் செயல்கள், குடும்பத்தின் நிலை ஆகியவற்றை விவரிக்கும் நிலையில் ஒப்பாரி அமைந்துள்ளது.

மனித வாழ்வின் உச்சக்கட்ட சோகத்தை வெளிப்படுத்த ஒப்பாரி பெரிதும் உதவுகிறது. பெண்களுக்குத் தங்களின் மன அழுத்தத்தை வெளிப்படுத்த ஒப்பாரிப் பாடலே பெரிதும் பயன்படுகிறது. பாதுகாப்பை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் வெளிப்படுகின்றது. தலைச்சன் பிள்ளை, பெற்றவருக்கு தாலாட்டும், புருசனை இழந்தவர்களுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும் என்பார்கள்.

பொதுவாகவே பெண்கள் இரக்கக் குணமுடையவர்கள். சோகமான நிகழ்வுகள் எவற்றைக் கண்டாலும் கண்ணீர் தானாகவே வந்துவிடும். தன் குடும்பத்திலோ அல்லது தன்னுடைய உறவுக்காரர்கள் குடும்பத்திலோ அல்லது யாரேனும் இறந்து போனாலோ தங்கள் சோகம் முழுவதையும் ஒப்பாரியில் வெளிப்படுத்துவார்கள் பெண்கள்.

புதினத்தில் ஆசிரியர் ஒப்பாரிப் பாடலைப் புகுத்தியுள்ளார். சின்னப்பொண்ணுவின் தாய் கோவிந்தம்மாள் இறந்ததைக் கண்டு வாய்விட்டுக் கதறி ஒப்பாரி வைத்தாள் சின்னப்பொண்ணு

"என்னைப் பெத்த அம்மாவே!
என்னைப் பெத்த அருமையென்ன
பேரிட்ட நேர்த்தி என்ன?
ஆத்தக் குறுக்கடைச்சி
அழகுச் சம்பா நெல் வெதைச்சி
ஆத்துத் தண்ணி வத்தவந்த
அழகு சம்பா வாடுறனே
குளத்தைக் குறுக்கடைச்சி
குலவிளக்கு நெல் வெதைச்சி
குளத்துத் தண்ணி வத்தவந்த
பெத்தமக குலவாழை வாடுறனே
துண்டியலு போன இடம் எனக்குத்
தடமே தெரியலியே! உங்க
பல்லக்குப் போன தம் எனக்குப்
பாதை தெரியலியே!"[11]

என்று மார்பில் அடித்துக்கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள் சின்னப்பொண்ணு

"பார்க்க விரும்புறேனே உன்னைப்
பார்த்திருக்க தேடுறேனே
காண விரும்புறேனே உன்னைக்
கண்டிருக்கத் தேடுறேனே"[12]

என்று முனியம்மாவைக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்தாள் சின்னப்பொண்ணு. ஒரு பெண் துயரப்படும் போது தன் வருத்தத்தைப் பாட்டாகப் பாடுவாள். தன் மகன் குழிக்குள் விழுந்ததைக் கண்டு முனியம்மா மனம் நொந்து புலம்புவதை நாவலின் வழி அறியமுடிகிறது.

சுவரில் சாய்ந்திருந்த தன் மகன் சுரேசை முனியம்மா தாவங்கொட்டையைப் பிடித்து வாயை வலுக்கட்டாயமாகத் திறக்க வைத்துத் தண்ணீரை ஊற்றினாள். பாதி உள்ளேயும் பாதி வெளியேயுமாய் வழிந்து போனது. ஐயோ எம்புள்ளக்கிப் பேச்சில்லை, சிரிப்பில்லை, எம்மா ஆத்தான்னு குரல் இல்லையென்று ஒப்பாரி வைக்கிறாள்

"அள்ளி வச்ச மண்ணாட்டம்
அப்படியே கெடக்கானே
தள்ளி வச்ச கல்லாட்டம்
தடுமாறிக் கெடக்கானே"[13]

என்று மார்பில் அடித்துக் கொண்டு அழுகையில் பெண்களின் சோகம் வெளிப்படுகின்றது. இவ்வாறு ஆசிரியர் நாட்டுப்புறப் பாடல்களைப் பல நிலைகளில் பயன்படுத்தியுள்ளார்.

**முடிவுரை:**

ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் என்னென்ன தனித் தன்மைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தையும் ஒரு படைப்பாளர் பதிவு செய்யும்போதுதான் அந்தப் படைப்பு நிறைவடையும். அப்பணியைப் படைப்பாளர் முழுமையாகச் செய்துள்ளார் என்பதை அவர் புதினங்களை ஆராயும்போது அறிந்து கொள்ள முடிகிறது. இந்நாவலில் பழமொழிகள், நாட்டுப்புறப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவற்றின் அடிப்படையில் நாட்டுப்புறக் கூறுகளை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

**பார்வை நூல்கள்:**


1. தகனம் - ஆண்டாள் பிரியதர்ஷினி
2. தமிழில் வட்டார நாவல்கள் - சு.சண்முகசுந்தரம்
3. தொல்காப்பியம் - தொல்காப்பியர்



கட்டுரையாளர், ஒரத்தநாடு அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முனைவர் பட்ட ஆய்வாளர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடாக...

# வாழ்வில் வளம்பெற வள்ளுவம்

**இரா.பூரணலிங்கம்** இ.ஆ.ப. (ஒய்வு)

அறத்துப்பால், பொருட்பால் இரண்டிலுமிருந்து நூறு குறட்பாக்களைத் தெரிவு செய்து, அவற்றின் அரும் கருத்துக்களை அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும்வண்ணம், பல்வேறு சான்றுகளுடன் விவாதித்திருக்கிறார் ஆசிரியர். எந்தக் காலகட்டத்துக்கும் பொருந்தும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் திருவள்ளுவரின் கருத்துக்களை, வரலாற்றிலிருந்தும், தனது வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும், பல நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார். இந்த அணுகுமுறை திருக்குறளின் கருத்துக்களை அனைவரும் எளிதில் நினைவில் நிறுத்தும்வண்ணம் அமைந்துள்ளது.




₹ 400/-




24.03.2022 அன்று திருவாரூரில் புத்தகக்கண்காட்சியை திருவாரூர் மாவட்ட ஆட்சியர் ப.காயத்திரி கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இதில் முதன்மைக் கல்வி அலுவலர் ஆ.தியாகராஜன், வை.சிவபுண்ணியம் *Ex MLA* , கே.எஸ்.எஸ்.தியாகபாரி, டி.ஏ.முனவர்தின், பி.எஸ்.மாசிலாமணி, என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் எஸ்.குமார் மற்றும் கிளை மேலாளர் கருணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகம்

# அந்திமகாலத்தில் வெளிச்சக்கீற்றுகள்




அந்திமம் (நாவல்) | ப. சகதேவன்
(யாவரும் பதிப்பகம்) வெளியீடு
விலை: ரூ. 550

சுப்ரபாரதிமணியன்

கொங்கு பகுதியைச் சேர்ந்த நாவலாசிரியர் பல ஆண்டுகளாக பெங்களூரில் வசித்து வருகிறார் இந்த நாவலின் தலைப்பு சொல்வது போலவே அவர் அந்திமத்தில் இருப்பதாகக் கருதுகிறார். ஒரு கல்லூரியில் பேராசிரியராகக் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கிறார். இந்த ஓய்வு வாழ்க்கையை கூடுதல் போனஸாகவே கருதுகிறார்.

இந்தச் சூழலில் பெங்களூர் சார்ந்த அவரின் தனிப்பட்ட அனுபவங்களையும் அவர் சந்தித்த பல்வேறு தரப்பட்ட மனிதர்கள் பற்றியும் கொஞ்சம் குடும்பச் சூழ்நிலை பற்றியும் இந்த நாவலில் எழுதியிருக்கிறார். பெங்களூர் தமிழர்களின் வாழ்க்கைப் போக்கை இந்த நாவலின் பல பகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன. அதேபோல பெங்களூரில் வளர்ச்சியும் வளர்சிதை மாற்றங்களும் இணையாக வந்து செல்கின்றனர்.

சகதேவன் எழுத்துக்களில் வழக்கமாக இருக்கும் கிண்டல் துளியும் சற்றே நகைச்சுவையும் நாவல் முழுக்க நகைக்க வைக்கின்றன. இந்தக் கிண்டல் குடும்ப வாழ்க்கை சார்ந்த விஷயங்களில் அதிகமாக இருக்கிறது. சக மனிதர்கள் மீதான நேசத்தை கூட்டிக்கொண்டே போகிறது. ஒரு தனி மனித வாழ்க்கையின் விசாரமும் அவரின் குடும்பமும் இந்த நாவலில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

கொங்கு மண்ணில் இருந்து இடம்பெயர்ந்தது முதல் பெங்களூர் வாழ்க்கையில் சுமார் 40 ஆண்டுகள் கழிந்தது வரை பல்வேறு அனுபவங்களின் சித்தரிப்பு இந்த நாவல். தனிமனித ஆர்வலர்களால் நிறைந்த இந்த நாவல் பெங்களூர் வாழ் தமிழர்கள் பற்றிய வேறு வகையான சிக்கல்களையும் அடையாள நெருக்கடி நிலையையும் அதிகமாகப் பேசவில்லை. அந்நகரின் 50 ஆண்டுகாலம் சரித்திரத்தில் பல முக்கிய சம்பவங்கள் சில கோடுகளாக வரையப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை மெலிதான கோடுகளாக இருக்கின்றன. தனிமனித வாழ்க்கையின் அனுபவங்கள் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

நாவலாசிரியர் மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாடமியின் பரிசு பெற்றவர். ஒரே ஒரு நாவல் மொழிபெயர்ப்பு செய்தார். இது ஒரே ஒரு நாவல் முயற்சி ஆகக்கூடாது. அவரின் படைப்பிலக்கிய முயற்சிகள் தொடர வேண்டும். அபூர்வமாகத் தென்படும் கட்டுரைகள் மற்றும் அது சார்ந்த முயற்சிகள் தொடர வேண்டும். அவர் தொடர்ந்து இலக்கிய முயற்சிகளில் இருக்கிறார் என்பதுவும் ஆறுதலைத் தருகிறது.


●

கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 325




₹ 200




₹ 35




₹ 200

கட்டுரை

# பழையவுரையிலிருந்து புதியவுரை: உ.வே.சா. எனும் அரும்பதவுரைகாரர்



ம.லோகேஸ்வரன்

உ.வே.சாமிநாதையரைக் குறிப்புரைகாரர், அரும்பதவுரைகாரர், உரையாசிரியர் என்கிற மூன்று படிநிலைகளில் பிரித்தறியலாம். பதிப்பாசிரியரிலிருந்து உரையாசிரியராக மாற்றம் பெறக் காரணமாக இருந்த பின்னணியை அவர் பதிப்பித்த சங்கநூல்கள்வழி விளக்க முயல்கிறது இவ்வாய்வுரை.

**ஐங்குறுநூற்றின் பழையவுரை**

ஐங்குறுநூறு 1903-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டாலும் உரை வரலாறு என்பது 1938-ஆம் ஆண்டு ஔவை சு.துரைசாமிப்பிள்ளையிடமிருந்து தொடங்குகிறது. அதுவும் ஐங்குறுநூற்றின் மருதத்திணைக்கு மட்டுமானதாக அமைந்திருக்கிறது. இதன்பின்னர் 18 உரைகள் எழுந்துள்ளன. உ.வே.சாமிநாதையர் தாம் பதிப்பித்த இரண்டு பதிப்புகளிலும் (1903,1920) பழையவுரை ஒன்றை இணைத்துப் பதிப்பித்துள்ளார். இப்பழையவுரையானது ஆழ்வார் திருநகரி ஸ்ரீ தே.லஷ்மண கவிராயர் கொடுத்த கையெழுத்துப் பிரதியில் இடம்பெற்றுள்ள உரையாக உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகின்றார். இவ்வுரையின் இயல்பு குறித்து உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுவதைக் (1903:5) கீழ்வருமாறு பகுத்தளிக்கலாம்.

- இவ்வுரை, பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று.
- பெரும்பாலும் உள்ளுறை, இறைச்சியை விளக்குகின்றது.
- சிலவிடங்களில் திரிசொற்களின் பொருளைப் புலப்படுத்துகிறது.
- சிறுபான்மையாக இலக்கணக் குறிப்பை அளிக்கின்றது.
- சொல்முடிபு, பொருள்முடிபு கூறுகின்றது.

இத்தகைய இயல்புகளைக் குறிக்கின்ற உ.வே. சாமிநாதையர் மூலபாடத்தை ஒப்பிட்டுப் பார்த்தலில் பழையவுரையையும் கவனத்தில் கொண்டுள்ளார். இதனை ‘இந்நூற் பழையவுரையாசிரியர் கொண்ட பாடம் வேறாகவும் காணப்பட்டன’ (உ.வே.சா., 1903:5) என்று குறிப்பிடுவதன்வழி அறிந்துகொள்ளலாம். ஆனால், எந்தப் பாடம் பழையவுரைகாரர் கொண்ட பாடம் என்பதை உட்பகுதியில் உ.வே.சாமிநாதையர் குறிக்கவில்லை. பழையவுரையை மூலபாடத்துடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் ஓரிடத்தில் சினை சீக்கும் (ஐங்.20)

என்பதற்கு மாற்றாக சினைச்சேக்கும் எனும் பாடம் இருப்பதைக் காணவியலுகின்றது.

பழையவுரை உள்ள பாடல்கள் மொத்தம் 196 ஆகும். இவற்றுள் வேழப்பத்து, வெள்ளாங்குருகுப்பத்து, சிறுவெண்காக்கைப்பத்து, கேழற்பத்து, குரக்குப்பத்து ஆகிய பத்துகளுக்கு விடுபாடின்றிப் பழையவுரை கிடைத்துள்ளது. 13 பத்துகளுக்கு முற்றிலும் உரை கிடைக்கப்பெறவில்லை. இவைதவிர சிற்சில பாடல்களுக்குப் பழையவுரை கிடைத்திருக்கிறது. இவற்றைக் காணும்பொழுது பழையவுரைகாரர் ஐங்குறுநூறு முழுமைக்கும் உரையெழுத முயன்றுள்ளாரா அல்லது தனது மனப்போக்கிற்கு ஏற்ப அங்கொன்றும் இங்கொன்றும் உரையெழுத முயன்றுள்ளாரா என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். இப்பழையவுரைகாரர் பின்பற்றியுள்ள எழுத்துரையானது வாசகனுக்கான நகர்த்தலாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக, புலமையறிவு பெற்றோருக்கான குறிப்பாக அமைந்திருக்கிறது. அந்தப் புலமையறிவு உடையோர் பிறிதொரு உரையாசிரியராக இருக்கலாம் அல்லது பிரதி பெயர்த்தெழுதுவோராக இருக்கலாம். இக்கருத்தைக் கீழ்வருமாறு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

- எந்தெந்தப் பாடல்களுக்கு குறிப்பளிக்க வேண்டும் என்பதை வாசிப்பினூடாகத் தன்னளவில் முடிவுசெய்து உரையெழுதுதல்.
- பழையவுரைகாரர் உள்ளுறை, இறைச்சி சுட்டுதல், பதவுரை, பொழிப்புரை அமைத்தல் என்று எந்தவொரு நோக்கத்தையும் நூல் முழுமைக்கும் பின்பற்றாமை.
- தனது வாசிப்பில் ஏற்பட்ட சிக்கல்களைக் களைவதாகவும் அடுத்தகட்ட வாசகர்களை சிக்கல்களிலிருந்து விடுவிப்பதாகவும் பழையவுரை காணப்படுதல்.

ஐங்குறுநூற்றுக்குப் பழையவுரைகாரரின் இத்தகைய எடுத்துரைப்பிலிருந்து உ.வே.சாமிநாதையர் எனும் அரும்பதவுரைகாரர் ஐங்குறுநூற்றிற்குத் தோன்றுவதன் தேவையைப் புரிந்துகொள்ளவியலும். இனிவரும் பகுதி அதனை விளக்க முயல்கிறது.

**உ.வே.சா. எனும் அரும்பதவுரைகாரர்**

1894-ஆம் ஆண்டு புறநானூற்றைப் பதிப்பிக்கும்பொழுது உ.வே.சா.விற்கு ஐங்குறுநூற்றின் பழையவுரை கிடைக்கவில்லை (1894:2). அதேபோன்று பரிபாடலுக்குக் கிடைத்திருக்கும் உரையைப் ‘பழையவுரை ஒன்றுள்ளது’ என்றுதான் குறிப்பிடுகிறார் (1894:4). பரிமேலழகர் உரை என்பதை அப்போது கண்டறியவில்லை. பத்துப்பாட்டை நச்சினார்க்கினியர் உரையுடனும் (1889), புறநானூற்றைப் பழையவுரையுடனும் (1894) பதிப்பித்ததன் வழியாகச் சங்க இலக்கிய வாசிப்பை உ.வே.சா. உள்வாங்கிக் கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி அக்காலக்கட்டத்தில் உ.வே.சா. பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் உரைபற்றிய சிந்தனைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன. அந்நூல்கள் வருமாறு, சீவகசிந்தாமணி - 1887, பத்துப்பாட்டு - 1889, சிலப்பதிகாரம் (அரும்பதவுரை) - 1892, புறநானூறு - 1894, புறப்பொருள் வெண்பாமாலை - 1895, மணிமேகலை - 1898. இத்தகைய பழைய நூல்களின் வாசிப்பு அனுபவமும் புராணங்கள், சிற்றிலக்கியங்கள் பற்றிய வாசிப்பு அனுபவமும் உ.வே.சாமிநாதையரைப் பதிப்பாசிரியரிலிருந்து உரையாசிரியராக மாற்றியிருக்கிறது. முதன்முதலில் மணிமேகலைக்கு உரையெழுதிப் பதிப்பித்திருந்தாலும் (1898) சீவகசிந்தாமணியைப் பதிப்பித்த காலம் முதலே உரையெழுதுகின்ற முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். தொன்மையான இலக்கியங்களைப் பதிப்பிப்பதில் உ.வே.சா. மிகுந்த சிரத்தை எடுத்துள்ளார். சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும் முன்னர் ஜைனர்களின் கருத்துகளையும் மணிமேகலையைப் பதிப்பிக்கும் பௌத்தர்களின் கருத்துகளையும் நன்கு அறிந்து குறிப்பெடுத்துக் கொண்டுள்ளார். இக்குறிப்புகள் அவரைக் குறிப்புரைகாரராக மாற்றியிருக்கிறது. இத்திறம் நச்சினார்க்கினியரின் உரைமரபைப் பின்பற்றியிருத்தலால் உருவாகியிருக்கலாம். நச்சினார்க்கினியரின் உரையினால் புதிய செய்திகள் பலவற்றை உணர்ந்துகொண்டாலும் அவர்தம் உரையில் பின்பற்றியிருந்த ‘மாட்டு’ உத்தியும் ‘என்றார் பிறரும்’ என்கிற நூற்பெயரற்ற சான்றுக்குறிப்புகளும் உ.வே.சா.வை வருத்தத்திற்குள்ளாக்கியுள்ளது. நச்சினார்க்கினியரிடம் இத்தகைய இயல்பு இருந்தாலும் உ.வே.சா. தனது உரைத்திறனுக்கான முன்னோடியாகக் கொள்வதற்கு அவரே காரணமாகியிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

அந்த மகோபகாரியின் அரிய உரைத்திறத்தின் பெருமையை நான் மறக்கவில்லை. சுருக்கமாக விஷயத்தை விளக்கி விட்டு எது நுணுக்கமான விஷயமோ அதற்கு அழகாகக் குறிப்பு எழுதுகிறார். அவர் எழுதும் பதசாரங்கள் மிக்க சுவையுடையன. அவர் அறிந்த நூல்களின் பரப்பு ஒரு பெருங்கடலென்றே சொல்ல வேண்டும். இவ்வளவு சிறப்புக்களுக்கிடையே முன் சொன்ன இரண்டு குறைபாடுகளும் மறைந்துவிடுகின்றன (என் சரித்திரம், 566).

என்று குறிப்பிடுகிறார். இக்காலக்கட்டத்தில் நச்சினார்க்கினியரால் உரையெழுதப்பட்ட மூன்று நூல்கள், சீவகசிந்தாமணி (1887), கலித்தொகை (சி.வை.தாமோதரம்பிள்ளை, 1887), பத்துப்பாட்டு (1889) வெளிவந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அவற்றுள் கலித்தொகையைத் தவிர்த்து ஏனைய இரண்டு நூல்களில் உள்ள நச்சினார்க்கினியர் உரையை உ.வே.சா. நன்கு உள்வாங்கிக் கொண்டிருந்தார் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. மேற்கண்ட கருத்துகளின் பின்னணியில்தான் உ.வே.சா. என்கிற ‘குறிப்புரைகாரர் (அ) அரும்பதவுரைகாரர்’ என்கிற அடையாளத்தை மீட்டெடுக்கவியலுகிறது.

உ.வே.சா. பதிப்பித்த நூல்கள் பலவற்றுள் பழையவுரைகள் இருப்பதால் அவ்வுரையிலிருந்து வேறுபடுத்திக்காட்ட குறிப்புரை, அரும்பதவுரை என்கிற உரை வகைமைகளைக் கையிலெடுக்கிறார். சிற்றிலக்கியங்களைப் பதிப்பித்த காலங்களிலிருந்து குறிப்பு எடுப்பதையும் அரும்பதங்களை அகரவரிசைப்படுத்திக் கொள்ளுதலையும் வாசிப்புப் பழக்கமாகக் கொண்டிருந்த உ.வே.சா.விற்குத் தொன்மையான நூல்களுக்குக் குறிப்புரை எழுதுதல் அல்லது அரும்பதவுரை எழுதுதல் என்பது இயல்பானதாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

மேலும், பழையவுரையுடன் கொண்டுள்ள தொடர்பு அவரது உரையாசிரியப் பங்களிப்பில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. உ.வே.சா. பதிப்பித்த எட்டுத்தொகை நூல்கள் ஐந்தனுள் நான்கு நூல்களுக்குப் பழையவுரை உள்ளது. புறநானூறு (பழையவுரை,1894), ஐங்குறுநூறு (பழையவுரை,1903), பதிற்றுப்பத்து(பழையவுரை,1904), பரிபாடல் (பரிமேலழகர் உரை,1918), குறுந்தொகை(உ.வே. சா.உரை,1937). பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை உள்ளது. உ.வே.சா. பதிப்பிக்காமல் விடுத்தவை, கலித்தொகை (சி.வை.தாமோதரம்பிள்ளை, 1887), நற்றிணை (பின்னத்தூர் அ.நாராயணசாமி, 1915), குறுந்தொகை (தி.சௌ.அரங்கநாதன், 1915), அகநானூறு (இராஜகோபாலையங்கார், 1920) என்பனவாகும். குறுந்தொகைக்கு மட்டும் பழையவுரை கிடைக்கவில்லை. அதற்கு உ.வே.சா. எழுதிய உரை மிக விரிவானதாகும்.

உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த சங்கத் தொகை நூல்களில் இத்தகைய பழைய உரை எதனையும் பெறாது அமைந்த நூல் குறுந்தொகை ஒன்றே. சங்க இலக்கியப் பதிப்பு வரிசையில் இறுதியாக அமையும் இந்நூலுக்கு மட்டுமே உ.வே.சா. அவர்கள் பதவுரை, விசேட உரை, மேற்கோள் விளக்கம், ஒப்புமைப் பகுதி ஆகியவற்றை வழங்கியுள்ளார். பிறவற்றிற்குப் குறிப்புரை மட்டுமே பொருந்துகின்றது (குளோறியா சுந்தரமதி,1984:34).

குறுந்தொகைக்கு உ.வே.சா. எழுதிய உரையானது பல்வேறு கருத்தியல்களைக் கொண்டமைகிறது. குறிப்புரை, அரும்பதவுரை என்கிற வட்டத்தில் ஆய்வுப்புலமை கொண்ட உ.வே. சா., குறுந்தொகையில்தான் உரை, ஆராய்ச்சி என்கிற பெருவெளியைக் கண்டடைகிறார். இவ்வுரை, உ.வே. சா. என்கிற பேராளுமையின் அறிவுமுதிர்ச்சியில் விளைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1937-ஆம் ஆண்டு குறுந்தொகைக்கு முன்னர் உரையாசிரியராகச் செயல்பட்டுள்ளாரா எனில், அதற்குச் சான்றுதான் மணிமேகலை.

மணிமேகலைக்கு உரைப்பிரதி எங்குத் தேடியும் கிடைக்காமையால் தமிழ் ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கிணங்க தாமே உரையெழுதி வெளியிடுகிறார் (மணிமேகலை,1898:7). ‘இந்நூலுக்கு அரும்பதவுரையென்ற ஏதொவொன்றை எழுதத் தொடங்கினேன்’ (மேலது,1898:7) என்கிறார். அரும்பதவுரையை எழுதுகையில் உ.வே.சா. பின்பற்றிய நெறிமுறைகள் மிக முக்கியமானவையாகும். அவற்றைக் கீழ்வருமாறு பகுத்தளிக்கலாம்.

- அரிய சொற்களுக்கு மட்டும் பொருள் அளித்தல்.
- மேற்கோள் விளக்கம் அளித்துப் பொருளைப் புலப்படச் செய்தல்.
- பொருள் விளங்காத இடங்களில் கேள்விக்குறியை(?) அமைத்துக் கொள்ளுதல்.
- பாடவேறுபாடுள்ள சொற்களில் இன்றியமையாதவற்றிற்குப் பொருள் அளித்தல்.
- பொருள் புலப்படுவதற்காக வடசொற்களைப் பெரும்பாலும் விரவுவித்தல்.
- சங்க மருவிய நூல்கள் கிடைக்காமையால் பிற்கால நூல்களிலிருந்து சான்றுகள் காட்டுதல்.

என்று அரும்பதவுரை எழுதுவதற்கு நேர்த்தியான திட்டமிடலை வகுத்துக் கொண்டுள்ளார் என்பதை அறியவியலுகிறது. குறிப்புரை, அரும்பதவுரை என்கிற அடையாளத்தை மிக நெடிய காலம்வரை பின்பற்றியுள்ளார் என்பதை ஏனைய சங்க இலக்கியப் பதிப்புகளின்வழிக் காணவியலுகின்றது.

‘கவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பயின்று என்று கம்பநாடரும் செல்லாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து’ எனப் பரஞ்சோதி முனிவரும் அருளிச்செய்த திருவாக்குகளுக்கு

இலக்காக விளங்குங் கவிகளினுடைய வரிசையிலே நிற்குந் தகுதியுள்ள பாட்டுக்களையுடைய இந்நூலுக்கு யானா அரும்பதவுரையெழுதுபவன்? இதுசெய்தற்குத் துணிந்து வந்த எனது தறுகண்மையைப் பொறுத்தருளும்படி இத்தமிழுலகத்தை மிகவும் வேண்டுகிறேன் (மணிமேகலை, 1898:8).

இதேபோன்று, சீவகசிந்தாமணி, பரிபாடல் ஆகியவற்றிற்குத் தாம் நூதனமாக எழுதிய பலவகைக் குறிப்புகளுடனும், மணிமேகலையை அரும்பதவுரையாகவும் பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களைப் பழையவுரையுடனும் குறுந்தொகையை முழுமையான உரையாகவும் பதிப்பிக்கிறார். இந்நூல்கள் இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு என்று விரிகையில் உ.வே. சா.வும் குறிப்புரைகாரர், அரும்பதவுரைகாரர், உரைகாரர் என்று தனித்த அடையாளம் பெற்றுவிடுகிறார். இதில் குறிப்பிடத்தக்கது யாதெனின் பதிப்பியலில் ஈடுபட்ட உ.வே.சாமிநாதையர் உரையாசிரியர் எனும் அடையாளத்தைப் பழையவுரைகளில் இருந்து தான் வளர்த்துக்கொள்கிறார். ஐங்குறுநூற்றைப் பதிப்பிக்கும் பொழுதே அதற்கு அரும்பதவுரை ஒன்றையும் உ.வே.சா.எழுதியுள்ளார். இந்நூலையும் (ஐங்குறுநூறு) இவ்வுரையையும் உற்றுநோக்கும் பொழுது உண்டாகிய அச்சத்தால் தாம் எழுதி வைத்திருந்த அரும்பதவுரையைப் பதிப்பிக்கவில்லை என்று குறிப்பிடுகின்றார் (ஐங்குறுநூறு, 1903:5). எனில், உ.வே.சா. உரைச்சிந்தனையுடன் தொடர்ந்து இயங்கியுள்ளார். ஆங்காங்கே வெளிப்படுத்தியும் தவிர்த்தும் வந்துள்ளார்.

முற்பகுதியில் விளக்கப்பட்ட ஐங்குறுநூற்றின் பழையவுரை, நச்சினார்க்கினியரின் உரை முதலான உரைத்தன்மைகளைத் தமது குறிப்புரையிலும் அரும்பதவுரையிலும் கையாண்டு, பின்னர்க் குறுந்தொகையில் நேர்த்தியான உரையாசிரியராக உ.வே.சாமிநாதையர் முழுமையடைகிறார்.

**துணைநின்றவை**


- *1903 ஐங்குறுநூறும் பழையவுரையும், 1903(மு.ப.), சாமிநாதையர், உ.வே.(ப.ஆ.), வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னை.*
- *1955 குறுந்தொகை, 1955 (மூ.ப.), சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.), கபீர் அச்சுக்கூடம், சென்னை.*
- *1887 சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 1887 (மு.ப.), சாமிநாதையர்*
- *உ.வே.(ப.ஆ.), திராவிடரத்நாகரம், கும்பகோணம்.*
- *1907 சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 1907 (இ.ப.), சாமிநாதையர்*
- *உ.வே.(ப.ஆ.), ப்ரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை.*
- *1889 பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 1889 (மு.ப.), சாமிநாதையர்*
- *உ.வே.(ப.ஆ.), திராவிடரத்நாகரம், கும்பகோணம்.*
- *1894 புறநானூறு மூலமும் உரையும், 1894 (மு.ப.), சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.), வெ.நா.ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை.*
- *1898 மணிமேகலை மூலமும் உரையும், 1898 (மு.ப.), சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.),*
- *வெ.நா.ஜூபிலி அச்சுக்கூடம், சென்னை.*

**பிற நூல்கள்**

- *என் சரித்திரம், சரவணன் ப.(ப.ஆ.), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2017.*
- *உ.வே.சாமிநாதையர் கடிதக் கருவூலம் (தொகுதி-1), வேங்கடாசலபதி ஆ.இரா. (ப.ஆ.),டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 2018.*
- *தாமோதரம், சரவணன் ப.(ப.ஆ.), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2017.*
- *டாக்டர் உ.வே.சா.சங்க இலக்கியப் பதிப்புகள், குளோறியா சுந்தரமதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.*


●


கட்டுரையாளர், சென்னை பட்டாபிராம் டி.ஆர்.பி.சி.சி.சி. இந்துக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்



**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

குறைந்த செலவு
அதிகபட்ச தரம்

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

# மாவட்ட ஆட்சியரைக் கவர்ந்த கிளை நூலகம்!




சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டில் உள்ள சிறிய கிராமம் நெற்குப்பை. இங்கு பிறந்த தமிழறிஞரும், பயண இலக்கிய முன்னோடியுமான 'உலகம் சுற்றிய தமிழர்' சோமலெ அவர்களின் பெயரில் திறம்பட செயல்பட்டு வருகிறது பொது நூலகத் துறையின் "சோமலெ நினைவு கிளை நூலகம்".

சமீபத்தில் இந்த நூலகத்திற்குச் சென்ற சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு. மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., "நெற்குப்பை நூலகம் சிவகங்கை மாவட்டத்தில் முன்மாதிரி நூலகமாக செயல்படுவதை நேரில் பார்த்தேன். நம் மாவட்டத்தின் மற்ற கிளை நூலகங்களும், பள்ளி நூலகங்களும், இந்த நூலகம் போன்று சேவை செய்ய வேண்டுமென்ற குறிக்கோளோடு செயல்பட வேண்டும்" என சிவகங்கை மாவட்ட கல்வியாளர்களுக்கான 'வாட்ஸ்அப்' குழுவில் பதிவு செய்து மாவட்டத்தின் தலைமை ஆசிரியர்கள், நூலகர்கள் மத்தியில் நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் 37 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற (அறிஞர் சோமலெ அவர்களின் மகன்) முனைவர் சோமலெ சோமசுந்தரம் அமெரிக்க நூலகங்களில் உள்ள பல நல்ல செயல்களை நெற்குப்பை நூலகர் துணையுடன் இங்கு அறிமுகப்படுத்தியுள்ளார். மாதந்தோறும் நூலகத்தை நன்கு பயன்படுத்தும் மாணவர்களுக்கு 'நல் மாணவ வாசகர்' பரிசாக இரு நூறு ரூபாய்களையும், நூல்களையும் நெற்குப்பையில் பிறந்த எழுத்தாளர் சேதுராமன் சாத்தப்பன் வழங்கி வருகிறார். நூலகத்தில் இலவசமாக கணினி பயன்படுத்தி பழகவும், சிறுவர்களுக்கான ஆங்கில நூல்களைப் படிக்கவும் மாலை நேரங்களிலும், வார இறுதியிலும், சுற்றியுள்ள குக்கிராமங்களிலிருந்து நடந்தும், மிதிவண்டிகளிலும், பேருந்துகளிலும் மாணவர்கள் வந்து பயனடைகின்றனர்.

“நூலகத்தின் தூய்மையும், தோற்றமும் அனைவரையும் ஒரே பார்வையில் கவர்ந்து விடுகிறது” என்கிறார் நெற்குப்பை சாத்தப்பா அரசு மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி மலர்விழி.

அமெரிக்காவில் பிறந்து வாழும் தமிழ் இளைஞர்களும் அவர்களின் பெற்றோர்களும் இணையம் வழியாக இந்த கிராம பிள்ளைகளுக்கு ஓவியம், பொது அறிவு போன்ற பல தலைப்புக்களில் வகுப்புகள் நடத்துகின்றனர். அருகே உள்ள மேலைச்சிவபுரியில் உள்ள கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு பயில தினமும் மாலையில் நூலகம் வருகின்றனர்.

மாணவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும் இந்த நூலகம் ஒரு தேன் கூடு போன்று. என்கிறார் இந்த வருடம் 'நல் வாசகர்' விருது பெற்ற திருமதி சரஸ்வதி.

"அசர வைக்கும் அரசு நூலகம்" என விகடன் குழுமம் தம் நூலகத்தைப் பற்றி எழுதியுள்ளதாக பெருமிதத்தோடு கூறுகிறார் நூலகர் திரு. கண்ணன். கோடை முகாம், நூலக வார விழா கலை நிகழ்ச்சிகள், மருத்துவம், பொது அறிவு, வணிகம் தொடர்பான வல்லுனர்களின் இணைய வழி கலந்துரையாடல்கள் என வாசகர்களுக்கு பல சேவைகளைச் செய்து வருகின்றது இந்த கிளை நூலகம். இந்த நூலகத்திற்கு தினமும் இருநூறு வாசகர்கள் வருவது அதன் புதுமையான மற்றும் வித்தியாசமான திட்டங்களுக்கு கிடைக்கின்ற பரிசாகும் என்கிறார் மாவட்ட நூலக அலுவலர் ஜான் சாமுவேல்.

தகவல் - **முனைவர் வி. அன்புமணி**
தலைவர், இந்தி மற்றும் இதர மொழிகள் துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு



நூல்மறுப்புரை

# தொல்லியல் துறைஞர்

ச.சுபாஷ் சந்திரபோஸ்

மொழியியல் அறிஞர், தொல்லியல் அறிஞர் என அந்தந்தத் துறைகளில் ஆளுமை பெற்றவர்களைக் குறிப்பிடுவார்கள். ஆகச்சிறந்த ஆளுமை பெற்றவராகக் கருதப்படும் ஒருவரைக் குறிக்கத் தொல்லியல் துறைஞர் எனக் குறிக்கப்பட்டிருந்தது. அறிநர் (புறம்.373:23) அறிஞர் (நற்.214:2) என்னும் பெயர்ச்சொற்கள் அறிந்திருப்பவர் என்னும் பொதுவான பொருளையே குறிக்கும்.

துறை என்னும் வடிவம் பெயராக இருப்பதால் அவ்வாறு வர வாய்ப்பில்லை. வழக்கில் இருக்கும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு சொல்லை உருவாக்குவதை ஒப்புமை ஆக்கம் *(Analogical Creation)* எனக் குறிப்பர். துறைஞர் என்னும் சொல்லை பேராசிரியர் தமிழண்ணல் பயன்படுத்துகின்றார்.

அந்தத்துறையில் துறை போகியவர், துறை சார்ந்தவர் என்று பொருள் கொள்ளலாம். தொல்லியல் துறை சார்ந்தவர் என்னும் பொருளில் தமிழண்ணல் பயன்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது. தொல்லியல் துறைஞர் அத்துறையில் பணிபுரியும் இயக்குநர் முதல் அலுவலக ஊழியர் வரை பலரையும் குறிக்கலாம். தொல்லியல் துறையின் இயக்குநராக இருந்த இரா. நாகசாமி அவர்களைத் தமிழண்ணல் தொல்லியல் அறிஞர் எனக் குறிப்பிடாமல் தொல்லியல் துறைஞர் எனக் குறிப்பிட்டதற்குக் காரணம் இருக்க வேண்டும்.

தமிழர்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப் போலத் தமிழகமோ, தமிழோ தொன்மையான வரலாற்றையோ, நாகரித்தையோ பெற்றிருக்கவில்லை; எங்கள் மூதாதையர் ஆரியப் பார்ப்பனர் போட்ட பிச்சை என்னும் தொனியில் சில நூல்களை இரா. நாகசாமி எழுதியுள்ளார். தமிழைப் பெற்றெடுத்தது வடமொழி தான் என ஓலமிடுவது காலங்காலமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சிந்துவெளி நாகரிகம் திராவிடர்-தமிழ் நாகரிகத்தோடு தொடர்புடையது என்பது வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்களால் நூற்றாண்டுக்கு முன்பே நிறுவப்பட்டுவிட்டது. அதை ஆரியரின் சரஸ்வதி நாகரிகம் என்கின்றார்கள். ஆரியர் கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் புகுவதற்கு முன்பே சிந்து வெளி நாகரிகம் அங்குச் செழித்திருந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள்.

தமிழுக்குத் தாய்மொழி வடமொழி என்று இரா.நாகசாமி போன்றோர் கூறுவது புதியதன்று;


தாங்களும் தமிழரே என்று கூறி இந்த மண்ணில் விளைந்தவற்றை உண்டு மோட்டுவளையைப் பார்ப்பவர்கள் காலங்காலமாக இருக்கத்தான் செய்கிறார்கள். உண்ட கடனுக்காகப் புகழ்ந்து பேச வேண்டாம்; நன்றிக்கடனாகப் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடாமல் இருந்தாலே போதும்.

தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி அண்மையில் இயற்கை எய்திவிட்டார். இறந்தவர்களைக் குறைத்துப் பேசக் கூடாது; ஆனால் அவர்களின் எச்சங்களைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. விட்டுச் சென்றுள்ளார்களே? திருக்குறளே வட மொழியின் நீதி நூல்களை மூலமாகக் கொண்டு பிறந்தது என்பார் இரா.நாகசாமி. வடமொழியில் எந்த நூலும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (திருக்.972) என்று கூறவில்லை. பகவத் கீதையை அருளிய கிருஷ்ணரே 'நால் வருணங்களை நானே படைத்தேன்' என்று கூறுகின்றார். பகவானே கூறும்போது வேறு சாட்சி வேண்டுமோ? ஒருக்கால் திருவள்ளுவர் கூறுவது இடைச்செருகலாக இருக்குமோ?

உலகப்பொதுமறையை அளித்த வள்ளுவப் பெருந்தகை, தக்கார் தகவிலர் என்பது அவரவர் / எச்சத்தாற் காணப்படும் (திருக்.114) எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். வடமொழியில் வந்துள்ள எல்லா வகை நூல்களையும் தமிழில் வந்துள்ள தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், அற இலக்கியம், காப்பியம் போன்றவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தக்கார் யார்? தகவிலார் யார்? என்பது புரியும்.

இவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி பரவலாகத் தெரிந்து விடக் கூடாது என்று The Mirror of Tamil and Sanskrit (2012) என்னும் தலைப்பில் ஆங்கில நூலை எழுதியுள்ளார். தம் விருப்பத்திற்குத் தமிழரையும் தமிழ்நாட்டையும் வெளுத்து வாங்கி இருக்கிறார். வடமொழியே தமிழுக்குத் தாய் மொழி என்று முன்னோர் நூலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு எழுதுகின்றார்.

பேராசிரியர் தமிழண்ணல் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமியின் பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும் (2013) என்னும் நூலை நூலுக்கு மறுப்பு நூலாக எழுதியுள்ளார். எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராயம் வெளியிட்டுள்ளது.




இயல்பாகத் தமிழ் உணர்வு மிக்கவர்களுக்கே இரா.நாகசாமியின் தமிழ்நாடு பற்றிய வெறுப்பான கருத்துகளைப் படித்தால் சினம் கொப்பளிக்கும். தமிழையே வாழ்க்கையாகக் கொண்ட தமிழ்க் கடல் மூதறிஞர் தமிழண்ணலுக்குச் சினம் பொங்குவதில் வியப்பில்லை.

இக்கட்டுரை, தொல்லியல் துறைஞர் இரா. நாகசாமியின் ஆங்கில நூலை மதிப்பிட எழுதப்படவில்லை. மூதறிஞர் தமிழண்ணலின் நூல் அந்நூலுக்கு ஆழமாக மறுப்புத் தெரிவிக்கின்றது. தொல்லியல் துறைஞர் (ப.22) எனக் கடுமையாகச் சாடுகின்றார்.

பேராசிரியரின் நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள மு.பொன்னவைக்கோ, இரா.நாகசாமி எப்படி எல்லாம் தமிழர், தமிழ்மீது நஞ்சைப்பாய்ச்சியுள்ளார் என்பதைப் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளார்.

1. தமிழ் தன் ஆற்றலால் செவ்வியல் மொழி ஆகவில்லை. சமற்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிடமிருந்து கடன் பெற்று வளர்ந்து செவ்வியல் மொழி எனப்படுகின்றது.
2. தொல்காப்பியம் இலக்கண நூலன்று; பரத முனிவரைப் பின்பற்றி எழுதப்பட்ட நடனப் பாடல்களுக்கான கருத்தமைந்த தொகுப்பு அது.
3. சிலப்பதிகாரம் வரலாற்றுக் காப்பியம் அன்று; அது முழுவதும் புனைந்து கட்டப்பட்ட ஒரு புனைகதை இலக்கியம் (It is not a historic ethic, but a creative work) அது முழுவதும் நாட்டியப் பாடல்களின் தொகுப்பு.
4. தமிழ் எழுத்துகள் பிராமி என்ற கல்வெட்டு எழுத்துகளைப் பார்த்து வடிவமைக்கப்பட்டன.
5. தமிழர் பாவும் பரத முனிவரின் 'யமகம்' என்ற மடக்கணியைக் கொண்டே வளர்ந்துள்ளது.
6. தமிழர்கள் வேதக் கடவுளையே வணங்கினர்
7. தமிழார்க்கு எனத் தனி வாழ்வு நெறி இல்லை. வடமொழி வேத நெறி மரபு வாழ்வையே பின்பற்றி வாழ்கின்றனர்.
8. தமிழின் கலை, இசை, நடனம், இலக்கியம் எல்லாம் கடன் பெற்றவையே.
9. காலந்தோறும் தமிழ், சமற்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளிலிருந்து கடன் பெற்று வளர்ந்தது. அதிலுள்ள ஐந்நிலம் என்பது உண்மையான நிலப்பாகுபாடன்று அது நாடகத்தின் சுவையை மிகுவிக்கப்போரும் பின்னணித்திரை போன்றது. தமிழ் அகம், புறம், பற்றிய பாடல்கள் அனைத்துமே நாட்டியமாடப் பின்னணியாகப் பாட எழுதப்பட்ட பாடல்களைப் போன்றனவே ஆகும். எதுவும் உண்மையான வாழ்வு நெறியினின்று கிளைத்தது அன்று.
10. பொதுவாக நாம் இன்று சிறப்புடன் போற்றும் தமிழ் சார்ந்த அனைத்தும் கற்பனைகளே. இவற்றை உண்மை என நம்பித் தமிழ் உயர்வு பற்றிப் புகழ்தல் எல்லாம் தவறு.

(தொல்லியல் துறைஞர், அணிந்துரை, பக்.6-7)

இரா.நாகசாமி ஒரு தொல்லியல் அறிஞராக நேர்மையுடன் எழுதவில்லை. தமிழண்ணல் குறிப்பது போலத் தொல்லியல் துறைஞராகத்தான் வெளிப்படுகின்றார். பிறமொழி சார்ந்து இயங்காமல் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றதே செம்மொழி. தனித்தியங்கும் தன்மை தமிழுக்கு இருப்பதை இராபார்ட் கால்டுவெல் **1856**இல் கூறி உள்ளார்.

மொழியை விளக்கும் தொல்காப்பியத்திற்கும் ஐந்நில மரபில் எழுதப்பட்ட சங்கப்பாடலுக்கும் நாட்டிய மரபை ஒப்பிடுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல உள்ளது. பழந்தமிழரின் ஐந்நிலப் பாகுபாடு உண்மையானது இல்லை என்றால் வடமொழியில் விளக்கப்படும் மேலுலகம், கீழுலகம் உண்மையானவையா? அவற்றை நினைத்துத் தூக்க மயக்கத்தில் தமிழுக்குத் எழுதியதாகத் தெரிகின்றது.

தொல்லியல் துறையின் முதல் இயக்குநராகிய இரா.நாகசாமி அகழாய்வுவழி நிறையச் சாதித்திருக்கலாம் என்று தொல்லியல் ஆய்வாளர் அமரநத் ராமகிருஷ்ணன் போன்றோர் கூறுகின்றார்கள். கட்டடக்கலைக் கண்காட்சி, திருட்டுப் போன சிலையைக் கண்டறிய உதவுதல் போன்ற பணிகளை மட்டுமே அதிகமாகச் செய்துள்ளார்.

இரா.நாகசாமி வாழ வழிகொடுத்த தொல்லியல் துறைக்கு உண்மையான பணி செய்திருக்கலாம். தமிழ் இலக்கணம், இலக்கியங்களை ஒழுங்காகப் படித்திருக்கலாம், காலமும் கடந்துவிட்டது. அவரும் தம் எச்சத்தை விட்டு மறைந்துவிட்டார்.

தமிழண்ணல் உலகறிந்த ஒரு தமிழ்ப் பேராசிரியர். இராம.பெரியகருப்பன் என்னும் இயற்பெயர் கொண்ட அவரிடம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்ற நூற்றுக் கணக்கானோரில் நானும் ஒருவன். அவருடைய ஆய்வு நூல்கள் அனைத்துமே பழந்தமிழரின் சிந்தனை, வாழ்வியல் போன்றவற்றை மீட்டுருவாக்கம் செய்யப் பெரிதும் பயன்படும்.

குறிஞ்சிப்பாட்டு **(1961)**, ஒப்பிலக்கிய அறிமுகம் **(1973)**, சங்கஇலக்கிய ஒப்பீடு: இலக்கியக் கொள்கைகள் **(1975)**, சங்க இலக்கிய ஒப்பீடு: இலக்கிய வகைகள் **(1978)**, தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்: இறைச்சி **(1986)**, உள்ளுறை **(1986)**, மெய்ப்பாடு **(1986)**, நற்றிணை மலர்கள் **(2009)**.

ஆரியப் பார்ப்பனரின் பரவலுக்குப் பிறகு மொழி, இலக்கியம் என எல்லாவற்றிலுமே கலப்பு நிகழ்ந்து விட்டது. இவற்றைக் கொண்டே எல்லாவற்றையும் ‘எங்காத்து’ என்று உரிமை கொண்டாடுகின்றார் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி. இவர் இவ்வாறு எழுதுவதைத் தொல்லியல் துறையின் இணை இயக்குநர் தி.சுப்பிரமணியன் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

தமிழ் நூல்களாகிய தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்றவை வட மொழியை அப்படையாகக் கொண்டவை என்று *Mirror of Tamil and Sanskrit* என்ற ஆங்கில நூலில் எழுதியுள்ளார். பரதரின் நாட்டிய சாத்திரத்திலிருந்து பெறப்பட்டவை இவ்விரண்டு நூல்களும் என்பது அவரது முடிவாகும் *Thirukural - An Abridgement of Sastras* என்பது அவரது இரண்டாம் நூல். இந்நூலில் திருக்குறள் சமக்கிருத நூல்களின் தொகுப்பு என்று கூறியுள்ளார்.

இவற்றுடன் இவருடைய மூன்றாம் நூலும் வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்நூலின் பெயர் *Tamil Nadu the land of Vedas* முதல் இரண்டு புத்தகங்களில் கீழ்க்கண்ட செய்திகளைப் பதிவு செய்துள்ளார்.

1. தமிழர்க்கு எழுத்து வரிவடிவம் கிடையாது; பிராமி எழுத்துக்கள் பிராமணர்களால் உருவாக்கப்பட்டவை.
2. தமிழ் இலக்கியங்கள் சமஸ்கிருத நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை.
3. வர்ணாசிரமக் கோட்பாடு என்ற சாதி அமைப்புமுறை சங்க இலக்கியங்களில் உள்ளது. அது பிராமணர்களால் கொண்டுவரப்பட்டது அல்ல.
4. அகத்தியர், இந்திரன் போன்ற வேதக் கடவுள்களைத் தமிழர்கள் வணங்கினார்கள்.
5. திருக்குறள் தர்ம சாஸ்திரங்களில் இருந்து எடுத்து எழுதப்பட்டது.

இவருடைய முழுமையான கருத்து தமிழர்களுக்கு நாகரிகம் என்பது இல்லை. இதைக் கற்றுக் கொடுத்தவர்கள் பிராமணர்கள். அவார்கள் இல்லை என்றால் தமிழர்கள் இனக்குழு மக்களாகவே இருந்திருப்பார்கள் என்று வாதிடுகின்றார். மூன்றாவது புத்தகம் இன்னும் வெளிவரவில்லை. மூன்றாவது புத்தகத்தில் தமிழ்க் கல்வெட்டு, கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை. ஓவியக்கலை ஆகியன சமற்கிருதத்திலிருந்து பெறப்பட்டவை என்றுஎழுதப் போகிறார். (சமூக விஞ்ஞானம், 16:6), 2018: 23-24).

இரா.நாகசாமி குறிப்பிடுவதில் உண்மை இல்லாமல் இல்லை; சங்ககாலத்தில் நுழைந்த ஆரிய கருத்துகள் போகப் போகச் செத்த விலங்கு நீரில் மொதித்துப் பெருப்பது போல ஆகிவிட்டன. கோயில், குடி இருப்புப் பகுதியில் தோண்டினால் சிலைகளும் கல்வெட்டுகளும் வேதகால நிலமாகவே காட்டுகின்றன. தி.சுப்பிரமணியன், சாதி என்ற அமைப்பு பிராமணர்கள் தமிழகத்திற்கு வந்த பிறகுதான் வந்தது (ப.27) என்கின்றார்.

காலங்காலமாகப் பழந்தமிழர் வாழ்ந்த பகுதிகளைத் தோண்டி அகழாய்வு செய்ய மறுக்கின்றார்கள். தரவுகளை எடுத்தாலும் ஆய்வு செய்ய மறுக்கின்றார்கள். பொருநை நதிக்கரையின் ஆதிச்சநல்லூர், வையைக்

கரையின் கீழடி போன்ற பகுதிகள், சோழநாட்டின் பூம்புகார் போன்ற தொன்மையான பகுதிகளில் இரா. நாகசாமி போன்றோர் பேசும் வேதகால நாகரிகத்திற்குச் சான்றாக ஒரு துரும்பு கூடக் கிடைக்கவில்லை. இன்னும் துல்லியமாகச் சொன்னால் ஒரு முடிஅளவு கூட சான்று கிடைக்கவில்லை. ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை மிரட்டிய கதைதான்.

எவ்வளவுதான் முற்போக்கு பேசினாலும் சாதி, மத, இன உணர்வுகள் ஒவ்வொருவரிடமும் ஒட்டி உறங்கிக் கொண்டிருக்கும். மகாகவி, உ.வே. சாமிநாதையர், பரிதிமாற்கலைஞர் போன்றோர் தமிழை வளர்க்கப் பாடுபட்டுள்ளார்கள். உயர்வு-தாழ்வு மேட்டிமை, தீட்டு போன்ற அழுக்கு மூட்டைகளை பலர் மனதிற்குள் சுமந்து கொண்டு தான் திரிகின்றார்கள். இருப்பினும் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி போன்ற சிலரே வாய்க் கொழுப்புச் சேலையில் வடிந்த கதையாக வெளியே சொல்லித் தங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்கிறார்கள். உண்மையைச் சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம்.

பதினோராம் நூற்றாண்டில் வடமொழி இலக்கண மரபைப் பின்பற்றிப் புத்தமித்திரனார் வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூலை எழுதியுள்ளார். இந்நூலுக்கு நூலாசிரியரின் மாணாக்கர் பெருந்தேவனார் என்பவர் உரை எழுதியுள்ளார். அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிற்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழும் பெறும் (வீரசோ.60,உரை).* வடமொழியில் இருந்து, தமிழிலும் இருந்தால் வடமொழியின் கொடை; வடமொழியில் இல்லாமல் தமிழில் மட்டும் இருப்பவற்றை என்ன செய்வது?

திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட் கால்டுவெல் *(திராவிட அல்லது.351)* திராவிட மொழிகளில் காணப்படும் ஆண், பெண், ஒன்றன்பால் போன்ற பாகுபாடு இம்மொழி பேசும் மக்களின் முற்போக்கான சிந்தனையைக் காட்டுவதாகப் புகழ்கின்றார். வெறும் புகழ்ச்சி இல்லை. வடமொழி போன்ற பெரும்பாலான உலகமொழிகளில் பால் பாகுபாடு உயர்திணை, அஃறிணை அடிப்படையில் இருக்காது. தமிழில் அவள், நங்கை, பெண், தாய், மகன், மனைவி, இல்லாள், கிழத்தி என எத்தனை பெயர்கள் இருந்தாலும் எல்லாமே பெண்பாலில் அடக்கப்படும். இப்படி ஒரு பண்பட்ட திணை-பால் பாகுபாட்டு அமைப்புடைய தமிழுக்குச் சமக்கிருதம் எப்படித் தாய்மொழியாக இருக்க முடியும்? வடமொழியில் பெண்ணைக் குறிக்க வரும் தாரம் *(da:ra)* ஆண்பலர்பால், பாரியை *(bha:rya)* பெண் பால், களத்திரம் *(kalatra)* ஆண்பலர்பால், பால்பாகுபாடு போன்று பொருளதிகாரத்தில் விளக்கப்படும் முதல், கரு உரிப் பொருள் பாகுபாடெல்லாம் வடமொழியில் இல்லாதவை. இவற்றுக்கெல்லாம் என்ன பதில் கூறுவார்கள்?

பெருந்தேவனாரின் வீரசோழிய உரைக்கு குறிப்புரை எழுதும் பண்டித வித்துவான் தி.வே.கோபாலையரின் கருத்து இவண் குறிப்பிடத் தக்கது. இவ்வுரையாசிரியர் காலத்தில் எல்லா மொழிகளுக்கும் வடமொழியே அடிப்படை என்ற கருத்து நிலவியது. இக்கருத்து 17ஆம் நூற்றாண்டளவும் தொடர்ந்து இருந்து வந்தமை இலக்கணக் கொத்து, பிரயோகவிவேகம் முதலிய நூல்களால் புலப்படும் (வீரசோ.60, குறிப்புரை).

17ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆரியர்களின் மேட்டிமைத் தன்மை எடுபடவில்லை. மொழி சார்ந்த கருத்துகள் மட்டுமல்லாமல் சமுதாயம் சார்ந்த அவர்களின் மூட நம்பிக்கை, பிற்போக்குத்தனம், மதம் போன்றவை கேள்விக் கணைக்கு ஆட்பட்டன. அந்நியரின் ஆட்சி முக்கியமான காரணம். கல்வியைப் பரவலாக்கியதால் விழிப்புணர்வு ஏற்பட்டது.

மாமேதை கார்ல் மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாடு ஆதிக்க இருள் சூழ்ந்த உலகிற்குப் புரட்சிகர ஒளியைப் பாய்ச்சியது. சிவப்பு, கருப்பு, நீல நிறங்களைக் கண்டால் மிரண்டு போகின்றார்கள். என்னென்னவோ செய்கிறார்கள்.

தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி தமிழ், தமிழர் மீது சேற்றை வாரி இறைப்பதற்குப் பேராசிரியர் தமிழண்ணல் தக்க பதிலடி கொடுக்கின்றார். கருத்தோடு கருத்து மோத வேண்டும்; அதைவிட்டு விட்டு முற்போக்குச் சிந்தனையாளர்களின் சிலையைத் தகர்ப்பது, காவி பூசுவது, செருப்புமாலை போடுவது எல்லாம் எந்த வகையான பண்பாடு, நாகரிகம் என்றே தெரியவில்லை.

தி.வே.கோபாலையர் குறிப்பிடும் இலக்கணக் கொத்து என்னும் சொல்லிலக்கண நூலை எழுதிய சாமிநாத தேசிகார் தொல்லியல் துறைஞர் இரா. நாகசாமியைவிட எந்த விதத்திலும் குறைந்தவர் இல்லை. இவருக்கு முன்னோடி அவரே எனக் கூறலாம்.

அடிக்கடி ஏற்படும் ஐயம் இதுதான். இந்தத் தமிழ் மண்ணில் ஊறிய நீரைக் குடித்துக்கொண்டு, விளைந்ததை உண்டுகொண்டு தமிழரின் உழைப்பை உண்ணி போலக் காலங்காலமாக உறிஞ்சிக்கொண்டு எப்படித் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் எதிராக எழுத முடிகின்றது என்பது விளங்கவே இல்லை.

*Mirror of Tamil and Sanskrit* என்னும் ஆங்கில நூலைப் போன்று தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி எழுதிய செந்தமிழ் நாடும் பண்பும் (2021) என்னும் நூலும் வெளிவந்துள்ளது. கிழக்குப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. படித்துப் பார்த்தபோது

தமிழண்ணல், தி.சுப்பிரமணியன் போன்றோருக்கு வாய்ப்புக் கிடைத்ததுபோல நமக்கும் கிடைத்துள்ளது என்னும் எண்ணம் எழுந்தது.

இந்நூலில் முப்பத்தாறு கட்டுரைகள் உள்ளன. தினமலரில் தொடர்ந்து வந்தவை என்பதை அணிந்துரை வழி அறிய முடிகின்றது.

இனி தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமி செந்தமிழ் நாடும் பண்பும் பற்றி என்ன கூறுகின்றார் எனக் காணலாம்.

நூலின் அறிமுக உரையில் தொல்லியல் துறைஞர் அனைவரும் ஒப்புக் கொள்ளும் வகையில் ஒரு கருத்தைப் பின்வருமாறு செய்துள்ளார். *ஈராயிரம் ஆண்டுகளாக, தமிழகத்தை அற நெறிப்படுத்தும் நூலக மனுவின் தர்மசாத்திரம் இருந்து வந்திருப்பதைப் பெரிய புராணத்தின் வாயிலாகவும் திருவாரூரில் நீதிகேட்ட பசுவுக்குக் கோயில் எடுத்த இரண்டாம் குலோத்துங்க சோழனையும் மனுநெறி தழைத் தோங்க அவார்கள் ஆண்ட சீர்மையைச் சோழார் காலக் கல்வெட்டுகள் வாயிலாகவும் விவரித்துள்ளேன் (செந்தமிழ்.ப.13).*

நால் வருணத்தை விரும்பும் பார்ப்பனார் சொற்படி மன்னன் நடக்க வேண்டும்; அவ்வாறு நடந்தால் மக்களும் அவன் வழியில் நடப்பார்கள்

**ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்**
**ஈதல் ஏற்றல் என்று ஆறு மொழிந்து ஒழுகும்**
**அறம் புரி அந்தணார் வழிமொழிந்து ஒழுகி**
**ஞாலம் நின்வழி ஒழுகஞ். (பதிற். 24:6–9)**

மன்னர்களைப் பிடித்தால் போதும் என்பதைப் பார்ப்பனர்கள் நன்றாக உணார்ந்துள்ளார்கள். முடியாட்சிக் காலம் தொடங்கியபோதே, *மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம்.186:2)* என அதிகாரம் கட்டமைக்கப்பட்டுவிட்டது. வடக்கிருந்து தமிழகத்திற்குள் வந்த ஆரியப்பார்ப்பனர் செய்த செயல்களைத் தி.சுப்பிரமணியன் இரா.நாகசாமிக்கு நேர்மாறாக விளக்குகின்றார். *பூர்வீகக் குடிகளிடமிருந்த வாழ்க்கை முறைகளையும் பௌத்தம், சமணம் போன்ற மதங்களில் இருந்த கோட்பாடுகளையும் தங்களுடைய கோட்பாடுகளாக மாற்றிக் கொண்டு சனாதானத்தை நிலை நாட்டினார்கள் என்பது உண்மை. இதற்கு இங்கு ஆட்சி செய்த அரசார்களையே ஒப்புக்கொள்ளச் செய்தது அரசனிடம் நாடு அதிகார ஆதிக்கம் இருந்தபோதும் அரசனுக்கும் மேலாக இராஜகுருவாக அதிகாரம் செய்தது சனாதனத்தை வளார்க்க அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. (சமூக விஞ்ஞானம் 16:61, 2018, ப.28).*

“ *இந்தத் தமிழ் மண்ணில் ஊறிய நீரைக் குடித்துக் கொண்டு, விளைந்ததை உண்டு கொண்டு தமிழரின் உழைப்பை உண்ணி போலக் காலங்காலமாக உறிஞ்சிக் கொண்டு எப்படித் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் எதிராக எழுத முடிகின்றது என்பது விளங்கவே இல்லை.* ”




மேலுள்ள பாடல் அடிகளும் தி. சுப்பிரமணியன் குறிப்பதும் உண்மையே! சங்க காலம் தொட்டுத் தமிழகத்தில் இன்று வரை மனுதர்ம ஆட்சிதான் நடைபெறுகின்றது. நேரடியாக நாட்டை ஆள வேண்டியதில்லை; ஆள்பவரைக் கையில் வைத்துக் கொண்டால் போதும். வடக்கிருந்து பரவிய ஆரியப் பார்ப்பனர், மூவேந்தர், குறுநில மன்னர்கள் என அனைவரையும் தங்கள் ஆணைக்கு அடிபணிபவார்களாக வைத்துக் கொண்டார்கள். தங்களுக்கு மட்டுமல்லாமல் தங்களுடன் வந்த பசுக்களுக்கும் பாதுகாப்பு தேடிக் கொண்டார்கள் (புறம்.9).

பசுக்களை மேய்ப்பவர்கள் என்னும் நிலைமாறி மேய்ப்பிப்பவர் ஆகிவிட்டார்கள். மேய்ப்பிப்பவர் என்றால் பண்ணை ஆட்களை வைத்து மேய்ப்பது தான். மன்னர்களிடம் நிலத்தை தானமாக வாங்கி நேரடியாக நிலத்தில் இறங்கித் தாமே உழுவாமல் பண்ணை ஆட்களை வைத்து உழுவிப்போர் ஆனது போலத்தான் உழுவித்த அந்தணன் (இல.கொத்.71,விளக்கவுரை).

பல்லவர் காலத்திற்குப் பிறகு கோயில்கள், பார்ப்பனர்க்கு நிலம் கொடுப்பது பெருவழக்காக இருந்துள்ளது. சங்க காலத்திலேயே அந்தணக் கபிலர் நாடுகளைத் தானமாகப் பெற்றுள்ளார். *பாடிப் பெற்ற பரிசில்: சிறுபுறம் என நூறாயிரம் காணம் கொடுத்து, ‘நன்றா’ என்னும் குன்று ஏறி நின்று, தன் கண்ணிற் கண்ட நாடு எல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ (பதிற்: ஏழாம் பத்து பதிகம்).*

சங்க காலம் பொற்காலம் எனப் பெருமிதம் கொள்வதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. அதே வேளையில் ஒரு சேரமன்னர் ஒரு பார்ப்பனரையும் அவரின் மனைவியையும் வேள்வி செய்து சொர்க்கத்திற்கு அனுப்பி உள்ளார். பல முறை தேர்ச்சி பெறாமல் ஒரே வகுப்பில் படித்து மறுபடியும் மறுபடியும் தேர்வு எழுதி மேல் வகுப்புக்குப் போகின்றவனை கஜினி முகமதுக்கு ஒப்பிடுவார்கள். அவ்வாறு ஒருமுறை அன்று ஒன்பது

முறை வேள்வி செய்து அவர்களைச் சொர்க்கத்திற்கு ஏற்றிவிட முடியாமல் தோற்றுப் பத்தாவது முறையாகச் செய்து அனுப்பி வைத்தார்களாம். காலங்காலமாக நம் மன்னர்கள் நூலாசிரியர் இரா.நாகசாமி குறிப்பது போன்று மனுதர்ம ஆட்சி செய்ததற்கு நல்ல சான்று.

பல் யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேர மன்னனின் புகழ்பாடும் பாலைக் கௌதமனாரின் மூன்றாம் பத்துக்கான பதிகத்தில் பார்ப்பன இணையரைச் சுவார்க்கத்திற்கு பத்துமுறை வேள்வி செய்து ஏற்றிவிட்ட செய்தி பதிவாகி உள்ளது. பாடிப் பெற்ற பரிசில் 'நீர் வேண்டியது கொண்மின்' என யானும் என் பார்ப்பினியும் சுவார்க்கம் புகல் வேண்டும் 'என பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு, ஒன்பது பெரு வேள்வி வேட்பிக்க, பத்தாம் பெரு வேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பினியையும் காணராயினார் (பதிற். மூன்றாம் பத்து பதிகம்).

பழந்தமிழகத்தில் ஆரியமயம் வளர்ந்தது உண்மையே. எல்லாவற்றிலும் ஊடுருவல் ஏற்பட்டது. தாக்கத்தை அலசி ஊற்றி விட்டுப் பார்த்தால் தமிழர் நாகரிகம், பண்பாடு தனியாகத் தெரியும். தமிழர் ஆரியத்தில் இருந்து தான் எல்லாவற்றையும் பெற்றார்கள் என இரா.நாகசாமி கூறுவதற்குத் தமிழண்ணலின் பதிவு கடுமையாகவே இருக்கிறது. என்ன செய்வது நெருப்பைத் தின்றால் கருப்பாகத் தான் வரும். கொள்ளை கொண்டவன் தான் கொள்ளையடித்ததைத் தன்னுடையது என்பது போன்றது ஆரியர் செயல் (தொல்லியல் துறைஞர்.ப.22).

இரா.நாகசாமியின் The; Mirror of Tamil and Sanskrit (2012) என்னும் நூலுக்குத் தமிழண்ணல் ஒரு நூல் எழுதியதைப் போன்று செந்தமிழ் நாடும் பண்பும் (2021) என்னும் நூலுக்கும் ஒரு தனி நூலே எழுதலாம். அவ்வளவு வரலாற்றுத் திரிபுகள் நூலுள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

பொறுப்போடு எழுத வேண்டிய நாகசாமி போன்றோரே இப்படி எழுதினால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவனிடம் யாரும் பெரிய அளவில் மாறுபடுவதில்லை. ஐராவதம் மகாதேவன் குகைக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளைத் தமிழ்-பிராமி எழுத்து என்றார். அசோகரின் கல்வெட்டில் காணப்படும் பிராமி எழுத்தே இந்தியாவில் கிடைத்த முதல் எழுத்து எனப் பரவலாகக் கூறப்பட்டது. அக்கல்வெட்டின் காலமும் கி.மு 3ஆம் நூற்றாண்டு என்பார். இது ஒரு காலம் வரை உண்மை. கீழடியில் கிடைத்துள்ள பானையில் பதியப்பட்டுள்ள எழுத்தின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு என அறிவியல் ஆய்வு வழி நிறுவி உள்ளனர். தமிழ் எழுத்து வேறு; பிராமி எழுத்து வேறு. முந்நூறு ஆண்டுகள் தமிழ் எழுத்துகள் முந்தையவை என்பதால் பிராமி எழுத்துக்குத் தாய் எழுத்து என்று சான்று இல்லாமல் கூற முடியாது.

புதைபொருள், கல்வெட்டுத் தரவுகள் அடிப்படையான அகச்சான்றுகள், திரித்துச் சொன்னால் வருங்கால ஆய்வாளர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும்; செத்துவிட்டோம் நமக்கென்ன என்று பொறுப்பற்ற முறையில் எழுதிவிட்டுப் போகக் கூடாது. மனிதன் எழுதிக் கடவுள் மேல் பழியைப் போட்டதால், கிருஷ்ணர் கூறினாலும் குற்றம் குற்றமே என்கிறார்கள். ஒருவன் இரந்துண்டு தான் வாழ வேண்டும் என்று கடவுள் படைத்திருந்தால் அவன் கெட்டு அழியட்டும் (திருக்.1062) என்பதே தமிழர் அறக்கோட்பாடாகும். நால் வருணத்தை நான்தான் படைத்தேன் என்னும் கடவுளை மட்டும் ஏற்றுக் கொள்வார்களா?

**திராவிடம்**

திராவிடம் என்னும் கருத்தாக்கத்தைத் தமிழ்த் தேசியம் பேசுவோர் ஏற்றுக் கொள்ளாமை போன்று ஆரியச் சார்புடையோரும் ஏற்றுக் கொள்வதில்லை. திராவிடம் பேசுவது இந்திய ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்கிறார்கள். வேற்றுமையில் ஒற்றுமை பேசப்பட்டாலும் வேற்றுமை என்பது தெளிவாகவே வெளிப்படுகின்றது. ஆரிய மயத்தால் மொழி, வாழ்க்கை என எல்லாம் சிக்கல் விழுந்த நூலாகிவிட்டன. இரா.நாகசாமி பின்வருமாறு எழுதுகின்றார்.

இக்காலத்தில் திராவிட மொழி, திராவிடப் பண்பு என்பது அந்த எல்லைப் பகுதிகளிலும் இல்லை. அதனால் இப்போதுள்ள கருத்தான திராவிட மொழி என்பதோ திராவிடப் பண்பு என்பதோ ஒன்றும் இல்லை.

எனவே மலையாளம், கருநாடகம், தெலுங்கு, தமிழ் மொழிகளைத் திராவிட மொழிகள் என்பது பகுத்தறிவின்பால் பட வழியில்லை. இவ்வேறுபாட்டால்தான் இந்நான்கு மொழி பேசுவோரி டையேயும் உணர்வுப் பூர்வமான ஒற்றுமையைக் காண முடியவில்லை. திராவிடம் என்று சொல்வதால் தமிழின் பெருமை மங்கி விட்டது. (செந்தமிழ், ப.21).

இரா.நாகசாமி குறிப்பவை எல்லாம் பொய்யும் மெய்யும் கலந்தவை. ஆனால் வரலாறு ஒன்று இருக்கின்றது. தமிழ், திராவிடம் என்பவற்றில் கருத்து வேறுபாடு இருந்தாலும் இந்த மண்ணிற்கு உரியவை என்பவற்றுக்கு மொழியியல், தொல்லியல், வரலாறு என்பவற்றில் சான்றுகள் உள்ளன. ஆனால் இரா. நாகசாமி பெருமிதமாகக் கூறும் சமக்கிருதத்தின் குடும்ப உறவு இந்தோ ஐரோப்பியக் குடும்பத்துடன் தொடர்புடையது. இங்கு அதற்கு உரிமை கொண்டாடும் தொன்மை வரலாறு இல்லை; அப்படிப்பட்ட சமக்கிருதம் எப்படித் தமிழுக்குத் தாய்மொழியாக இருக்க முடியும்?

தமிழ் மண்ணில் வாழ்ந்து கொண்டு தமிழர் என்று சொல்லிக் கொண்டு இவரே தமிழையும் தமிழரையும்

முடிந்த அளவு இழிவுபடுத்தி எழுதுகின்றார். மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழி பேசுவோர் தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்க மறுப்பவர் என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும் திராவிட மொழிகளைப் பேசுவோர் ஒரு குலைக்காய்கள்!

பழந்தமிழில் அக வாழ்க்கை களவு, கற்பு என இரண்டாக அமையும். தொல்காப்பியர் (தொ.பொ.92) ஆரியரின் எட்டு வகை மணமுறைகளில் ஒன்றோடு தொடர்புபடுத்துகின்றார். அது கந்தருவ மணம் எனப்படும். மனுநீதியிலும் குறிக்கப்பட்டுள்ளதாக இரா. நாகசாமி குறிப்பிடுகின்றார். களவு என்பது காந்தர்வ மணம் என்று கண்டோம் (செந்தமிழ்.பக்.26-27).

இவர் மட்டுமில்லை, பண்டித வித்துவான் தி.வே.கோபாலையர் உட்படச் சிலர் தொல்காப்பியத்திற்கு வேறு உரைகள் இருந்தாலும் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியார் உரையையே சான்றாகக் காட்டுவார். நச்சினார்க்கினியர் தான் தொல்காப்பியரைத் திரணதூமாக்கினியர் என்னும் அவரின் தந்தையை யமதக்கினியார் என்றும் குறிப்பிடுகின்றார். (தொ.எ. சிறப்புப் பாயிரம்).

மாயுரம் - மயிலாடுதுறை, வேதாரணியம் - திருமறைக்காடு போலக் கொள்வதா? அல்லது தமிழ் மொழிக்குத் தாய் மொழி எனப் போகிற போக்கில் கொளுத்திப் போட்டு விட்டுப் போனதைப் போலக் கொள்வதா? இவ்வாறு தமிழ், தமிழர் வாழ்க்கை போன்றவற்றை குறைத்து மதிப்பிட முற்காலத்தில் இருந்தே இரா.நாகசாமி போன்றோருக்கு நிறைய வாத்தியார்கள் தோன்றி உள்ளார்கள். இவற்றை எல்லாம் படித்தார்களா? அல்லது இரத்தத்தில் ஊறி மூளைவழி வெளிப்பட்டவையா? தெரியவில்லை.

களவும் கந்தருவமும் ஒன்று போலக் கருதப்பட்டாலும் பலவற்றுக்கு மாறுபட்ட கருத்தை அவர்கள் புகழும் நச்சினார்க்கினியரே இவற்றுக்குத் தெளிவான விளக்கம் அளிக்கின்றார். கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றதற்குத் 'துறைமை' என்றார் (தொ.பொ.92, உரை).

இந்த விளக்கத்தின் வழி ஒன்று போலவே கருதப்படும் ஆரியரின் காந்தருவ மணத்திற்கும் தமிழரின் களவு மணத்திற்கும் உள்ள ஒரு மாறுபாட்டை உணரலாம். கந்தருவகுமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இன்பம் நுகார்வர்; ஆனால் அவர்கள் சோர்ந்து இல்லற வாழ்க்கை - கற்பு வாழ்க்கை வாழ வேண்டும் என வடவர் மரபு வரையறுக்கவில்லை. சேர்த்தல் போன்று பிரிந்து அவரவர் வழியில் போய் விடுவார்கள்.

தமிழர் அக வாழ்க்கை மரபில் முதலில் தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கை வாழ்ந்து தொடார்ந்து கற்புவாழ்க்கை எனப்படும் இல்லற வாழ்க்கையை மேற்கொள்வர். இவற்றை எல்லாம் அறியாமல் தமிழரின் களவு வாழ்க்கைக்கு ஆரியரின் கந்தருவ மணமே மூலம் என்பது போலத் தொல்லியல் நிறைஞர் இரா. நாகசாமி எழுதுகின்றார்.

**பழுந்தமிழர் மணமுறை**

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட (சிலப்.1:52) என்னும் திருமண முறை சங்க காலத்தில் இல்லை. ஆரியரின் ஆதிக்கம் வீரியம் பெற்றபிறகே எங்கும் பரவுகிறது. திணைக் குழு மக்களின் திருமணம் மகளிரைக் கொண்டு நல்ல நாள் பார்த்து விருந்துடன் எளியமுறையில் நடந்துள்ளது. 86, 136 ஆம் அகநூனூற்றுப் பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. வைதிக முறைப்படியான திருமணம் என்பதற்கு எந்தக் குறிப்பும் இல்லை. நச்சினார்க்கினியரைத் துணைக்கு இழுத்துக் கொண்டு அகநானூற்றுப் பாடல்கள் இரண்டுக்கும் பின்வருமாறு விளக்கம் கொடுக்கின்றார். தமிழர் தம் மண விழாவில் வேத முறைப்படி சடங்குகள் செய்யப்பட்டன என்பது இப்பாடல்களால் உறுதி செய்யப்படுகின்றது (செந்தமிழ், ப.35).

**செஞ்சோற்றுக் கடன்**

தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமியின் எழுத்துகள் ஆரியத்தின் மேன்மையைப் பறை சாற்றுபவையாக இருந்தாலும் ஆங்காங்கே ஊறுகாய் போலத் தம் செஞ்சோற்றுக் கடனையும் தீர்த்துள்ளார். தமிழ் மக்கள் சிறந்த பண்பு மிக்கோர் ஆவார். அவார்களது கருத்துகள் எல்லாம் உலகளாவியதாகவே இருக்கும். அதனால் தான் அவர்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றனர் (செந்தமிழ்.ப.130). சங்கத் தமிழரை நினைத்துத்தான் இவ்வாறு பாராட்டியுள்ளார். அவர் உண்மைக்கு மாறாகப் பல அவதூறுகளைப் பரப்பினாலும் இதற்காக நன்றி கூற வேண்டும்.

ஒன்றிய அரசு இரா.நாகசாமி அவர்களின் பணிகளைப் பாராட்டி பத்மபூசன் (2018) என்னும் உயரிய விருதை வழங்கிப் பெருமைப் படுத்தி உள்ளது. ஒட்டு மொத்தத் தமிழக முன்னேற்றமே ஆரியத்தால் ஏற்பட்டது என்னும் அவர் கருதுகோளுக்காகக் கொடுக்கப்பட்டது என்று கருதக்கூடாது. அவர் மறைந்தபோது (23.1.22) தமிழக அரசு இறுதி மரியாதை அளிக்க வேண்டும் என்று அரிதாக எழுந்த கோரிக்கையை யாரும் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. தொல்லியல் துறையில் அவரின் செயல்பாடுதான் காரணமாக இருக்கும்.

*Mirror of Tamil and Sanskrit (2012)*, செந்தமிழ் நாடும் பண்பும் (2021) என்னும் தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமியின் நூல்களை அனைவரும் படிக்க வேண்டும். அப்போதுதான் எதனுடன் முரண்பட வேண்டும் என்பது புரியும். தமிழ் - திராவிடமா? திராவிடம் -ஆரியமா?

●

கட்டுரையாளர், ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
இலக்கணவியல் ஆய்வாளர், எழுத்தாளர்.